ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—சு. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவவரு பங்குனிமீ" உ (15-3-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—உ.

## தோத்திரம்

போனகம் இருக்கின்ற சாலையிடை வேண்டுவ புசித்தற் கிருக்கு மதுபோல்
புருஷர்பெறு தர்மாதி வேதமுடன் ஆகமம் புகலுமதி னலாம் பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சியனு மானமுதல் நானு விதங்கள் தேர்ந்து
நான்நான் எனக்குளறு படைபுடை பெயர்த்திடவும் நான்குசா தனமும் ஓர்ந்திட்
டானநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற் றணுபக்ஷ சம்பு பக்ஷம்
ஆமிரு விகற்பமும் மாயாதி சேவையும் அறிந்திரண் டொன்றென் னு'மோர்
மானவித விகற்பமற வென்றுநிற் பதுநமது மரபென்ற பரம குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரு மௌன'குருவே. —தாயுமானசுவாமிகள்.

# யார் சண்டாளன்?

பல்லவி

நானே சண்டாளன்! —சரி
தானோ உங்களுக்கு?

சரணங்கள்

1. தாயை யிகழ்ந்தவன் சண்டாளன்
தந்தையை நொந்தவன் சண்டாளன்
தூயவர் நல்லோர் பெரியோரைத்
தோஷ முரைத்தவன் சண்டாளன்
தீயவை செய்தே பலர் வசத்
தின் றூழல் கின்றவன் சண்டாளன்
ஏவின செய்வேன் குற்ற மிலேன்
எளியவ னானேன் என்பதற்கே (நானே)

2. வீட்டை மறந்தவன் சண்டாளன்
வேசியர்க் கலைபவன் சண்டாளன்
நாட்டைக் காட்டிக் கொடுத்ததனால்
லாப மடைந்தவன் சண்டாளன்
பாட்டைத் தனிவழி வந்தோரைப்
பதுங்கி யடிப்பவன் சண்டாளன்
ஓட்டைக் குடிசையில் வாழ்கின்றேன்
ஒருசிறு பாபமும் அறியாத (நானே)

3. நன்றி மறந்தவன் சண்டாளன்
நயமுறை வஞ்சகன் சண்டாளன்
கொன்று சுகித்தவன் சண்டாளன்
கோப மிகுந்தவன் சண்டாளன்
கன்று நலிந்திடப் பாலெல்லாம்
கறந்து புசித்தவன் சண்டாளன்
ஒன்றும் தெரியேன் "ஏழை" என்றிடும்
ஒன்றே என்குறை அதற்காக (நானே)

4. கள்ளைக் குடிப்பவன் சண்டாளன்
காமத் தலைபவன் சண்டாளன்
கொள்ளை அடிப்பவன் சண்டாளன்
கூடிக் கெடுப்பவன் சண்டாளன்
"அள்ளித் தெளிக்க" பணக்காரன்
ஆபத் துதவான் சண்டாளன்
வெள்ளைத் துணியொன் றில்லாமல்
வேலை செய்வேன் அதற்காக (நானே)

5. தெய்வ மிகழ்ந்தவன் சண்டாளன்
தீனரைக் கெடுத்தவன் சண்டாளன்
பொய்யுரை பேசி பிறர்கேடே
புரிந்து பிழைப்பவன் சண்டாளன்
"ஐய அடைக்கலம்" என்றோரை
ஆதரிக் காதவன் சண்டாளன்
வெய்யில் மழையென் றில்லாமல்
வேண்டிய செய்வேன் அதற்காக (நானே)

6. ஆலயத் துள்ளே அபசாரம்
அறிந்தே புரிந்தவன் சண்டாளன்
கூலியை மறைத்தவன் சண்டாளன்
கோள்சொல்லிப் பிழைப்பவன் சண்டாளன்
வேலியைக் கடந்தே பிறன்பயிரை
வேண்டுமென் றழித்தவன் சண்டாளன்
காலையும் மாலையும் இல்லாமல்
கஷ்டப் படுவேன் கள்ளமிலேன் (நானே)

7. வட்டி பெருக்கி ஏழைகளின்
வாழ்வு கெடுத்தவன் சண்டாளன்
பட்டினி எளியவர் ஆசையுடன்
பார்த்திட உண்பவன் சண்டாளன்
ஒட்டிய வழக்கில் பணத்திற்காய்
ஓரஞ் சொன்னவன் சண்டாளன்
அட்டியில்லாமல் சொன்ன தெல்லாம்
அடியேன் கேட்டேன் அதற்காக (நானே)

8. தானங் கொடுப்பதைத் தடுப்போனும்
தவத்தைப் பழிப்பவன் சண்டாளன்
மானங் கெடுத்தவர் சோறுண்டு
வயிறு வளர்ப்பவன் சண்டாளன்
கானுங் காடும் உங்களுக்காய்க்
கல்லிலும் முள்ளிலும் பாடுபடும்
ஏனிங் கென்னைச் 'சண்டாளன்'
என்பது சரியோ உங்களுக்கே? (நானே)

நாமக்கல், திரு. வெ. இராமலிங்கம்பிள்ளை.

என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்துகரைந், தன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே.

யாழ்ப்பாணம் சுப்பிரீம்கோட்டு விசாரணை

# ஆலயம் செல்லுகையில் கடத்தப்பட்ட மேரிப்பிள்ளை

## 14 நாட்களின்பின் கண்டுபிடிக்கப்பட்டனர்

### குருசுமுத்துவின் காதல்வைபவம்.

அச்சுவேலியைச் சேர்ந்த பத்தைமேனி யென்னுமிடத்தில் வசிக்கும் மேரிப்பிள்ளை என்னும் 17 வயதுக் கன்னிகையை, அவளது பெற்றோர் பாதுகாப்பிலிருந்து பலவந்தமாகக் கடத்திச் சென்றனர் என்று (1) சூசைப்பிள்ளை குருசுமுத்து (2) சூசைப்பிள்ளை சிங்கராசா, (3) அப்பாக்குட்டி தம்பு (4) வல்லிபுரம் கிருஷ்ணன் (5) வீரகத்தி முத்தன் (6) சின்னத்தம்பி சின்னையா (7) கந்தன் என்பவர்கள் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்குச் சென்ற வியாழக்கிழமை தொடக்கமாக யாழ்ப்பாணம் சுப்பிரீம்கோட்டில் விசாரணை செய்யப்பட்டது.

கடத்தப்பட்ட கன்னிகை 14 நாட்களின் பின்னரே பெற்றோரால் கண்டு பிடிக்கப்பட்டனள்.

முடிக்குரிய நியாயவாதி திரு A.H.R. வீரசூரியா வழக்கை நடத்த நியாயவாதிகள் திரு. வன்னியசூரியர் ஸ்ரீ துரைசுவாமி தம்பு என்பவர்கள் எதிரிகட்காக ஏற்பட்டனர்.

குறித்த மேரிப்பிள்ளை தனது இளைய சகோதரியாகிய மரியம்மாவுடன் தேவாலயம் சென்றபோது கடத்தப்பட்டாள் என்று சொல்லப்படுகிறது.

கடத்தப்பட்ட சிறுமியின் இளைய சகோதரியாகிய மரியம்மா சாட்சியம் கூறியதாவது:—

"எனக்கு வயது 14. நான் கடத்தப்பட்ட மேரிப்பிள்ளையின் இளைய சகோதரி. பத்தைமேனியில் வசிக்கிறேன். நான் எங்களுடைய சொந்தக்காரன் தம்பு வீட்டில் தான் இருக்கிறேன். அவர்களுக்கு உதவி ஏதாவது செய்து கொடுக்கிறது வழக்கம். சென்ற (4-9-35) பிற்பகல் புதன்கிழமை நான் எனது மூத்த சகோதரி மேரிப்பிள்ளையுடன் பெண்பிள்ளைகளுக்குச் சற்போதனையின் பொருட்டுக் (நல்ல புத்திமதி கூறுதல்) கூட்டப்படுங் கூட்டத்துக்குச் சென்றேன். நான் தம்பருடைய வீட்டிலிருந்து எனது தகப்பனார் வீட்டுக்குச் சென்றுதான் சகோதரியைக் கூட்டிக்கொண்டு சென்றேன். நாங்கள் கத்தோலிக்க மதத்தவர்கள் கோவிலுக்கு ஓர் கூப்பிடு தூரத்தில் இருக்கிறோம். நாங்கள் இருவரும் வீட்டை விட்டுப் புறப்பட்டதும் ஓர் ஒழுங்கை வழியாகச் சென்று பின்பு ஓர் பனை நிற்கும் வெளிவெளவு வழியாகச் சென்று அதன் பின் கோவிலுக்குப் போகும் பாதையால் சென்றோம்."

"நாங்கள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் அவ்வழியாலேயே கோவிலுக்குப்போகிறது வழக்கம். சில சமையங்களில் நாங்கள் இருவரும் போவோம். சில சமையங்களில் சகோதரி தாயாருடனும் போவார்கள். இது சம்பவம் நடந்த தினத்தன்று நாங்கள் இருவருமே சென்றோம். என் தாயார் ஏன் வரவில்லை என்பது எனக்குத் தெரியாது."

"கோவிலுக்குப் போகும்போது புத்தகம் அல்லது வேறு எதுவும் கொண்டுபோகவில்லை. ஆனால் செபமாலை மாத்திரம் கையில் வைத்திருந்தோம். சகோதரி தலையில் முக்காடிட்டு வந்தவள். கோவிலுக்குப் போகும்போது நான் முன்னும் அக்காள் பின்னுமாகச் சென்றோம். அப்பொழுது திருச்செல்வம் என்பவருடைய வீட்டுப் படலையில் ஓர் கார் நின்றது. அத்தக் காரின் இயந்திரம் இரைந்து கொண்டே இருந்தது. 1-ம் 2-ம் 3-ம் 4-ம் எதிரிகள் காருக்குப் பக்கத்தில் நின்றார்கள். கூட்டத்துக்குநேரமாய்விட்டபடியால் நான் மிகவும் விரைவாகச் சென்றேன். சகோதரியும் விரைவாக நடந்து என்னைப் பின் தொடர்ந்தாள். ஆகையால்தான் இருவரும் சோடியாகச் செல்லவில்லை."

நீதிபதி:—எனக்கு ஒரு சகோதரி இருப்பாளானால் இருவரும் ஒருவர் பக்கத்தில் மற்றவராகத்தான் செல்வோம் என்றார். மீண்டும் சாட்சிகூறியதாவது:—

"நான் கோவில் வளவுக்குள் சென்றேன். முதலாம் எதிரியை எனக்குத் தெரியும். இந்த முதலாம் எதிரியுடன்நான்சிறுமியாய்இருந்தபோதும் எதிரியினுடைய தாயார் சீவனுடன் இருந்தபோதும் நான்பேசுவதுண்டு."

"திருச்செல்வம் வீட்டில் அவருடைய சொந்தக்காரரொருவருக்குச் சில நாட்களுக்கு முன் விவாகம் நடந்தது. ஆதலால்தான் அவர்வீட்டுப் படலையில் கார் நின்றபோது நான் ஒருவிதமான சந்தேகமும் கொள்ளவில்லை. எனது சகோதரி சத்தம் போட்டது எனது காதுக்குக் கேட்டது. உடனே நான் திரும்பிப் பார்த்தேன். "ஓ, அப்பு" என்று அவள் சத்தமிட்டாள்."

"நான் பின் திரும்பிப் பார்த்தபோது 1-ம் எதிரி தனது இருகையாலும் அவளைத் தலையில் தூக்கவும் 2-ம் எதிரி காலில் பிடித்துத் தூக்கவும் கண்டேன். இப்படித் தூக்கிக்கொண்டு காருக்குக் கிட்டப் போனபோது எனது சகோதரி கார்க்கதவில் பிடிக்கத் தம்பு கைப்பிடியை விடுவிக்க இருவருமாகத் தூக்கி காரின் பின்ஆசனத்தில்விட்டனர். அவள் எழும்பினபோது தம்புஎன்பவர் அவளைக் கார் வக்கிக்குள் அமத்தினார். இதற்குள் 1-ம்எதிரி சத்தம்போடாதே என்று கன்னத்தில் அடித்தார் நானும் "ஓ அப்பு" என்று சத்தமிட்டேன். இது சம்பவம் நடந்தநேரத்தில் இவர்களையும் எங்களையும்விட வேறு யாரும் அவ்விடத்திலில்லை. காரில் 2ம், 4ம் எதிரிகள் முன்னுக்கும் 1-ம், 3-ம் எதிரிகள் பின்னுக்குமாக இருந்தனர். தம்பு என்பவர் அங்கு நின்றார். ஆனால் அவர் திருச்செல்வம் வீட்டுப்படலைக்குள் போனார். அந்தக் கார் சாம்பல் நிறமானது. கார் புறப்பட்டதும் நான் தகப்பனாருக்கு அறிவிக்க ஓடினேன். எனது மூத்த சகோதரி வீட்டில் இருந்தவள். இந்த 1-ம் எதிரிக்கும் எனது சகோதரிக்கும் விவாசம் பேசினது எனக்குத் தெரியாது. சூசைப்பிள்ளை விவாகம் செய்யாதவர். எனது சகோதரிக்குச் சூசைப்பிள்ளையைத் தெரியுமோ தெரியாதோ என்பது எனக்குத் தெரியாது. சகோதரிக்கு விவாகம் செய்து கொடுக்கும் நேரத்தில் தம்பர் ஆபரணம் முதலியன கொடுத்து உதவி செய்யக்கூடும். தம்பருக்கு எனது சகோதரியைச் சூசைப்பிள்ளைக்கு விவாகம் செய்து கொடுக்கும் நோக்கமிருந்திருக்கவில்லை. அவர்கள் இருவரும் (சகோதரியும் சூசைப்பிள்ளையும்) ஆங்கில மாதிரி நடந்தது எனக்குத்தெரியாது. 1-ம் எதிரிக்கு ஒரு சகோதரி உண்டு. அந்த வீட்டில் நல்ல பழங்களைக் கொடுக்கக்கூடிய மா, பலா முதலிய மரங்களுண்டு. 1-ம் எதிரியுடன் நான் இப்போது பேசுகிறது கிடையாது."

இதன் பிற்பாடு கடத்தப்பட்ட பெண் மேரிப்பிள்ளை சாட்சியம் கூறியதாவது:—

"எனக்கு வயசு 17. சென்ற புரட்டாதி௴ 4-ந் உ நான் எனது தாய் தகப்பன் வீட்டில் இருந்தேன். சாயந்தரம் 3-30 மணியளவில் நானும் சகோதரியும் கோவில் மணிகேட்டபின் (புதன்கிழமை) கோவிலுக்குப் போனோம். சிலநாட்களில் நான் எனது மூத்தசகோதரியுடன் செல்வேன். சிலசமையங்களில்இளையசகோதரியுடன் செல்லுவேன். குறித்த தினத்தன்று இளைய சகோதரியுடன் சென்றேன். இளைய சகோதரி வராவிட்டால் மூத்த சகோதரியுடன் போவேன், தங்கச்சி முன்னுக்கும் நான் பின்னுமாகச் சென்றோம். நான் ஒழுங்கையில் போனதும் ஓர் கார் நிற்கக்கண்டேன். அது திருச்செல்வத்தின் படலையில் நின்றது. காருக்குப் பக்கத்தில் ஆட்களைக் கண்டேன். அவர்கள் என்னைக் கண்டதும் காரில் ஏறினர். இதற்கிடையில் கார் புறப்பட்டு என்னை விலத்திக்கொண்டு முன் சென்று கோவில் வாசலில் நின்றது. இதன் பின்பு குருசுமுத்து காரை விட்டு இறங்கி எனக்குமுன்னுக்குச் சென்று "அவளைக் காணவில்லை" என்று சொல்லிக்கொண்டு எனக்கு எதிராக வந்து என்னைக் கட்டிப்பிடித்துத் தூக்கினான். நான் கீழே விழுந்தேன். சத்தமும் போட்டேன். இந்நேரத்தில் தங்கச்சி கோவில் வளவுக்குள் சென்றுவிட்டாள். இதற்கிடையில் 2-ம்எதிரிவந்ததும்1-ம் எதிரிதலையிலும் 2-ம்எதிரிகாலிலுமாகத் தூக்கிக்கொண்டு காருக்குக்கிட்டப் போனபோது கார்க்கதவைப்பிடித்தேன். அக் காருக்குள் இருந்த தம்பு என்பவர் எனது கைப்பிடியை விடுவித்து என்னைக் காருக்குள் 1-ம் 2-ம் எதிரிகள் போட அமத்திப் பிடித்தார். என்னைக் கார் வக்குக்குள்தான் போட்டவர்கள். இந்நேரத்தில் 1-ம் எதிரி சத்தம் போடாதேயடி என்று சொல்லி எனது கன்னத்தில் அடித்தார். தங்கச்சி எங்கு சென்றாள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவள் சத்தமிட்டது கேட்டது. காரில் முன்னுக்கு 2-ம் எதிரியும் 4-ம் எதிரியும் பின்னுக்கு 1-ம் 3-ம் எதிரிகளும் நானும் இருந்தோம். இவை எல்லாம் ஒரு சொற்பநேரத்தில் நடந்து முடிந்தன. கார் கோவில் வளவைக் கடந்து கிழக்குப் பக்கமாகச் சென்றது.

"அந்த இடத்தில் நான் ஒருவரையும் காணவில்லை. கார் கொஞ்ச இடம் தள்ளிப் போகும்போது பழைய சாராயத் தவறணையடியில் பத்தைமேனி உடையாரைக் கண்டேன், அல்லாமலும் வேறு வண்டில்கள் செல்லுவதையும் வருவதையும் கண்டேன். இவைகளைக் கண்டதும் நான் அப்பு அப்பு என்னைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள் என்று சத்தமிட்டேன். நான் வக்கிக்குள் முற்பக்கத்தைப்பார்த்தபடி இருந்தேன். எனது செபமாலை கையில்தான் இருந்தது. நான் எழும்ப எத்தனிக்கும்போதெல்லாம் 1-ம் எதிரி அமத்திவிடுவார். தம்பு முதல்முறைதான் அமத்தினவர். திருப்ப ஒன்றும் செய்யவில்லை. இப்படியான நிலையில் என்னை அவர்கள் ஒருவகையாலும் தொந்தரவு செய்யவில்லை. 1-ம் எதிரியை எனக்குத் தெரியும். பேசுகிறதுகிடையாது. அவன் கிட்டத்தான் வசிக்கிறவன். அவன் எனது சொந்தக்காரன்; நான் அவனை நல்லப்பா என்று அழைக்கிறவள்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க.)



M. M. L. MOHAMED ABDUL CADER HADJIAR & Bro.

GENERAL HARDWARE STORE

Grand Bazaar, JAFFNA.

THE BEST IN THE MARKET

KEY BRAND GERMAN CEMENT,




துறப்பு மார்க் ஜெர்மன் சீமெந்து

MADE IN GERMANY

இந்த துறப்பு மார்க் ஜெர்மன் சீமேந்து மற்ற எல்லாவித சீமேந்துகட்கும் மேலானதும், அளவு கூடியதும், நல்ல பசையுள்ளதும், நற்சாட்சிப்பத்திரம் பெற்று உலக முழுவதும் அதிக விருப்பத்துடன் வாங்கிப் பாவிப்பதுமான சீமேந்தும் இதுவே. இந்த துறப்பு மார்க்கு சீமேந்தையே உங்கள் தேவைகளுக்கு வாங்கிப் பாவியுங்கள். ஒருமுறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

(95) 8-3-36.

**பத்திரக்கிரயம்**
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கால்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி - சு. | யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவ௵ பங்குனி௴ நஉ (15-3-36) ஞாயிற்றுக்கிழமை | பகுதி—நடு


# நாகர்.


["விவேகானந்தசபை" இயற்றமிழாசிரியர்
சிவங். கருணாலயபாண்டியப் புலவர் அவர்கள்.]



(பதிப்புரிமை ஆக்கியோர்க்கேயுரித்து.)


(முற்றொடர்.)

இனிப் பல்லவர், பின்னர்ச் சோழமன்னர்ப் பணிந்து திறையிறுத்தமையிற் குறும்பரெனவும் பட்டனர். குறும்பர் - குறுநிலமன்னர். பல்லவர் பெயர்வழி யெஞ்சியது, கி. பி. பதினாலாம் நூற்றியாண்டின் இடைப்பாலெனக் கொள்க. இனி, இங்ஙனமெல்லாம் பல்கக் கூறுதல் மற்றொன்று விரித்தலும், செப்புவழுவுமாய்க் கடியப்படுமாலோ வெனின், ஒக்குமேனும், விளங்கக்கூறலெனும் நூன்மாண்பும், முன்மொழிந்துகோடலெனும் நூற்புணர்ப்பும், (தந்திரவுத்தி) ஊசியிடையீட்டுமுறையும் (சூசிகடாரகியாயம்) கடைப்பிடித்தலின் வழுவமைதியாமெனக் கொள்க. மேல்வருவனவுமது.

இனி, வடபாற் கங்கைப் பேரியாற்றின் அடைகரைக்கட் காடுறை வாழ்க்கை (வானப்பிரத்தம்) யின் நோற்றொழுகிய தபங்கனென்னுமொரு நீத்தானுடைய வேழ்விக்குப் பொருந்துங் கொள்கலங்களுள் ஒன்றனகத்தினின்றும் ஒரு போர் மறவன் பிறந்தனன். அக் கொள்கலன் சளுகம் என வடமொழிப் பெயரிற்றாதலின், அதனிற் றோன்றியோனை அவ்வந்தணன் சளுக்கனெனப் பெயரீடு (நாமகரணம்) செய்து விளித்தனன். இவன் மரபின்வழி வந்தோர் சாளுக்கரெனப்படுவர்.

இனி, நகுடன் மகன் எயாதியென்னும் வேந்தற்கு அசுரமன்னன் விடவன்மன் மகள் சன்மிட்டைவயிற் றோன்றியோரைவர்மக்களுள் முதலவன் எதுவென்பானின்று தோன்றியார் யாதவரெனப்படுவர். ஐந்தாமவன் பூருவென்பானினின்று தோன்றியார் பௌரவர் எனப்படுவர். இனிப் பாண்டுவின் மரபினர் பாண்டவர். ககுத்தன் மருமான்கள் காகுத்தர் துடியந்தனுக்குச் சகுந்தலைபாற் றோன்றிய பரதனென்பான் வழித்தோன்றல்கள் பாரதரெனப்படுவர். போசன் மரபினர் போசளர் எனப்படுகின்றனர். இனி, உசத்திய முனிவன் மகன் குருடன் கிழவன் முனிவன் தீர்க்கதபசு எனப்படுவான் பலியென்னுமொரு மன்னனுரிமை (மனைவி) சுதேட்சணையெனப் பேரியாளைக் கையாற்றொட்டுச் சூற்கொளுவ, அவள் பொறையுயிர்த்த அங்கன், வங்கன், கலிங்கன், புண்டரன், சிங்கன் என விவ்வைவர் பிறங்கடைகள் (வழிப்பிறந்தோர்) நிரையே அங்கர், வங்கர், கலிங்கர், புண்டரர், சிங்கர் எனப்படுவர். வங்கரோடியையுடையார் வங்காளரெனவும், சிங்கரோடியையுடையார் சிங்களரெனவும் பெயர்சிறந்தனர். இவரான் ஆளப்பட்டமை காரணத்தானமைந்தனவே, முறையே அங்கமும், வங்கமும், கலிங்கமும், புண்டரமும், சிங்கமும் என்னும் நாட்டின் பெயர்களென்ப. எனவே, இனிச் சிங்களமென்பதன் பொருண்மையும், வங்காளமென்பதன் பொருண்மையும் எளிதினுய்த்துணர்ந்து கொள்ளப்படும். இனி, சேரர், சோழர், பாண்டியரென்பவும் குடிப்பெயரென உரையாசிரியர் பலரும் குடிப்பெயர்க்கு எடுத்துக்காட்டாக வாளுப. நந்தன்வழி மன்னனுக்கு முராவென்னுமொரு வேளாண் மகள்பாற் றோன்றிய சந்திரகுப்தன் அசோகன் முதலியோர் மௌரியர் எனப் பெயர் சிறந்தனர். நந்தன் மரபினர் நந்தரெனப்படுவர். இன்னுமித் தொடக்கத்தன வெத்துணையோ பல பல்வேறு நாட்டு மக்கட் குழாமின் பெயர்களும், அவ்வக் குழாமின் முதல்வன் வரலாறுகளும் முறையே மரபின் பெயராகவும் பொய்யிடை மிடைந்தும் உலகியலாயும் வாராநிற்கும் கதையாகவும் தேறப்படுதல் போலவே, நாகர் என்னும்பெயரும் அம்முதல்வன் நாகின்கட் (நாகு-பசு) டோன்றினன் என்பதுபற்றி நாகனெனப்பட்டானெனும் வரலாறு ஐயந் திரிபின்றித் தேறப்படுமெனக் கொள்க.

இனி யிப்பெயர், பார்ப்பார், வேந்தர், விலைஞர், வேளாளர், வெள்ளையர், கரியர், செய்யர், (Red Indians) பொன்னர் (Chinese) என்றாற்போலும் தொழிலிற் பெற்ற தொகுதிப் பெயரும், பண்பிற் பெற்ற பகுதிப்பெயரு மாகாமையும் வெள்ளிடை மலையாகும். நாகமென்னுஞ் சொற்கு தொழில், பண்பு முதலியன பொருளாகாமையின். இனி, இவ்வாறன்றி நாகமென்பது பாம்பு. பாம்பினைக் கடவுளாகக் கொண்டு வழிபடுதலின் நாகரெனப் பெயருண்டாயிற் றென்பாரும், ஒருதலைப்பாம்பு, முத்தலைப்பாம்பு, ஐந்தலைப்பாம்பு முதலியவற்றின் றோற்றமாகப் பொன் முதலியவற்றான் முடிபுனைந்தியற்றிச் சூடுதலின் நாகராயினரென்பாருமுளர். இக் கூற்றுக்களெல்லாம், நாகரெனுஞ் சொற்கேட்ட துணையே துணியப்படாத வேதுக்களான் இக்காலச் சொற்பயிற்சிக் கொப்பத் தத்தம் கருத்திற்றோன்றியவாறேயாமன்றி, ஒத்த பேர்களொடும் அக்காலமிருந்த வாற்றொடும் அந்நாடிருந்த வாற்றொடும் இப்பொழுதைய வழக்காற்றொடும் பண்டைய செய்யுளாற்றொடும் படுத்து ஆராயுமாற்றான் ஆராய்ந்தவாறன்று என்னை! இக் கொள்கை மேற்கூறியவாற்றாற் பொருந்தாமை பெறுவதன் மேலும் பாம்பையுணர்த்தும் நாகமெனுஞ் சொல் தமிழ்வழக்கன்மையானும் வடமொழி வழக்காதலானும், ஆரியரை வடமொழியாளர் என்றல் பலருமொப்ப முடிந்ததாதலின் அவர் வடபாலினின்று தெற்கட் குடிபோந்தாரென்பது தானே பெறப்படலானும், அவர் இத்தென்னாடு குடிபோதரு முன்னரே நாகர் என்னும் பெயர் வழக்காற்றினுண்மை காண்டலானும், யாதானும் வடமொழிப்பெயர் ஏலாது பழமைதொட்டு வரூஉம் மருதநில மாக்கள் முதலிய சில மக்களிடை யிப்பெயர் இன்னும் பயில வழங்கக் காண்டலானும், நாகையன், நாகன், நாகப்பன் என்றாற்போல இக்காலைப் பெயரிடுவார்க்கு ஆதிசேடன் என ஆரியர் வழங்கும் பாம்பிறைமேல் (பாம்பரசன்) உளஞ்சேரலின்மையானும், தத்தம் குடிச்சிறந்தார் பெயரென்பதே கருத்தாதலானும், பெரும்பாலுஞ் சொல்லலுற்ற பொருளை அடைபுணர்த்து தன்மை நவிற்சியணி பிறப்பித்தன்றிக் கூறுதமரபுவாய்ந்த மணிமேகலை முதலிய பாண்டியர் கழகப்போழ்தின் மரீஇய சான்றோர் செய்யுளகத்து அவ்வாறு குறிப்பியாமையானும், வடமொழிச் செய்யுளுள்ளும் சீனம், செப்பான், சாவம் முதலிய கீழைமொழிச் செய்யுளுள்ளும் பிறவற்றினுள்ளும் நாகத்தை வழிபட்டுவந்த ஒருசார் குழூஉவினர் யாண்டானும் உளரென்றாதல், நாகமுடியுடையார் ஒருசார்க் குழூஉவினர் யாண்டானும் உளரென்றாதல் கூறப்பட்டுள்ளனவாகக் கேட்கப்படாமையானும் பொருந்தாதென மறுக்க. அல்லதூஉம் அவ் வழிபாட்டானெய்திய பெயரெனின், அது சைவர், வைணவர், வைதிகர், சைனர், பௌத்தர், சாத்தர் (சத்தியை வணங்குபவர்) என்றாங்கு அவ் வழிபாடுடையார் பலர்க்கும் ஒப்ப நிற்றலின்றி, ஒரு நாட்டுள் ஓரினத்தாரையே வரைந்துணர்த்துதலமையாது. உணர்த்துமேற் குடிப்பெயரென்று வேறொன்றுளதாதல் வேண்டும். அஃதுமின்று. சைவர் முதலிய பெயர்கள் குடிப்பெயராக வழங்கப்படாமையுமுணர்க. எவ்வெப் பொருள்களிடத்து அச்சமும் பெருமையும் வியப்பும் காணப்படுமோ, அவ்வப் பொருள்களிடத்துக் கடவுட்டன்மை கண்டு கருதி வழிபடுதல் உலகப் படைப்புக்காலத் தொடக்கத்தே ஞாலமாந்தர் மாட்டுக் கிடந்த முதற்கடவுட் கோட்பாடாகும். இக்காலத்து அகத்திய லாராய்ச்சி யுடையார்க்கும் இத் துணிபு ஒப்ப முடிந்ததென்ப. அம் முறையாற் கல், மரம் முதலியவற்றினமைத்த பாம்புப்போலி(பிரதிமை) வணக்கம் இற்றைப்பொழுதும் நாகநாட்டினொருபாலாகிய இந்துசீன (Indo-china) நாட்டுக் கம்போடியா (Cambodia) என்னும் நிலப்பரப்பின் (பிரதேசம்) கட் காணப்படுமென்றலுங் கொள்ளப்படும். இயல்பானே நாகரென்னும் பெயருடையார்கண் நாகவழிபாடு வந்து தோன்றியவழி, அஃது இயல்பானே வீழும் பனம்பழத்திற்குக் காக்கைப்புள் தீண்டுதலை வாயிலாக மயங்கிக் கோடல்போல் சொல்லொப்புமை பற்றிய மயக்கத்தான் பிரியக்கொண்ட பெயர்க்காரணமாயிற்றுப் போலும். அதனானன்றே, நாகவழிபாடு செய்துவரும் ஏனைத் தமிழரும் ஆரியரும் நாகரெனப் பெயர் வழங்கப்படாராயினர். இனி, இப்பாம்பு வணக்கந்தானும் நாகநாட்டுக்கு இயல்பன்றி ஆரியராற் கொணர்ந்து பரப்பி நிறீஇயது எனவுணர்க. ஆரியர் தமிழர் குடியேற்றத்தின் பின்னர் நாகநாட்டிற் குடியேறினவராவர். இனி, மூரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் பெயர்வழக்கானும், பனிமலைத் தென்சாரலைச் சார்ந்த வடவாரிய நாட்டுளோரிடத்தும் ஈழநாட்டினும் செப்பானினும் பாம்பு முடியுடைய மக்கட் போலி (பிரதிமை) காணப்படலானும் நாகமுடியுடையராதல் பிழையாமாறில்லை. முடிநாகரென்னுஞ் சொற்றொடர் இப் பொருள்படுதலை, "வானுரெழிலி மழைவளநந்த" வென்னும் பரிபாடலுள் திருமாலைக் கூறிய,

"அணையவை யெல்லா மியையும் புணையிழைப்
பூமுடி நாகர் நகர்"

என்புழிக் காண்டுமாதலானும் துணியப்படும் எனின், முடிநாகர் என்னும் பெயர் பரிபாடலிற் கூறியாங்கு திருமாலுக்கே சிறந்ததாதலின் அத் திருமால் வழிபாடு நாகநாட்டுள் வந்தேறியதன் பின்னர் அவ் வழிபாட்டினுறைத்துநின்ற அந்நாட்டு மன்னர்கள் திருமால்போல வழிபடப்படுதலின் அவரும் முடிநாகரெனப்பட்டனர். "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே" யென்னும் திருவாய்மொழியும் ஈண்டுக் கருதற்பாலது. அதனானன்றே, முடிநாகராயரென்றாற்போலும் ஒருசிலர்க்கன்றி ஏனையோர்க்கு நாகரென்றல்லது முடிநாகரென்று வழங்கப்படாததூஉமென்க. முடிநாகரது கல்லுருவம் அரசருடையனவாகக் காணப்படாமல் வாயில் காவலாளருருவமாகவே காணப்படுகின்றது. அதனான் மறவர்போலும் படையாளராதல் வேண்டும். இவர்க்கு முடிதானும் வந்தேறிகளாகிய ஆரியர்களால் இவர்கள் பெயர்நோக்கிப் படைத்துப் புனைவித்திருத்தல் வேண்டுமென்க. இனி, முடிநாகன் எனுஞ் சொல் முடிச்சோழன், முடிக்குரியவன் என்றாற்போல, அரசியலடையாளமாகிய முடியினையே யுணர்த்திப் பேரினைச் சிறப்பித்தல்லது அப் பெயரின் முதனிலையினைச் சிறப்பித்து நில்லாமையின் ஈண்டும் முடியென்பது நாகனைச் சிறப்பித்ததன்றி அதன் முதனிலையாகிய நாகத்தைச் சிறப்பித்ததன்றென்க. அன்றியும் மூரஞ்சியூர் முடிநாகராயரென்பது ஒருவர் பெயரல்லது ஒரு குழூவின் பெயராகாமையுங் காண்க. அல்லதூஉம் முடியென்னுஞ் சொல் தமிழும், நாகம் என்னுஞ் சொல் ஆரியமுமாயின், இது ஆரியரிட்ட பெயரோ, தமிழரிட்ட பெயரோ வென்றாராய்ந்து மறுக்கப்படும். முடிபோன்ற பயின்ற வடசொல் வழக்கமின்மையுங் கண்டுகொள்க. இனி, இங்ஙனமொரு முடியுடையாருளரென்று யாதொரு செய்யுளு முணர்த்தாமையும் முன்னர்க் கூறப்பட்டது. அத


(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.)


வறியர் ஒருகாலத்திற் செல்வம் பெறுவர் அருளற்றவர் எக்காலத்தும் அழிந்தவரே.

# சண்டமாருதம்

[பதிப்புரிமை ஆசிரியர்க்கே]

(புலோலிமேற்கு, திரு. சு. வேதாரணியம் அவர்கள் இயற்றியது.)

(குறிப்புரை)

(முற்றொடர்.)

அங்கம் 1. காட்சி 2.

களன்: புரசுபரன் குடிசை முன்றில்.

புரசுபரனும் மிராந்தாதேவியும்.

மிராந்தாதேவி :—ஆஹா! ஐயஹோ!
ஊழிக் காலம் உற்றது கொல்எனுஅ
ஆழி மத்தியில் மாருதம் சுழிப்ப
இருங்கடல் தானும் எழுந்தடித் தார்த்து
மின்னழல் தன்னைத் தன்னகத் துறுத்த
சூல்கொள் மேகம் சூரியனை மறைப்ப
ஆயிடைப் பட்ட நாவாய் ஒன்றதோ!
மூழ்கி மலைவுற மாயுமக் கலத்துளோர்க்
காணச் சகியேன் கூக்குரல் பொறுக்கேன்
வறியர் அன்றே மாண்டனர் கொல்லோ?
அன்புடை ஐய! நின் இந்திர ஜால
வித்தை கொண்டு விளைத்தி யாஞல்
தணிப்பையிப் பெரும்புயல்.
வித்தகத் தேவன் ஒருவனே யாயின்
மக்களும் கலனும் மாளா முன்னம்
பாந்தவிக் கடலைப் பாரினுட் புகுத்துவன்.

புரசுபரன்:—
சிந்தனை ஒழிதி,
தீங்கி யாரும் உற்றிலர் அறிதி.

மிரா:—
பீடை மிகுதியால் வாடுமென் னுள்ளம்.

புரசு:—
நல்லாய் கேண்மோ நின்னலம் கருதி
அல்லால் வேறு யாதும் செய்திலேன்.
நின்னருமைதானறியா வென்னரியகுமாரி
வறியவிக் குடிசை வாழ்பதி யென்பிதா
அரிய னென்றலால்,
இன்ன தகையன் இனியன் அன்னோன்
யாஙங னிங்குப் போந்தனம் யாம்எனுஅ,
வைபவம் யாவும் அறிகிலை பொற்றொடி.

மிரா:—
அவைதமை,
அறியுமா றென்னுளம்
தூண்டிற் றில்லையால்—

புரசு:—
யாவையுங் கற்பான் காலங்காண் அடுத்தது
காரிகையிக் கவசம் கழற்றுவை நீயும்
(தன் மாந்தரீகக் கவசத்தைக்
கழற்றி ஒருபாலிட்டு)
வித்தைக ளெல்லாம இங்குள வதுகாண்;
துயரம் ஒழித்து தேறுவை தெரிவாய்!
இரக்கம் முழுமையும் நின்பால் எழச்செயும்
குரூரவிக்காட்சியிவ் வித்தையால்விளைத்தே
ஆயினும் அறிதி யாவரும் எத்தகைத் [ன்
தீமையு முறுவணம்
அலைகடல் மத்தியில் கலனது தாழுமா
றியற்றினனியான்; இயம்புவதுகேண்மோ.

மிரா:—
என்னுடை வைபவம் விளம்புமா றுற்றுப்
பின்னதற பிறழ்ந்து "இனமை ஓர்கணம்
செப்புவன்" எனவெனை மலைவுறச் செய்த
தெத்துணை தாபஐப?

புரசு:—
யாவையுமறிதாற் கடமதாய்கொண்டேன்
கேளுதி மகளே யாமிக் குடிசை [வா?
புகுமுனம் நடந்த தெவையுமுன் மனதுள
பால்மணம் மாறாப் பச்சிளங் குழவியாய்
மூவாட் டையளாம் நீயிருந் தனையால்
நினைவுகூர் வண்ணம் சாலாது போலும்-

மிரா:....சாலும், ஐய சாலும்.

புரசு:—
எவ்வா றுணர்கிறாய் எவரை யறிவாய்?
அன்றேல்,
இல்லம் நிகழ்ச்சி எது மறிவையா?

மிரா:—
என்னுளத்து அதிதூ ரத்தே
தென்படும் சொப்பனம்:
நால்வரோ ஐவரோ அறியேன்,
காரியர்சிலரெனை வளர்த்ததுமுண்டுகொல்?

புரசு:—
அநேக ருன்னைப் பேணின துண்டே
இவற்றை
மனோகரி நீயெவ் வாற்றுற் கூர்ந்தனை?
கடந்து சென்ற காரிருட் காலத்த
நிகழ்ச்சி வேறெவையும் நினைவுறு வையே
லியாம்
எங்ஙனிங் குற்றேம் என்ப தறிவாய்.

மிரா:—
ஐய! வேறு நிகழ்ச்சி கூர்ந்திலன்

புரசு:—
அவ்வா றுயின் அறிதி மகனே,
வல்லமை படைத்த மயிலை நாட்டுடைக்
கோமா னின்பிதா கௌரவ மழித்து
ஈராறுண் டாயினவே.

மிரா:—
ஐயநீ என்பிதா அல்லைகொல்?

புரசு:—கேளுதி,
சீலமே யுருவா யமைந்த மாதிடை
மாமயிலை காவலன் புத்திரியா யுதித்தாய்
மாசில் மெய்யோய் மயிலைக் குரித்துடை
(இ)ராணியும் நீயே உன்பிதா யானே.

மிரா:—
ஆண்டவனே யாம் யார்செய் சூதால்
மாட்சிமையழிந்து நாட்டைவிட்டகன்றேம்
அன்றேல்அதன்வழி நலன்நாம்உற்றோமா?

புரசு :—
சதிகே டுற்றுத் தாய்நாடடி னீங்கி
நற்பே றெய்தியாம் இவ்விடத் தேகினம்.

மிரா :—
என்பொருட் டண்ணல்நீ துன்புற்ற வெல்
லாம்
எண்ணுந் தொறுமென் னெஞ்சந் துடிப்பு
றும்.

புரசு :—அம்மகேள்,
குறுநில மன்னருட் பிரபல்யம் பெற்றுக்
கலைவல் லுநனுய் ஒப்புயர் வற்று
வாழுமந் நாளில்,
புரசு பரனும் அடியேன் நின்பிதா
அரசனத்தையுமந் தோனி யென்பான்
அன்பிற் குகந்தவென் சகோதரன் கைக்
கொடுத்
தானுகையைத் துறந்து ஞானமே நாடினன்
அவ்வமை யத்து,
சாற்றின யாவும் செவியுற் றனையா ?

மிரா :—
உற்றேன் ஐய சாலவும் உற்றேன்.

புரசு :—
அவ்வமை யத்து,
எளிய பதத்தனுய் ஓர்ந்துமுறை செய்தும்
அளியனுய்க் கொலையிற் கொடியாரை ஒறு
த்தும்
குடிதழீஇக் கோலோச்சி உலகடி தழுவ
வலிமை மிகுதலும் விரும்பின இயற்றி
அந்தோனியாம் சகோதரன் சூழ்ச்சிகொள்
மனத்தனும்
எந்தன் தகைமையும் ஆட்சியுங் காந்து
இராச்சிய மனைத்தையுங் கைப்பற் றினன்
காண்
செவிநீ சாய்த்தனைகொல்?

மிரா:—
சாய்த்தே னண்ணல்

புரசு:—
இங்ங னுக லௌகிகத் தினீங்கி
ஆத்மீகம் நாடி யாவையுந் துறந்துழி,
எல்லையில் என்னுடை நம்பிக்கையின் பதி
லாய்
புல்லிய னுயவன் சுபாவம் திரிய
அரசிறை வருமானம் முழுமையும் அபகரி
த் (து)
அதிகாரம் எல்லாம் தனதெனு வுன்னி
அவாவெனும் சுழித்தலைப்பட்டுமே யலைந்
தான்.

மிரா :—
சொற்ற யாவும் சுவையின் மிகுதியால்
எவ்வெவர் புலனையும் பற்றியீர்க்கும்மே.
(தொடரும்)

# ஜாவாத்தீவில் பழைய இந்திய நாகரீகம்

(Dr. A. J. பேர்னற் கெம்பேஸ்)

அரசாங்கத்தினரின் ஆதரவில் அமைக்கப்பட்டு நடைபெறும் "புராதன ஆசியாச் சங்கத்தின்" ஆதரவின் கீழ் சென்ற செவ்வாய்க்கிழமை Dr. பேர்னற் கெம்பேஸ் என்னும் போதகாசிரியர் பிரதம மந்திரியாராகும் சேர். D. B. ஜெயத்திலக்காவின் அக்கிராசனத்தில் செய்த பிரசங்கம் பின்வருமாறு:—

"இற்றைக்குப் பன்னூற்றுண்டுகட்கு முன்னராகவே ஜாவா முதலிய கீழ் இந்திய தீவுகள் போத்துக்கீசர், ஒல்லாந்தர் என்பவர்களால் நன்கு அறியப்பட்டனவாகும். அங்கிருந்து பெறப்படும் பலவகையான சரக்குகள் எங்கும் விரும்பிப் பெறப்படுவன. இந்தியாவிலிருந்து இந்துக்களும் சரக்குகள் (Spices) பெறுதற்காகவே இற்றைக்குப் பல்லாயிரம் நூற்றுண்டுகட்கு முன் அங்கு சென்றனர். இதுவன்றிப் பலவித லோகங்கள், இரத்தினக் கற்கள், விலையுயர்ந்த மரங்கள் அங்கே அதிகமாக புறநாடுகட்கு அனுப்பப்பட்டு வந்தன. முதலாம் நூற்றுண்டிலேயே இந்தியர்கள் இத்தீவுகட்குப் போக ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் இவர்கள் இத்தீவுகளில் குடியேற வேண்டுமென்று எண்ணவில்லை. ஆனல் 5-ம் நூற்றுண்டில் இவர்கள் ஜாவாத் தீவின் மேற்குப்பகுதிகளிலும், போர்னியோ தீவிலும் குடியேற ஆரம்பித்தனர். அதற்குப் பின் அங்குவந்த வியாபாரிகள் இத்தேசத்தை ஒரு இராசதானியாக்கினர்."

"பொதுவாக இந்தியாவிலிருந்து தேசப்பிரட்டம் செய்யப்பட்டவர்களும் பிராமணர்களும், வியாபாரிகளும் மற்றும்தேச சஞ்சாரிகளும் இத்தீவிற்கு வந்தனர். இங்கே வந்திறங்கினோர் மிகச் சிலராகலாம். ஆனல் போர்னியோ தீவிற்குச் சென்றவர்கள் மிகச் சிலரானமைபற்றி அங்குள்ளாருடன் கலந்து அமிழ்ந்தினர். தமது பெருமையை அல்லது நாகரீகத்தைப் பிரத்தியேகமாக நிலைநாட்டவியலாதவராயினர். ஐந்தாம் நூற்றுண்டின் பின் 200 வருடங்கட்கு என்ன நடந்துளதென்று அறியவியலாதிருக்கின்றது. இந்தக் காலத்தில் அநேக மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏழாம் நூற்றுண்டில் ஜாவாத் தீவில் இந்தியரின் அரசியல் மேற்பக்கத்தில் மாத்திரமன்றி மத்திய பாகங்களிலும் பரம்புவதாயிற்று. அங்கிருந்தே இந்திய நாகரீகம் தழைத்தோங்கி விருத்தியடைந்தது. ஜாவாவின் கிழக்குப் பாகங்களிலும் இந்தியரின் ஆதிக்கம் பரம்பியது."

"மிகப் பழைய காலந் தொடக்கமாக இந்துக்களும் ஜாவத்தீவிலுள்ள புராதன சாதியினரும் மிக அன்னியோன்னியமாக வாழ்ந்தனர் என்றே கூறவேண்டும். இந்துக்கள் தனித்து அரசு புரிந்தனரெனக் கூறின்அது ஐந்தாம் நூற்றுண்டுக்கு முன்னரே நடந்ததெனக் கூறவேண்டும். ஜாவாத் தீவில் காணப்படும் பழைய கட்டிடங்களில் காணப்படும் உரு நாடுகள் புராதன இந்திய சரித்திரங்களோடு சம்பந்தமுடையனவாயிருக்கக் காணலாம். இந்துக்களின் நாகரீகம் அங்குள்ள சிற்பங்களில் மாத்திரமன்றிப் பழைய காவியங்களிலும் தெளிவாக விளங்குகின்றன. பாலி என்னும் தீவில் இந்துக்களின் சிற்பமுறையில் கட்டப்பட்ட அநேக கட்டடங்கள் இருக்கின்றன. பிற்காலத்தில் மகமதியரின் அரசியல் வர ஆரம்பித்ததும் பழையன யாவும் மறைய ஆரம்பித்தன. இப்போது ஜாவாத்தீவில் வசிப்போர் மகமதியராயினும் அவர்களுடைய நாகரீகம், பழக்க வழக்கமென்பன இந்துக்களின் கொள்கைகள் போக்குகளுடன் சம்பந்தமுடையனவாயிருக்கக் காணலாம்.'


## தமிழ் மஞ்சரி

முதற் புத்தகம்

(ஆறும் வகுப்புக்குரியது)

வித்தியாசாலைகளினுபயோகத்துக்குரியதென இலங்கை வித்தியாபகுதியாரால் 3-3-36-ல் அங்கீகரிக்கப்பட்டது.

விலை சதம் 60.

வடஇலங்கைத்தமிழ்நூற்பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.

கிடைக்குமிடம் :-

தனலக்குமி புத்தகசாலை, சுன்னகம்.



## விளம்பரம்

கதிரமலையி லுறைகின்ற கதிர் வேலே! நினது திருவடி அடையவருகின்ற பக்தகோடிகளுக்குத்தொண்டு புரிவதற்காக விடையளித்தாய். 1927-ம் வருடம் மாணிக்ககங்கையி லிருந்து கதிரமலைசிகரம்வரை றோட்டைத் திறக்க கதிர் வேலே! நீ நல்லோர்மனதில் நடனம் புரிந்து பணம்கொடுப்பித்த கருணையால் முற்றுப்பெற நெருங்கிவிட்டது. அன்றுட்தொடக்கம் நின்னைப்பின்பற்றி வரும் பக்தகோடிகள் தாகசாந்தி செய்தற் பொருட்டு கதிரமலைச் சிகரத்தே தண்ணீர்ப்பந்தலை அமைப்பித்தாய். பின்பு ஆங்கோர் திருக்குள மமைக்கும் பொருட்டும் விடைதந்தாய். அத்திருக்குளத் திருப்பணியை நடப்பிக்க யாழ்ப்பாணவாசிகளிற் சிலர் ஊக்கத்தைத் தருவித்து கார்த்திகை மாசம் துவக்கம் இதுவரையில் வேலை நடப்பித்து, பணவசதிக் குறைவினுலும் ஒருவரும் பணந்தராதபடியாலும் வேலையை நிறுத்த உத்தேசித்திருக்கிறேன். பொருட்பாக்கிய முள்ள தனவந்தர்களாகிலும் கதிர்வேலே ஈகின்றாரில்லை. ஈந்தால் இவ்வருஷ முடிவிற்குள் நிறைவேற்றத் திடமுண்டு.

இதற்குப் பணமனுப்பும் விலாசம்:
ரமணசங்குசாது,
திசைமாறு போஸ்ட்.

(81) 9-2-36-12-4-36


தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி, னருளாதான் செய்யு மறம்.

## சுற்றாடல்.

—"வாராந்தன்."

தெரிவுபெற்ற பிரதிநிதிகள் தற்போது எங்கேயிருக்கிறார்களெனச் சொல்லமுடியாதிருக்கின்றது. தோல்வியுள்ளவர்கள் தங்கள் இல்லங்களிலிருக்கலாம். ஆனால் ஜெயமடைந்தவர்களுக்கே அதிகம் தொந்தரவு. தினமும் கணக்குப் புத்தகங்களுடன் விஜயம் செய்பவர்கள் ஒருபுறம், "கவுன்சிலுக்கனுப்பிவைத்தேன்; என்னைக் கவனிக்கவில்லையா?" என்பவர்களின்னொருபுறம். இந்தத் தொந்தரவுகளை நீக்குவதன்பொருட்டும் சிலர் மறைந்திருப்பர். சிலர் தாம் விரும்பிய நிர்வாகசபை யடைவதற்கோ அல்லது மந்திரிப்பதவி கோருவதற்கோ மற்றைய அங்கத்தவர்களின் சம்மதம் பெறச் சென்றிருப்பர்.

* * *

### பெட்டிகளில் என்ன கிடந்தன?

தேர்தல் தினத்தன்று இவர்களின் பெட்டிகளில் காணப்பட்டவை வாக்குச்சீட்டுகள் மாத்திரமன்று; சூதாடும் சீட்டுக்கள், விபூதி, மந்திரத்தகடுகள், மீன், விதைகள், அரிசிவகைகள்........ ஆதியனவாம். (ஆனால் பைத்தியகாரருக்கு வாக்குரிமை யில்லையென்பது ஞாபகத்திலிருக்கட்டும்) இது எரிச்சல், பொறாமை, மூடத்தன்மை முதலியவற்றின் தூண்டுகோலால் செய்யப்பட்டிருக்கலாம். சில பொருள்கள் சில சம்பவங்களைக் குறிக்கலாம். குறித்த அபேட்சகரின் பெட்டியில் அரிசியிட்டவன் அவர்மீது அனுதாபமுள்ளவனாகில் அது அறுகரிசியாயிருக்கலாம். குரோதமுள்ளவனாகில் அது என்ன அரிசியாயிருக்கவேண்டும்? நிற்க, இவற்றையிட்டவர்கள் ஒரு ஆயிரம் ரூபா நோட்டைப் பெட்டியிலிட்டுக் கட்டுக்காசு இழக்க நேரும் அபேட்சகரிடம் அதைக் கொடுக்கும்படி எழுதி ஓர் கடிதமும் இட்டிருந்தால் எவ்வளவு பெருங் கருணையாயிருக்கும்! * * *

### ஆனால்............

தேர்தல் விஷயமாக அபேட்சகருக்கு உதவியளித்தவர்கள் வாய்ப்போரும் கைப்போரும் புரிந்துகொண்டதல்லாது ஒருவராவது அபேட்சகரில் தாவவில்லை. அபேட்சகரும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்ளவில்லை. நாகரீகமடைந்த ஐரோப்பா முதலிய கண்டங்களில் அரசியல் விஷயங்களில் ஏற்படும் பேதங் காரணமாக தலைவர்கள் உயிர்தப்பிக்கொள்வதே அருமையாகும். லோயிட் ஜோர்ச் பலமுறை தமது அரசியல் பகைவரிடமிருந்து உயிர்தப்பியிருக்கிறார். சென்ற சிலநாட்களின் முன் லியன்பிளம் என்னும் பிரான்சுதேசத் தலைவரொருவர் மோட்டாரிரதத்தினின்றும் இழுக்கப்பெற்று அதிக தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டார். இதுபோன்ற சம்பவங்கள் இலங்கையிலும் மாத்தளைப்பகுதி முதலியவிடங்களில் தலைகாட்டத் தொடங்கியிருக்கின்றன. ஆகையால் மாத்தளை நாகரீகமடைந்துவிட்டதா? * *

### அடைபட்ட பிரதிநிதி

அம்பாந்தோட்டைப் பகுதிக்கு 12,097 கூடிய வாக்குச் சம்மதத்தால் பிரதிநிதியாகத் தெரிவுபெற்ற திரு. D. M. ராசபக்ஷா அவர்கள் தேர்தல் தினத்தன்று பிற்பகல் 4-மணியளவில் கொழும்பு டிஸ்திறிக் நீதிபதி விடுத்த விருந்து காரணமாக கைதிசெய்யப்பட்டு மறுநாள் பிணையில் விடப்பெற்றார். இவருக்கு அன்று நல்ல காலமும் கூடாதகாலமும் ஒருமித் துழைத்திருக்கின்றதுபோலும். நுவரெலியாப்பகுதிக்கு முன் பிரதிநிதியாகவிருந்த திரு. E. W. அபயகுணசேகரா அவர்களே இம்முறையும் 6,121 கூடிய தொகையால் தெரிவுபெற்றார். இவர் தேர்தல் தினத்தன்று நால்வரி லொருவராகிய திரு. இலங்காத்திலக்கா வென்னும் அபேட்சகர் தமது சார்பாக போட்டி செய்யாது பின்வாங்கிக்கொண்டாரென்றும் அவருக்காக சம்மதங்கொடுக்கவிருந்தவர்களைத் தமக்காகக் கொடுக்கும்படி அவர் விரும்பினாரெனவும் ஓர் துண்டுப்பத்திரம் விடுத்தாரென ஓர் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. "இவர் வெற்றியடைந்தார் என்பதை அத்தாட்சிப்படுத்தவேண்டிவரும்" என்று தோல்வியுற்ற அபேட்சகரில் ஒருவரான திரு. J. T. இரத்தினம் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். * ✣ *

### திரு. ஸ்ரீ பத்மநாதனின் தெரிவு.

சென்ற அரசாங்க சபையிலில்லாதிருந்த R. ஸ்ரீபத்மநாதன் அவர்கள் புதிய அரசாங்கசபையில் காணப்படுவது அநேகருக்குஉவகையளிக்கலாம். இவர் மன்னார்ப்பகுதியில் 2,000க்கு மேலான தொகையால் வெற்றிபெற்றுருக்கிறார். இவர் கைத்தொழில்மந்திரிப்பதவியையோ அல்லது தலைவர் பதவியையோ வகிக்கத் தகுதிபெற்றவரெனலாம். ஏழு பாஷைகள் தெரிந்தவர். இவருக்குமாறாக இவரது மைத்துனன் திரு. அ. மகாதேவாவும் அவருடன் வடமாகணப் பகுதிகளுக்குத் தெரிவுபெற்றமற்றிருவரும் மன்னார்த் தெரிவில் அதிக முயர்சி செய்தபோதிலும் அவர்களின் முயற்சிபயன் படவில்லை. இவர் தெரிவுபெற்றமை நமது யாழ்ப்பாணப் பிரதிநிதிகளுக்குப் பெரும் கிலேசத்தை உண்டுபண்ணியிருக்கலாம். இவருக்காக இவரது மனைவியாராகும் ஓர் பரிஸ்நகரப் பெண் தேர்தலில் அதிகம் முயற்சி செய்து வந்தாராம். அவர் தமிழிலேயேவாக்காளருடன் பேசிக்கொண்டாராம்.

* * *

### இலங்கை பிடிக்கப்பட்டது

சென்ற கிழமை அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த படக்காட்சிக் கம்பனியார் இலங்கையிலுள்ள அழகிய கட்டடங்களையும் காட்சிகளையும் படம் பிடித்துவிட்டார்கள் இலங்கையின் காட்சிகள் மிக அழகாகவிருக்கிறதெனவும் இவர்கள் கூறியுள்ளார்களாம். இப்படங்கள் 15,000 படக்காட்சி மண்டபங்களில் காண்பிக்கப்படுமாம்.

## அரசாங்கசபைக் குறிப்புகள்

அரசாங்கசபைத்தெரிவு ஒருபடி நடந்தேறியது. நாற்பத்துமூன்று பிரதிநிதிகள் தேர்தலில் சித்தியடைந்தனர். ஏழுபேர் போட்டியின்றித் தெரியப்பட்டனர். எல்லாமாகத் தெரியப்பட்ட பிரதிநிதிகள் தொகை ஐம்பதாகும். இன்னும் எட்டுப் பிரதிநிதிகள் தேசாதிபதியவர்களால் நியமிக்கப்படுவர். அவர்களுடன் மூன்று அரசாங்க உத்தியோகஸ்தருமாகச்சேர்ந்து எல்லாமாக 61 பேர் அரசாங்க சபையில் அங்கத்துவம் பெறுவர். தேர்தலில் சித்தியடைந்த தமிழர் தொகை பத்துப் பேராகும். தேசாதிபதியால் நியமிக்கப்படவிருக்கும் அங்கத்தவருள் இருவர் ஒருபோது மகமதியராவாரோவெனவும் பேசப்படுகின்றது. ஐரோப்பியரின் பிரதிநிதியாக இருவர் நியமிக்கப்படுவாராம். இந்தியப் பிரதிநிதியாக யாவர் நியமனம் பெறுவாரோ தெரியவில்லை. இலங்கைத் தமிழர்களில் எவராவது நியமனம் பெறுவாரோவென்பதும் திடமாகக் கூற வியலாதாகிறது.

* * *

பழைய அரசாங்கசபையில் அங்கத்தவர்களாவிருந்தவர்களில் 26 பேர் மாத்திரம் மறுபடியும் அங்கத்துவத்தைத் தேர்தல் முறையில் பெற்றனர். புதிதாகவந்த 24 பேரில் 23 பேர் தேர்தலில் போட்டிசெய்து வெற்றியடைந்தவராவர். ஒருவர் (ஊர்காவற்றுறைப் பிரதிநிதியாக வந்துள்ள ஸ்ரீமான் W. துரைசாமி) போட்டியின்றித் தெரியப்பட்டவராவர்.

* * *

இம்முறை அரசாங்கசபைத்தெரிவில் பங்குபற்றிய வாக்காளர்தொகை 11,46,182 பேராவர். இலங்கையிலுள்ள் வாக்குரிமை பெற்றோரின் மொத்தத்தொகையில் நூற்றுக்கு 54 பேரே தமது வாக்குரிமையை உபயோகித்தவராவர். ஆனால் 1931-ம் வருடம் நூற்றுக்கு 60 பேரே வாக்குரிமையை உபயோகித்தனர். அப்போது 13 இடங்களில் தேர்தல் நடக்கவில்லையாகும்.

* * *

தேர்தலில் வெற்றிபெற்றோரில் முதல்நிற்பவர் காலிப்பகுதிப் பிரதிநிதியாகும் மெஸ். அமரசூரியா அவர்களே. இவர் தமது எதிரியை 23,852 கூடிய பேரால் வெற்றியடைந்தனர். இரண்டாவதாக அதிகம் கூடியதொகையைப் பெற்றவர் மாத்துறைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட மெஸ். ராஜாஹெறவவித்தாரண அவர்களே. இவருக்கு மேலதிகமாக வாக்குக்கொடுத்தோர் 13 244 பேர்களாவர். மூன்றாவதாக ஹற்றன் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீமான் நடேசையர். தமது எதிரியை 12,689 வாக்கால் தோற்கடித்தனர்.

* * *

நிறங்கள் வரிசையில் வெற்றி நோக்குங்கால் சிவப்புக்கே அதிக வெற்றி கிடைத்ததெனலாம். 21 சிவப்பும், 12 பச்சையும், 6 வெள்ளையும், 2 மஞ்சளும், 1 கபிலையும், 1 சாம்பல்நிறமும் வெற்றியை அடைந்தன. தேர்தலில் பங்குபற்றிய அபேட்சகர் 117 பேர்களுள் 22 பேர் தாம் பிணையாகக் கட்டிய பணத்தை (ரூபா 1000) இழந்தனர். மொத்தம் அரசினர் 22,000 ரூபாக்களைப் பறிமுதல் செய்தனர். * *

அபேட்சகர் யாவரிலும் ஆகக் குறைந்த தொகையான வாக்குரிமையைப் (Votes) பெற்றவர் டெடிகமாவில் அபேட்சகராக நின்ற மெஸ். உடலகம என்பவரே. இவருக்கு ஆக மொத்தம் 179 பேரின் வாக்குகளே அளிக்கப்பட்டன. இருகட்சியும் மிக உக்கிரமாக வாதாடி வெற்றியைப் பெற்ற ஸ்தானம் கம்பளையேயாகும். இந்த ஸ்தானத்துக்குத்தெரியப்பட்ட மெஸ். R. S. S. குணவர்த்தன அவர்கள் தமது எதிரியை (மெஸ். பாணபொக்கா இவர் முன் சுகாதார மந்திரியாயிருந்தவர்) 184 வாக்குரிமைச் சீட்டுகளால் தோல்வியடையச்செய்தனர். வெற்றியடைந்தவர்க்கு 12,654 பேரும், தோல்வி யடைந்தவர்க்கு 12,286 பேரும் வாக்குக் கொடுத்தனர். * * *

வாக்குரிமை அளிக்க முன்வந்தோரில் 667 பேர் தமது வாக்குரிமைச் சீட்டினை எப்படிப் போடுவது என்பதை அறியாது அவைகளை வற்றமுறையில் உபயோகப்படுத்தாது விட்டனராம். இனி வெற்றிபெற்றோரை நோக்குவாம். இருபதினாயிரத்துக்குமேல் கூடிய தொகையால் (Majority) வெற்றிபெற்றோர் தொகை 1. பதினாயிரத்துக்குமேல் இருபதினாயிரத்துக்குள் கூடிய தொகையால் வெற்றிபெற்றோர் தொகை 6. ஐயாயிரத்துக்குமேல் பதினாயிரத்துள் கூடியதொகையால் வெற்றியடைந்தோர் தொகை 23. ஆயிரத்துக்கு மேல் ஐயாயிரத்துள் கூடியதொகையில் வெற்றியடைந்தோர் தொகை 11. ஆயிரத்துக்குள் கூடியதொகையால் வெற்றியடைந்தோர் தொகை 2.

* * *

இப் பொதுத்தேர்தலில் போட்டிசெய்த அபேட்சகர்கள் 117 பேர்களாவர். இவர்கள் யாவரும் பலவிதத்திலும் செலவுசெய்த மொத்தத் தொகை 25 லட்சம் ரூபாவுக்குக் குறையாதிருக்குமெனப் பலர் பேசிக்கொள்ளுகின்றனர். செலவுசெய்த பணம் இனி எப்போது திரும்பிவருமோ என்பதைத் திடமாகக் கூறவியலாதாகின்றது. அநேகர் பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்ததுமன்றி அதிகம் சிரமத்துக்கும் ஆளாயினர்.

### மயிலிட்டி வடக்கில் கோரக்கொலை

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த முருகர் சின்னையா என்னும் ஒருவர் தனது கட்டுமரத்தை அவிழ்ப்பதற்காகக் கடற்கரைக்குச் சென்றபோது அங்கு நின்ற அருணாசலம் என்னும் அவர் சகோதரமுறைபூண்ட ஒருவருடன் வாக்குவாதம் நேரிட்டு அதன் பலனாய் மேற்படி அருணாசலமென்பவர் சின்னையாவுக்கு அடித்தபோது அவர் விழுந்து உடனே மரணமானாரென ஓர் செய்தி எட்டுகிறது. பொலிசார் எதிரியைக் கைதுசெய்திருக்கின்றனர்.


## கப்பல் சாமான்கள்!

எங்கே சகாயம்?

வல்வெட்டித்துறையில் ஸ்தாபித்திருக்கும் இரும்புக்கடையில் கப்பல்கள், தோணிகள், வத்தைகளுக்குரிய கித்தான், செலுதார், கம்பிக்கயிறுகள், செம்புத் தகடுகள் மை வகைகள், நங்கூரங்கள், நங்கூரப்படங்களுக்காகிய இரும்புத் தகடுகளும், மற்றும் எவ்வகையான இரும்புச் சாமான்களும், தண்ணீர் பம்புகளும் அதற்குரிய குழாய்களும் கைவசம்இருக்கின்றன.

**CEYLON HARDWARE STORES**
**VALVETTITURAI**

*Head Office:*— "Jubilee Buildings"
Old Moor Street, COLOMBO.

(93) 15-3-36

# ஆலயம் செல்லுகையில் கடத்தப்பட்ட மேரிப்பிள்ளை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் முதலாம் எதிரிவீட்டுக்குச்சென்று சின்னப்பிள்ளையாய்இருந்தபோதும் அவனுடைய தாயார் இறந்தபோதும் போயிருக்கிறேன். இப்போ 1-ம் எதிரி அவனுடைய தயார் இருந்தவீட்டில் இருக்கிறதில்லை. இப்போ அவன் ஜோன் இராசா வீட்டில்தான் இருக்கிறான்.

அவன் இடையிடையே கல்கமுவாவுக்குச்செல்கிறவன். அவன் இப்படிக்கல்கமுவாவுக்குச்செல்கிறவன்என்று எனது சொந்தக்காரர் கதைக்கிறதைக் கேட்டிருக்கிறேன். அவனுடைய தாயார் 3 வருஷத்துக்குமுன் இறந்துவிட்டாள். அவள் இறந்த நாட்களில் நான் புலோலியில் வசித்தேன். நான் 2-ம் எதிரியைஒருகாலமும்காணவில்லை. நான் தமிழ் 3-ம் வகுப்புச் சித்தியெய்தியிருக்கிறேன். நான் ஒருவருக்கும் கையொப்பமிட்டுக் காகிதம் எழுதவில்லை.

2-ம் எதிரி என்னுடைய சொந்தக்காரன் நான் அவனை ஆசையப்பு என்று அழைக்கிறதுண்டு நான் சிறுபிள்ளையாய் இருந்த காலத்தில் எனது தயார் இப்படிக் கூப்பிடும்படி சொல்லித் தந்தவர்.

நீதியரசர்:

சில இடங்களில் உன்போன்ற பிள்ளைகள் தனியே போகிறதும் போகாமலிருக்கிறதுமுண்டு. சிலர் இளம் வாலிபருடனும் செல்கிறது உண்டு. ஆகையால்தான் நீ அப்படிச் செல்கிற வழக்கமுண்டா?

விடை:

நான் அப்படிப்போகிற வழக்கம் கிடையாது. ஏதாவது சமய விஷயம் அல்லது படிப்பு விஷயமாய் நடக்கும் கூட்டங்களுக்கு நான் போகிறதில்லை.

நியாயவாதி:

நீதியரசரைப்பார்த்து:- திருச்செல்வம் வீட்டுப் படலையில் நடந்த கூத்தைப் பற்றிய கவலைதான் எனக்கு உண்டு.

சாட்சி மீண்டும் கூறியதாவது:- நான் சென்றகார் மிகவும் வேகமாகச் சென்றது. இப்படிப்போகும் போதுதான் தவறணையடியில் உடையாரைக் கண்டேன். நான் உடையாரைக் கண்டபோது உடையாரப்பா என்று கூப்பிட்டேன்.

அப்போது அவர் என்னைத்திரும்பிப் பார்த்தவர். இதன் பின்னர்தான் சிங்கராசா மற்றவர்களைப் பார்த்து யோசேப்பு வருகிறார் என்று சொன்னார். நான் இந்தச் சத்தங் கேட்டதும் குஞ்சியப்பு என்று கூப்பிட்டேன். என்னையோர் காட்டு மார்க்கமாகக் கொண்டு சென்று ஓர் சைவக் கோவிலுக்குப் பக்கத்தில் காரை மறித்தனர் கார் நின்றதும் 2-ம் 3-ம் எதிரிகள் காரை விட்டு இறங்கி ஓர் காறடிப்பாதையால் போய்த்திரும்பி இன்னொருவனோடு வந்தார்கள். இவர்கள் போயிருந்த நேரத்தில் முதலாம் எதிரி என்னைப்பார்த்து நீ இனி என்ன செய்யப் போகிறாய். உன்னை இனி ஒருவரும் மணக்கமாட்டார்கள். ஆகையால் நீ என்னை முடித்துக்கொள். அவர்கள் திரும்பி வந்ததும் எல்லாருமாகக் கலந்து கதைத்து விட்டு என்னிடம் வந்து "வீட்டை போவோம் வா" என்று சொல்லிக் கூட்டிக்கொண்டு ஓர் வீட்டுக்குச் சென்றனர். நான் காரை விட்டு வீட்டுக்குப்போக இறங்கினதும் மற்றவர்களும் காரும் (ஆனால் 1-ம் எதிரி என்னுடன்தான் நின்றவன்) சென்றுவிட்டார்கள். நான் சென்ற வீட்டில் 2 பெண்களும் 1 ஆணும் வசித்தனர். வீட்டுக்காரனிடம் என்னை இப்படிக் களவாகத் தூக்கிக்கொண்டு வந்து விட்டார்களெனச் சொன்னேன். அவர்கள் ஒன்றும் பேசவில்லை. என்னை 1-ம் எதிரி வீட்டு அறைக்குள் போகும்படி சொன்னார் நான் மறுத்தேன். அவர் எனது கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோனார். அவர் என் அறைக்குக் கூட்டிச்சென்றார் என்று என்னால் சொல்லமுடியாது. அறைக்குள் வெளிச்சமிருந்தது. சிறிது நேரம்சென்றபின் நளக்கந்தன் காரையும் கொண்டு அவ்விடம் வந்தான். நான் அவனைப் பார்த்து "கந்தன் நீயுமா வந்துவிட்டாய்," என்று சொல்லிவிட்டு என்னை வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போகும்படி கேட்டான். 7-ம் எதிரி கந்தன் அவ்விடத்தில் எனக்கு 1-ம் எதிரியைக் கலியாணம் முடிக்கும்படி புத்திமதி கூறினான். அப்படி நான் செய்தால் அச்சுவேலிக்கிராமக்கோட்டு நீதிபதி நல்ல நகை முதலியன கொடுப்பார் என்று சொன்னான். அன்று எனது மானத்தைக் கெடுத்தற்கு ஒன்றும் செய்யவில்லை. ஆனால் தன்னை விவாகம் செய்து கொள்ளும்படி மாத்திரம் கேட்டான். இதன் பிற்பாடு வேறோர் வீட்டுக்குக் கொண்டுபோகப் பட்டேன். அங்கிருந்து 5-ம் எதிரியாகிய முத்தன் வீட்டுக்குக் கொண்டுபோகப் பட்டேன். இதற்கிடையில் காருக்கு பெற்றோல் வாங்கினார்கள். இரா முழுதும் நித்திரை கொள்ளவில்லை. முத்தன் வீட்டிலும் நான் முத்தனுடைய மனைவிக்குச் சம்பவத்தைச் சொன்னேன். அவள் அவ்விடத்தில் நிற்கிறதற்கு விட வேண்டாம் என்று புருஷனிடம் சொல்லவும் அதையவர் கவனிக்கவில்லை. அங்கே 3 நாட்கள் நின்றேன். வியாழக்கிழமை காலை 6 மணியளவில் தான் முத்தன் வீட்டில் இறங்கினோம். இது வரையிலும் நான் ஒன்றும் சாப்பிடவில்லை. ஆனால் தண்ணீர் மாத்திரம் குடித்தேன். முத்தன் வீட்டில் தான் சாப்பிட்டேன். 1-ம் எதிரி என்னுடன் தான் அறையில் படுத்திருந்தவன் அவன் எனக்கு ஒன்றும்செய்யவில்லை. ஆனால் தன்னைக் கலியாணம்முடிக்கும்படி கேட்டான். நாங்கள் வெவ்வேறு பாயில் தான் நித்திரை செய்தோம். நான் எனது உடுப்புக்களை மாற்றவில்லை. இதன் பிற்பாடு துன்னாலையிலிருக்கும் ஓர் கல்வீட்டுக்குக் கொண்டு போகப் பட்டேன். அங்கே 1-ம் எதிரி எனது ................................ நடக்க எத்தனித்தார். நான் இடங்கொடாது சத்தமிட்டேன். இவ்விடம் விட்டுத் திரும்ப சரவணையின் வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டேன். இங்கிருந்து மட்டுவில் வீட்டுக்குக் கொண்டு போகப் பட்டேன். அங்குதான் நிக்கலஸ் வந்து சந்தித்தவர் அவர் வந்த பின்புதான் மணியகாரன் வந்தவர் நிக்கலஸ் செபமாலையைக் கொண்டு சத்தியம் செய்வித்தவர். அவர் என்னை எனது எண்ணத்துக்குத் தான் சென்றதாக சொல்லச் சொன்னார். மணியகாரன் எனது வாய்ப்பிறப்பை எடுக்கவர். அடுத்தநாள் தான் கோட்டுக்குச் சென்றோம். மணியகாரன் நான் தனக்குச் சொன்னதுபோலத்தான் கோட்டிலும் சொல்லவேண்டும். இல்லையேல் மறியலுக்குப் போகவேண்டி நேரிடும் என்று பயமுறுத்தினவர். ஆகையால் தான் முதல் முறை கோட்டில் சொன்னதற்கும் 2-முறை சொன்னதற்கும் வித்தியாசம் ஏற்பட்டது. 1-ம் முறை பொய்தான் சொன்னேன். சந்தியாகுசாமி என்னைக்கண்டு ஏன் பொய் சொன்னாய் பிள்ளை? உண்மையைப் போய்ச்சொல்லு. என்று சொன்னார் ஆனபடியால் 2-ம் முறை உண்மையைக் கூறினேன்"

மேரிப்பிள்ளையை எதிரிகளுக்காக ஏற்பட்டிருக்கும் நியாயவாதி திரு. துரைசுவாமி தம்பு பின்வருமாறு குறுக்குவிசாரணை செய்தார்.

(1-ம் எதிரியைக் கூட்டில் இருந்து அழைத்து மேரிப்பிள்ளைக்குக் காட்டி) இந்த எதிரியை நீ கண்டிருக்கிறாயா?—ஓம்.

முன்னையிலும் பார்க்க இந்த எதிரி இப்போது தளர்ச்சியுற்றிருக்கின்?—இல்லை.

உமக்குத் தம்பரைத் தெரியுமா?—ஓம்.

பொலிஸ்கோட்டில் நீ இந்த எதிரியைப்பார்த்தபோது அவன் சிலவருஷங்களுக்குமுன் இருந்ததிலும்பார்க்க அந்தநேரத்தில் மாறியிருக்கிறதாகக் கூறினாய்?—ஓம், நான் அப்படிச்சொன்னேன்.

அவன் உன்னைக் காரில் தூக்கி ஏற்றும்போது, அவனை நீ உண்மையில் மட்டிட்டுக்கொள்ளவில்லையா?—காரில் இருக்கும்போதே மட்டிட்டுக்கொண்டேன்.

நீ தம்பர் வீட்டில் ஓர் வேலைக்காரியாகத்தான் இருந்தாய்?—ஓம்.

உன்னுடைய சகோதரியும் அங்கேயே வேலைக்காரியாகத்தான் இருந்தாள்?—ஓம்.

நீங்கள் மிகவும் வறியவர்கள்; ஆனபடியால்தான் அங்கே வேலைக்கிருக்கிறீர்கள்?—ஓம்.

அச்சுவேலியில்வசிக்கும் ஜோன் இராசாவை உனக்குத் தெரியுமா?—தெரியும்.

தம்பருக்குச் சூசைப்பிள்ளை என்று ஓர் வண்டிக்காரன் உண்டு அல்லவா?—தெரியாது.

உனது தங்கைச்சிக்கு அவன் அங்கே நிற்பது தெரியும்?—அவள் அங்கே வசிக்கிறாள். அவளுக்குத் தெரியலாம், ஆனால் எனக்குத்தெரியாது.

உனக்குப் பெருந்தொகைச் சீதனம் தருவதாகச் சொல்லிச் சூசைப்பிள்ளைக்குக் கலியாணம் பேசினார்களல்லவா?—(மறுமொழியில்லை)

உனது தந்தையும் தாயும் முறைப்படி விவாகஞ் செய்துகொள்ளவில்லை?—எனக்குத் தெரியாது.

சந்தியாகுச்சுவாமியை உனக்குத் தெரியும்?—ஓம்,

அவர் உங்கள் சொந்தக்காரரா—இல்லை.

அவர் அச்சுவேலியில் எவ்வளவு காலமாயிருக்கிறார்?— 5 வருஷமாய்

உனக்கும் உனது சகோதரிக்கும் அவரை நல்லாய்த்தெரியும்—ஓ

அவருடைய பிரசங்கங்களுக்கு அநேக ஜனங்கள் கூடுவது வழக்கம்?—ஓம்.

உன்னுடைய சகோதரியை யாரும் அக்கோவிலுக்குச் சமீபமாய்த் தூக்கிக்கொண்டுபோனால் நீ ஓடிப்போய்ச் சாமியாருக்குச் சொல்லுவாய்?—இல்லை வீட்டுக்கு ஓடிப்போய்ப் பெற்றோரிடஞ் சொல்லுவேன்.

நீ காரில் சென்றபோது உடையாரைக்கண்டு 'உடையார்ச் சிற்றப்பு' என்று அழைத்தனையோ?— இல்லை உடையாரப்பா என்றேன்.

உடையார் உங்கள் சொந்தக்காரனா?—ஓம் என்றுதான் என் தாய் சொல்லித்தந்தவ.

உன்னைத் தூக்கினபோது உனது தங்கச்சி 'அக்கா அக்கா' என்று கத்தினாளோ?—ஓம்.

நீ ஏன் அப்பொழுது அவளுக்கு வந்தனம் சொல்லிவிட்டுச் சந்தோஷமாய்ச் செல்லவில்லை?—(மவுனம்)

இதன்பின் அச்சுவேலிக் கட்டளைக் குருவான வண. சந்தியாகுச்சுவாமியார் சாட்சியம் பகர்ந்தார். அவர் கூறியன வருமாறு:—

"நான்தான் அச்சுவேலி குரு; சென்ற 5 வருஷகாலமாக நான் கட்டளைக்குருவாய்க் கடமைபார்த்து வருகிறேன். இங்கே ஐந்து தேவாலயங்கள் உண்டு புதன் கிழமைகளில் எனது கோவிலில் கூட்டம் கூடுவது வழக்கம். அந்தக் கோவிலில் இருவிறாந்தைகள் உண்டு.

சகலரும் அக்கூட்டத்திற்கு வருவார்கள். இது சம்பவம் நடந்த தினத்தன்று, தேவாலயத்தில் பாவமன்னிப்புக் கொடுத்திருந்தேன். அந்தநேரத்தில் ஓர் சத்தம் கேட்டது. மீண்டும் அந்தச்சத்தம் கேட்டது. முதற்சத்தம் கேட்டதும் வெளிவிறாந்தையில் நின்றவர்கள் யாவரும் ஓடி வந்தனர். இதன் பின் அன்னம்மா என்பவள் நடந்த சம்பவம் முழுவதையும் எனக்குக் கூறினாள். மேரிப்பிள்ளை பலாத்காரமாகக் கடத்தப்பட்டாள் என்பதே எனது துணிபு. இதுவிஷயமாய் நான் உபதேசியாரிடம் கேட்டதற்கு, அவர் மேரிப்பிள்ளை பலாத்காரமாகத் தூக்கிக் காரில் இடப்பட்டுக்கொண்டு போகப்பட்டாள் என்று கூறினார். இந்த அக்கிரமங்களைத் தேவாலயத்து அதிகாரம் மூலமாகத் தண்டிக்கவேண்டும் எனக்கருதி அடுத்தநாள் தேவாலயத்தில் ஓர்கூட்டம்கூட்டுவித்தேன். அநேகர் என் முன் சாட்சியம் கொடுத்தனர். சிறிது நேரஞ் செல்ல பொலிஸ் விதானையும் வந்தார்.

15 நாட்களின் பின் மேரிப்பிள்ளை வந்தாள். பொலிஸ் கோட்டில் சில பொய்களைச் சொன்னதாக அவள் எனக்குக் கூறினாள். ஏன் பொய்சொன்னாய் போய் உண்மையே சொல் என்று அவளைப் பணித்தேன்.

கடத்தப்பட்ட மேரிப் பிள்ளையை எனக்குத் தெரியும்; அவள் ஓர் நல்லபிள்ளை அவள் கீழ்ப்படிவுக் குணமுள்ளவள்.

திரு. துரைசுவாமியின் குறுக்கு விசாரணை.

மேரிப்பிள்ளை விஷயத்தில் நீர் முதலில் இருந்து கடைசிவரைக்கும் அக்கறை எடுத்திருக்கிறீர் என்பதை ஒத்துக்கொள்ளுகிறீர்? — இல்லை.

இது விஷயத்திற் சாட்சியம் சொல்ல நீர் ஏன் முன்வந்தீர்? — நீதியைப் பாதுகாப்பதற்காகவே.

மேரிப்பிள்ளை நல்லவள் என்றுதான் நீர் சொல்லுவீரா?— அவட்கு விரோதமாக நான் சொல்லத் தக்கது யாதும் இல்லை.

மேரிப்பிள்ளை உமக்குச் சமீபமாக வரும்போது சற்று நாணம் அச்சம் கொண்டிருந்தவளா?—இல்லை

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்களியற்றிய

புதிய தமிழ் அக்ஷரகணிதம்

[3-ம் பதிப்பு]

13-8-32-ல் வித்தியாகர்த்தரின் அங்கீகாரம்பெற்றது

சகல பிரபல புஸ்தக வியாபாரிகளிடமும் பெறலாகும்.

Publishers: வட லங்கா புஸ்தகசாலை, பருத்தித்துறை.

வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின், மெலியார்மேற் செல்லு மிடத்து.

# புதிய அரசாங்கசபை ஆரவாரம்.

## பதவிகள் பங்கிடுவதற்கு முயற்சிகள்.

## சிங்கள மயமாக்கச் சூட்சிகள்?

### தமிழ்த் தலைவர்களின் தாண்டவம். | தேசாதிபதியின் நியமனங்கள்.

## தலைவர் யார்? மந்திரிமார் யார்? யார்?

(நமது அரசியல் நிருபர்.)

கொழும்பு, 13

[புதிய அரசாங்கசபை 61 அங்கத்தவருடன் பூரணமானது. தேசாதிபதி பின்வரும் அங்கத்தவர்களை நியமனஞ் செய்துவிட்டார். (1) திரு. G. A. வில்லி (பறங்கியரின் பிரதிநிதி), (2) திரு. A. R. A. ராஜிக் (இலங்கை மகமதிய பிரதிநிதி), (3) திரு. T. B. ஜயா (மலாயர்களின் பிரதிநிதி), (4) I. X. பெரேரா (இந்தியர்களின் பிரதிநிதி), (5) திரு. M. J. கேரி, (6) திரு. E. C. வில்லியேர்ஸ், (7) திரு F. H. கிறிவித், (8) திரு. H. F. பார்வித் (ஐரோப்பிய பிரதிநிதிகள்). வருகிற செவ்வாய்க்கிழமை தலைவர் தெரிவுசெய்யப்படுவோர். அதன்பின் நிர்வாகசபைகள் வகுக்கப்பெற்று மந்திரிமார் நியமனம்பெறுவர். அரசாங்கசபையில் ஆக உள்ளது ஏழு மந்திரிப்பதவிகளும், ஒரு தலைவர் பதவியும், இரு பதில் தலைவர்ப் பதவிகளுமேயாம். இப்பதவிகளை 30 பேர்வரையில் அவாவி நிற்கின்றனர். தலைவர்பதவிக்கும் மந்திரிப்பதவி ஒவ்வோன்றிற்கும் மாதச்சம்பளம் ரூபா 1,500. இதை எவர் விரும்பாதிருப்பர்.]

உண்மையைக்கூறில் அரசாங்க சபையில் இருகட்சிகளுண்டு. ஒன்று ஜெயத்திலகா, செனனாயக்கா என்னுமிருவரையும் ஆதரிப்பது. மற்றது அவர்களின் எதிர்க்கட்சியாகும், "காங்கிரஸ் கட்சியார்" என்று கூறப்படும் ஜயத்திலக்க கோஷ்டியார், பெரும்பதவிகள் எல்லாவற்றிற்கும் சிங்களரையும் ஓர் சிறுபதவிக்கு மாத்திரம் சிங்களருடன் சேர்ந்து அக்காலத்தில் டொனமூர்த் திட்டத்தை ஆதரித்து நின்ற மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. E. R. தம்பிமுத்துவின் பெயரையும் குறிப்பிட்டு வைத்திருக்கிறார்கள். இதுகாரணமாகச் சிங்களர் தமிழர்மீது குற்றம் பாராட்டுகிறார்களென்பது தகாது. ஒரு சமையம் தமிழர் தெரிந்தனுப்பிய பிரதிநிதிகள் சிலரில் அல்லது மூவரில் சிங்களருக்குக் குரோத மேற்பட்டிருக்கலாம். இதில் சேர் ஜெயத்திலக்காவினது மைத்துனராகிய திரு. C. பத்துவன்துடாவையை சுயஸ்தாபன மந்திரியாராகக் குறிப்பிடாதிருப்பது நூதனமாகவிருக்கிறது. ஒவ்வொரு இரவும் இப்பதவிகளைப் பங்கிடுதற்கு ஆலோசனைக் கூட்டங்கள் தலைவர்கள் இல்லங்களில் நடைபெற்றுவருகின்றன.

### தலைவர் பதவி

சென்ற சபையில் சுய ஸ்தாபன மந்திரியாகவிருந்த திரு. C பத்துவான்துடாவையும், பலப்பிட்டிப்பகுதிப் பிரதிநிதி திரு. பிரான்சிஸ் டீ சொய்சா அவர்களும், திரு. E. R. தம்பிமுத்து அவர்களும் அரசாங்கசபைத் தலைவராகமுன்வர அவாவிநிற்கின்றனர். இதில் மூன்றுபேருக்கும் போதிய ஆதரவிருக்கின்றதெனக் கூறவேண்டியிருக்கிறது. திரு. சொய்சா திட்டத்தை நன்கு விளங்கியவர். திரு. தம்பிமுத்துவுக்குத் தலைவர் பதவியைக் காட்டிலும் மந்திரிப்பதவியே பொருத்தமானதாகும். திரு. பத்துவன்துடாவை சென்ற சபையில் மந்திரியாராகவிருந்த கௌரவத்தைக்கொண்டு தலைவர் பதவியைக் கோருகின்றார்போலும். திரு, அ. மகாதேவாவும் இதற்குத் தலைகாட்டுகிறார். இப்பதவி திரு. சொய்சாவையே சேருமென்று கூறலாம்.

### மந்திரிப் பதவிகள்

உள்நாட்டு மந்திரியாக சேர் D. B. ஜெயத்திலக்காவும், கமத்தொழில் மந்திரியாக திரு. செனனாயக்காவும், சுய ஸ்தாபன மந்திரியாகத் திரு. S. W. R. D. பண்டாரநாயக்காவும் போட்டியின்றித் தெரிவுபெறலாம். கடைசியாகக் குறிப்பிடப்பட்டவர் இப்பதவியில் கருணைகொண்டிருப்பதை முன்னிட்டு முன் மந்திரியாக விருந்தவர் மரியாதையாக விட்டு விலகிவிட்டார். இவர் இப்பதவியடைவார் என்பது நிச்சயமாதலின் கொழும்புச் சட்டசபை வாசிகளிலும் அநேகர் இவருக்குச் சந்தோஷங்கூறிவிட்டனர். இவர் சகல கட்சிகளிலும் காணப்படுகின்றார். ஆனால் ஓர் அங்கத்தவர் முயலுடன் ஓடிக்கொண்டு நாயுடன் வேட்டையாடுவதெப்படி என்பது காணக்கிடக்கின்றது.

திரு. G. C. S. கோரியாவும், திரு. A. E. குணசிங்காவும் கைத்தொழில், வியாபாரப்பகுதி மந்திரியாதற்குப் போட்டிசெய்ய முன்வந்துள்ளார்கள். ஹற்றன் பிரதிநிதி திரு. K. நடேசையரும் கண்ணுங் கருத்துமாகத்தானிருக்கிறார். இப்பதவியிலேயே நமது திரு. G. G. பொன்னம்பலமும், திரு. R. ஸ்ரீபத்மநாதனும் இரகசியமாகக் காதல்கொண்டிருக்கிறார்களாம். எட்டுப்பேர் உள்ள ஓர் நிர்வாகசபையில் நாலுபேர் போட்டிசெய்தால் அதிஷ்டமுள்ளவர் மந்திரியாவதும் சுலபந்தான். இச்சபையில் சிங்களரோ, இலங்கைத் தமிழரோ, இந்தியரோ கூடவிருப்பார்களென்பதே கேள்வி. இதில் கூடுகிற பகுதியிலுள்ளவருக்கே அதிஷ்டம்.

கல்விப்பகுதி மந்திரியாவதற்கு முன்னிருந்தமந்திரியார் திரு. C. W. W. கன்னங்கராவும், கொழும்புதென் பகுதி பிரதிநிதி டக்டர் வ. பீ. டீ. சொய்சாவும் தும்பறைப் பிரதிநிதி திரு. வ. ரத்னாயக்காவும் போட்டிசெய்வார்கள். இவர்கள் மூவரும் போட்டிசெய்வார்களாயின் இந்த நிர்வாக சபைக்குள் அங்கத்துவம்பெறக் காத்திருக்கும் தமிழ் அங்கத்தவர் ஒருவரும் நிச்சயமாகப் போட்டிசெய்வார் போலிருக்கிறது.

சுகாதாரப்பகுதி மந்திரியாராவதற்கு கண்டிப்பிரதிநிதி திரு. ஜோர்ச் E. D. சில்வா அதிகம் ஆவல்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. திரு. W. A. D. சில்வா உபதலைவராகக் காத்திருந்தபோதிலும் ஒருபகுதியார் உற்சாகப்படுத்தியது காரணமாக இப்பதவிக்குப் போட்டிசெய்ய முன்வந்திருக்கிறார். முழுச்சபையிலும் ஒரேயொரு வைத்தியர் தெரிவுபெற்றிருக்கிறார். ஆனால் வைத்தியரையே சுகாதாரப்பகுதிக்கு மந்திரியாக்க வேண்டுமென்பது இதில் கவனிக்கப்படமாட்டாது.

குருநாக்கல் பகுதியிலிருந்து போட்டியின்றித் தெரிவுபெற்ற திரு. J. L. கொத்தலாவலை தன்னை போக்குவரத்து நிர்வாகசபைக்குள் 'வோட்' பண்ணிவிடும்படி அங்கத்தவர்களை வேண்டிநிற்கிறாராம். காலிப் பிரதிநிதி திரு. H. W. அமரசூரியாவும் தற்போது பதில் மந்திரியாராகவிருக்கும் E. C. விலியேஸ் என்பவரும் இப்பதவியைத்தான் அபேட்சித்து நிற்கிறாராம்.

தமிழ் பிரதிநிதியாகிய திரு. W. துரைசுவாமியைப் போட்டியின்றி இப்பதவிக்கு விடுவதாகவும் ஓர் கதையிருக்கிறது. ஆனால் இதை ஒருபோதும் காத்திருக்கமுடியாது.

குறித்த பிரதிநிதிக்கு மந்திரிப் பதவி கிடையாவிட்டால் உடனே தனது ஆசனத்தை விட்டு விலகுவாரென்றும் ஓர் கதை பரப்புகின்றது.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் போட்டி செய்யும்போது சிங்களருடன் யுத்தம்செய்வதே தமது முழுநோக்கமெனக் கூறிச் சென்ற திரு. அ. மகாதேவா தற்பொழுது சிங்களப்பிரதிகளின் வீட்டுக்கதவண்டைகளிற் தொப்பி ஏந்திய கையுடன் காணப்படுகிறாராம், இவர் தலைவராதற்கு அல்லது உபதலைவராதற்கு சிங்களப் பிரதிநிதிகளின் ஆதரவு வேண்டி நிற்கிறாராம். சிங்களர் நாகத்தின் வாயிற் கையைக் கொடுப்பார்களா? இவருக்கு எப்பதவியும் கிடையாதென்றே கூற வேண்டியிருக்கிறது. சில சிங்கள அங்கத்தவர் இவருக்குத் தகுந்த விடையளித் தனுப்பியிருக்கிறார்களாம், உபதலைவர் பதவி திரு. E. R. தம்பிமுத்துவுக்கு ஒருசமையம்கிடைக்கக்கூடும். ஆயினும் திரு. R. S. S. குணவர்த்தனவும் திரு. அ. மகாதேவாவும் இதை அவாவி நிற்கிறார்கள்.

நிர்வாகசபை உபதலைவர்ப்பதவி திரு. R S. தெனக்கோன் அவர்களைச் சேரும்போலிருக்கிறது. ஆயினும் நிச்சயமாகக் கூறமுடியாதிருக்கின்றது.

வேறும் அநேகர் பதவிவேட்டையாடுவதற்கு இரகசியமான சூட்சிகள் செய்துகொண்டே யிருக்கிறார்கள் ஆதலின் நிர்வாகசபை வகுக்கப்படமுன் நிச்சயமாக ஒன்றுங்கூறவியலாதிருக்கின்றது.


# பூகோளம்

[கா. இளையதம்பி அவர்களின் பதிப்பு]

1. **பூகோளம் முதலாம் பாகம்**
   (ஐந்தாம் வகுப்புக்குரியது) .... சதம் 70
2. **பூகோளம் இரண்டாம் பாகம்**
   (ஆறும் வகுப்புக்குரியது) .... சதம் 85
3. **பூகோளம் மூன்றும் பாகம்**
   (ஏழாம் வகுப்புக்குரியது) .... ரூ. 1-00
4. **பூகோளம் நான்காம் பாகம்**
   (கனிஷ்ட, சியேஷ்ட பாடசாலை விடுகைத் தராதர பத்திர பரீட்சைகளுக்கும், ஆசிரிய கலாசாலைப் பரீட்சைகளுக்கும் ஏற்ப இயற்றப்பட்டது) ரூ. 1-50

## பூகோளம் நான்காம் பாகத்தின் மதிப்புரை

ஸ்ரீமான் கா. இளையதம்பி அவர்களாலெழுதப்பட்ட பூமிசாஸ்திர புஸ்தகங்கள் முந்தியே உபயோகத்திலிருக்கின்றன. இப்போதைய பிரசுரம் அவர்களுடைய நூற்றொடரின் கடையாகின்றது. இது ஜே. எஸ். ஸீ க்கும் உயர்தரப் பரீட்சைகளுக்கும் உரியது. பூமிசாஸ்திர விஷயமாக இப்புஸ்தகம் மிகவும் அடக்கமானது. சாஸ்திரப்பகுதியில் மிகவும் பிரயோசனமான விஷயங்களைக் கொண்டுள்ளது.

இக்காலத்துக்கேற்றதாக இந்நூலை அமைப்பதற்கு இதன் ஆக்கியோன் எடுத்துக்கொண்ட சிரமம் பாராட்டத்தக்கது. ஆசிரியர்கள் உலக சங்கிரகம் முழுவதையும் அடக்குவதற்கு இப்புத்தகம் மிகவும் உதவியாயிருக்குமென்று காண்பார்கள்.

அரசினர் ஆசிரியகலாசாலை
கோப்பாய், 27-1-36 } எஸ். கே. இராசசிங்கம் பீ. ஏ.


## கோட்டுவிற்பனவுவிளம்பரம்

இல. 8130

புன்னாலைக்கட்டுவன் இராமு முருகேசு பெண் 2. சின்னச்சிப்பிள்ளை வழக்காளி
புன்னாலைக்கட்டுவன் தாமோதரம்பிள்ளை -முத்துச்சாமி எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 8130-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக்காணிகளை 1936-ம் ௵ சித்திரை மீ 7-௳ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்.

(1) வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திக் வலிகாமம் வடக்கைச்சேர்ந்த புன்னாலைக்கட்டுவனில் இருக்கும் காணி 'கொங்சிட்டி' நிலப்பரப்பு இல. 15 இதில் சொரியலாக ·2 பங்கும் கொகசிட்டிக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உருத்தும் மேற்குக்கு. எல்லைகள்: கிழக்கு வயிரவி பெண் எல்லைக்கும் சின்னத்தம்பி பெண் நாச்சனுக்கும், தெற்கு முதலித்தம்பி பெண் சிதம்பரத்துக்கும் பங்காளர்களுக்கும் வல்லிபுரம்பெண் அன்னப்பிள்ளைக்கும் பங்காளர்களுக்கும் மேற்கும் வடக்கும் ஈவினை கிராமமுடிவும் இதிலுள்ள பனைகளும் மற்றும் வான்பயிர் செய்பயிர்களும்.

(2) "அற்றைபக்கலட்டி" நிலப்பரப்பு இல 25 இதில் கிழக்குப்பக்கமாக 12·2 பரப்பும் மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும், வான்பயிர் செய்பயிர்களும் எல்லைகளில் இருக்கும் வேம்புகளில் பங்கும், இந்த 12·2 பரப்புக்கும் எல்லைகள் கிழக்கு சுப்பையா இளையதம்பிக்கும் சண்முகம் பண்டாரத்துக்கும் தெற்கு ஒழுங்கை மேற்கு கந்தையாபெண் நல்லம்மைக்கும் வடக்கு கிருஷ்ணர் பெண் சின்னம்மாவுக்கும் இந்த எல்லைகளுக்குள் அடங்கியவைகளும் சேர்ந்தவைகளும்.

யாழ்ப்பாணம், 1936௵ பங்குனிமீ 4-௳
R. Vaithespara Iyer
(99) 15-3-36 கொமிஷனர்.

**வலியவன் மெலியவனை வருத்தச் செல்லும்போது தன்னிலும் வலியன் தன்னை வருத்தவந்த விடத்துள்ள தன் நிலையை நினைக்கக்கடவன்.**

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு
ஒருவனே கடவுள்
ஈழகேசரி

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவ௵ பங்குனி௴ ௳௨

# ஜெர்மனியரின் யுத்த சன்னதம்

சடுதியாக யாவரும் எதிர்பாராதிருக்க ஜெர்மனியர் சமாதான உடன்படிக்கைகட்கு மாறுகச் சேனைகளை ஜெர்மனியின்மேற்கெல்லைப் புறத்திலிருக்கும் றயின் மாகாணத்துக்குள் கொண்டு சென்றுவிட்டனர். அத்துடன் நிற்கப்போகின்றனரா? அன்று. போதிய அரண்களும் ஏற்படுத்தப் போகின்றனராம் ஜெர்மனியர் செய்வதைக்கண்டு பிரான்ஸியர் வியாகுலமடைந்து மிகுந்த பரபரப்புடன் என்னசெய்வதென் றறியாது தங்கள் நண்பர்களை நோக்கிப் பரிதபிக்கின்றனர் இப்போது பிரான்ஸியரும் தமது கிழக்கெல்லைப்புறத்தை அரண்செய்யவேண்டியவ ராகின்றனர். எல்லா நிபந்தனைகளையும் மீறி ஜெர்மனியர் நடந்துவிட்டனரே. அதற்கு யாது செய்வது? என்னசொன்னாலும், யார் சொன்னாலும் ஜெர்மனியர் செவி மடுக்கின்றாரில்லை. எனக்கேன்னென் றிருந்தவர்—இனித் தனக்குவந்ததும் விழிப்பாரா?

சர்வதேச சங்கத்தினர் தாமதஞ் செய்யாது நடபடிக்கைகள் இத்தாலியர்க்கு மாறுகக் கையாள்வதற்கு இடைவிடாது தடைபுரிந்து வந்தவரும் புரிகின்றவரும் பிரான்ஸியரேயாவர். அவர்கள் நடபடிக்கைகள விஷயத்தில் திடமாக நின்றிருப்பின் அபிசீனிய யுத்தம் இற்றைக்குச் சிலமாதங்கட்கு முன்னரேயே முடிந்துவிடுமே. இப்போது இத்தாலியர் அபிசீனியர்க்குப் பெருநட்டத்தை விளைத்துப் பெரிய வெற்றிகளைப்பெற்று இறுமாப்படைய, அபிசீனியர் கலக்கமடைகின்றனர். இவை யாவும் சம்பவித்தற்குக் காரணரா யிருந்தவர் பிரான்ஸியரேயெனத் துணிவாக நாம் கூறுவாம். "அபிசீனியர் ஆபிரிக்காவின் நாகரீகம் குறைந்த சாதியினரே; என்ன கஷ்டம் அவர்கட்கு ஏற்பட்டாலும் காரியமில்லை" என்று பிரான்ஸியர் எண்ணினர். நமக்கென்ன என்றுசொல்லித் திரைமறைவில் நின்று கைகாட்டிய பிரான்ஸியர்க்குத் தெய்வ சங்கற்பமாகப்போலும் பெரிய இடி வந்தெய்தியது. இப்போது ஜெர்மனியர் எதற்கு மிணங்காராகச் சர்வதேச சங்கத்தினரே இவ்விஷயத்தை விளங்கவேண்டுமென்றும், ஜெர்மனியர் நீதிக்கு மாறுகச்சென்றால் நடவடிக்கைகள் கையாளப்பட வேண்டுமென்றும் கூறப்படுகிறது. இத்தாலியர்க் கெதிராக நடபடிக்கைகளை ஏற்றகாலத்தில் துணிபாக நின்று சர்வதேச சங்கம் கையாண்டிருப்பின், அதன் கௌரவம் பன்மடங்கு கூடியிருக்கும் தனக்குஒன்றாகவும் பிறர்க்கு இன்னொன்றாகவும் பிரான்ஸியர் எண்ணுகின்றனர். பிறர் கஷ்டத்திலிருக்குங்கால் உதவிபுரியப் பின்னின்ற பிரான்ஸியர் தமது விஷயத்தில் மற்றையோர் உதவியைச் சடுதியில் நாடுவதெப்படி? குறை குற்றங்களைக் கண்ட மாத்திரத்தில் சர்வதேச சங்கத்தினர் சிறிதும் தாமதியாது நடபடிக்கைகளைக் கையாண்டு வந்திருந்தின், சங்கத்திற்கு வல்லரசினரும் மற்றையோரும் அஞ்சுவர். இப்போது சங்கம் செத்த பாம்பிற்குச் சமானமாகவேயிருக்கிறது. தொழிற்படுவதில் மிகவும் பின்னிற்கும் இச்சங்கம் பிரான்ஸியர்க்கு நன்மையை எப்படிச் சடுதியில் வருவிக்குமோ? தாம் முன் செய்த பிழையை இப்போது தான் பிரான்சியர் அறிவார் போலும். அவ்வப்போது தமது கடமையை நடுநின்று செய்வோர்க்கு ஒருபோதும் கலக்கமேற்படாதே.

இப்போதும் ஜெர்மனியரின் அடாத செயல் விஷயத்திலும் சர்வதேசசங்கம் தொழிற்படாது அவமான மடையின் அதற்குப் பிரான்சியரே பொறுப்பாளராவர். தான் சமைத்ததைத்தானே யுண்ணவேண்டியது. சர்வதேச சங்கத்தினரின் முடிவான ஆலோசனைக்குமாறுக அபிசீனியரை இத்தாலியருக்கு இரையாகக் கொடுக்க முயன்ற பிரான்சியர், இப்போது யாது செய்யப்போகின்றனரோ? சர்வதேச சங்கம் அதிகாரத்தை யிழந்து ஒதுங்கியிருக்கையில் என்ன செய்யப்போகின்றது? இப்போது ஜெர்மனியர் பிரான்சியரை நசிக்க முயன்றாலும் வாழாவிருக்கவேண்டியதே.

இந்த அரிய சந்தர்ப்பத்தில் எல்லா வல்லரசுகளும் ஒருங்குசேர்ந்து சர்வதேச சங்கத்தின் பெருமையைக் காப்பாற்றுவிடின் அதன் அந்திய காலம் எட்டத்திலில்லையென்றே கூறவேண்டும். இவ்விஷயங்கள் முடிவு செய்யுங்கால் அபிசீனிய விஷயமும் முடிவு செய்யவேண்டுமா? இத்தாலியருக்கு ஒரு நியாயமும், ஜெர்மனியருக்கு ஒரு நியாயமுமாக இருக்குமென யாவர் கூறுவர்? வல்லரசினர் ஒருங்குசேர்ந்து பலாத்காரத்தை உபயோகித்து ஜெர்மனியருக்கு அறிவுவரச்செய்யமுயன்றால் இத்தாலியருக்கு மாறுகவும் அப்படியே செய்யவேண்டும். ஆகையால் இச்சமயத்தில் சர்வதேச சங்கத்தைச் சேர்ந்த வல்லரசினர் தமக்கு முன்தோற்றியுள்ள தீமைகளைத் தடுக்காதுவிடின், அவைகள் மென்மேலும் பிரமாதமான நிலையை அடைந்து உலகினைப் பெரும் துயரில் ஆழ்த்தி விடும். ஆகையால், இச்சமயத்திலேயே எல்லாத் தகராறுகளையும் தீர்த்துக் கொள்ளவேண்டும். சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம்பெற்ற நாட்டினர் இனித்தான் உண்மையை நன்குஅறியக்கூடியவராவர். ஐரோப்பாவின் நிலைமை இப்படியாகிறது. மறுபடியும் உலகயுத்தம் ஏற்படாதிருக்குமென எப்படிக் கூறுவது? மற்றையோர் நாடுகளைக்கவருவதும், சிறிய அரசினரை நசிப்பதும், மற்றையோர் பெருமையைக் கண்டு பொறாமை கொள்வதும் குறையாதிருக்கும் வரையும் நற்காலம் உலகத்துக்கு எப்படி யுண்டாகும்?

## அளவுகடந்த சிலாக்கியங்கள்

இலங்கை அரசாங்கசபையில் அங்கத்துவம் வகிப்போர்க்கு இருக்கும் சிலாக்கியம் மற்றைய நாடுகளில் எங்கேயாவது இல்லையென்றே சொல்லவேண்டும். இவைகளில் மோகங்கொண்டே எத்தனையோ பேர் தாம் அங்கத்துவத்தை வகிக்கச் சிறிதும் அருகரல்லாதிருந்தும் அபேட்சகராக முன்வந்து ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தேர்தற் காலங்களில் அள்ளிச்சிதறுகின்றனர். சனங்களின் பிரதிநிதியாக அமைவோர்க்குச் சில சிலாக்கியங்கள் இருக்கவேண்டியது அவசியந்தான். ஆனால் அச்சிலாக்கியங்கள் அளவுக்கு மிகுதியாய் அரசாங்கசபையின் வேலைகளை நன்கறியாதவர்களையும் கிளப்பி விடுவதாயின் அவைகள் குறைக்கப்பட வேண்டிய தவசியமல்லவா? தாம் அங்கத்துவத்தைப் பெறின், அதைநோக்கிச் செலவுசெய்த பொருளைப் பெறலாமென எண்ணுவோர் அநேகர். அரசியல் ஞானம், கல்வியறிவு, விஷயங்களை எடுத்தாளும் சக்தியுடையாராயிருப்பவரே அரசாங்கசபையின் அங்கத்தவராதற்கு உரியர். சமீபத்தில் நடந்த தேர்தலில் பங்குபற்றிய 117 பேரில் உண்மையில் அப்பதவிக்குத் தகுந்தவர் 20 பேருக்கு மேலாகார். மற்றையோர் தமது பணத்தையும், அதிகாரத்தையும், உபாயங்களையுமே தகுதியாகக் கொண்டனரெனலாம்.

இப்போது நமது அங்கத்தவர் பெற்றுள்ள சிலாக்கியங்களைப் பிரிட்டிஷ் தேசாளுமன்றத்து அங்கத்தவரும் பெற்றாரில்லை. அரசாங்கசபை அங்கத்தவர் பெறும் சம்பளமோ தேசாளுமன்றத்து அங்கத்தவர் பெறுவதிலும் பன்மடங்கு அதிகமாகும். இலங்கையில் அங்கத்தவர் நினைத்த இடங்கட்குப் புகைரதமார்க்கமாகப் போகும் உரிமையைப் பெற்றுள்ளார். இங்கிலாந்திலோ தேசாளுமன்ற அங்கத்தவர் லண்டன்நகர்க்கும் தம்மைப் பிரதிநிதியாகத் தெரிந்த பகுதிக்கு மிடையிலேயே கட்டண மின்றிப் புகைரதத்தில் பிரயாணம் செய்ய முடியும். மேலும், நிருபங்கள், தந்திகள் முதலியன அனுப்பும் விஷயங்களிலும் இலங்கையங்கத்தவர்க்கு அதிகம் சிலாக்கியங்களுண்டு. பொதுசன நன்மையைநாடித் தொண்டுசெய்ய முற்படுவோர்க்கு அனேக உரிமைகளும் சிலாக்கியங்களும் எதற்கு? இவைகள் பன்மடங்கு குறைக்கப்படவேண்டியனவே. இந்தியா முதலிய விடங்களில் அங்கத்தினர் அரசாங்கசபைக் கூட்டங்கட்குச் சமுகமளிப்பின் அதற்கெனக் குறிக்கப்பட்ட தொகைப்பணம் கொடுக்கப்படும். அதுவும் மிகவுமதிகமன்று. ஆனல், இலங்கையில் அரசாங்கசபையின் கூட்டத்திற்கு ஒழுங்காய்ச் சமுகமளிக்காவிடினும் அவர்கட்கு 500 ரூபா மாதவீதம் கொடுக்கப்படுகின்றது. இது எவ்வாறு நீதியாகும்? இவ்விஷயங்களை அரசினர் கவனிப்பது அவசியம். ஆனல் இவ் விஷயங்கள் அரசாங்க சபைக்கு ஆலோசனைக்கு விடப்படின் அவர்கள் தாம் பெற்றுள்ள சிலாக்கியங்களைக் கைவிட ஒருப்படார். இன்னும் மேலதிகமாக அதிகாரங்கள் வேண்டுமென்பர். ஆனல், தேசசேவையை உண்மையில் நாடினவராயின் நமது பிரதிநிதிகள், தாம் பெற்றுள்ள சிலாக்கியங்களை மற்றையோர் பலவந்தமாக நீக்குமுன் தாம்விட்டுக்கொடுக்க முன்வரவேண்டும். அதுவே உண்மையான பெரிய தேசத்தொண்டாகும்.

## துக்கமான அகால மரணம்

யாழ்ப்பாணத்துச் சுழிபுரத்தை ஜெனனஸ்தானமாக வுடையவரும், தற்போது மலாய்நாட்டிலுள்ள சிறம்பான் நகரில் வைத்தியப்பகுதி உதவித் தலைவராகப் (Deputy Medical Officer) பெருங்கீர்த்திபெற்ற வைத்திய நிபுணரும் கொடைவள்ளலுமாகிய டக்ரர் ஏ. சரவணமுத்து அவர்கள் சடுதியாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை (8-3-36) சிறம்பானில் இறந்துவிட்டனரெனக்கேட்டு ஆற்றொணாத் துயருள்ளானேம். மலாய்நாட்டில் அரசினரின்கீழ் மிக உயர்ந்த சம்பளமும் மதிப்பும்பெற்று விளங்கும் யாழ்ப்பாண வாசிகளில் இவரே முன்னணியில் நிற்பவர். இவரது அரிய பெரிய குணங்களே இவரின் செல்வக்குக்கும் கீர்த்திக்கும் காரணமாயின. ஐரோப்பியர் இவர்மீது கொண்டுள்ள அளவுகடந்த நட்பினை அறியாதார் யாவர்? இவர் மரணம் காத்திராப்பிரகாரமாகச் சடுதியாக ஏற்பட்டமை பற்றிப் பெருந்துக்கம் அநேகர்க்கேற்படுவதாயிற்று. இவர் சென்ற மோட்டார் இன்னெரு மோட்டாருடன் மோதியதாலேயே மரணம் ஏற்பட்டதாக அறிகின்றேம். இறக்கும்போது இவருக்கு வயது 49 ஆகும். இவரது பிரிவு மலாய்நாட்டு யாழ்ப்பாண வாசிகட்கும் மற்றையோர்க்கும் பெருநட்டமாகுமென்பதை யாவர் மறுப்பர்? இவர் பிரிவால் துயருறும் இவர் குடும்பத்தினர்க்கும், பந்துக்களுக்கும், மற்றைய நண்பர்க்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேம்.

# இந்தியச் செய்திகள்.

## பண்டிதர்நேருவின்வரவு

சென்ற புதன்கிழமை பண்டிதர் நேரு ஆகாயக்கப்பல்மார்க்கமாக அலகபாத் நகர்வந்து சேர்ந்தனர். தலையணியின்றிக் கதராடை டணிந்தவராய்ப் பண்டிதர் காணப்பட்டனராம். ஆயிரக்கணக்கானோர் இவரை வரவேற்றனர். காங்கிரஸ் தலைவர்கள் பலர் அங்கு சமுகமளித்திருந்தனர். அலகபாத்தில் அன்று பெருங் கொண்டாட்ட தினமாகக் கருதப்பட்டது. எல்லா வித்தியாசாலைகளும் வேலைத்தலங்களும் மூடப்பட்டன. முசமத் அலி மைதானத்திலிருந்து ஓர் ஊர்வலம் பண்டிதருடனும் அவருறவினருடனும் திருவேணியை நோக்கிச்சென்றது. ஸ்ரீமதி கமலாநேருவின் அஸ்தி ஆற்றில் போடப்பட்டபின் கூட்டம் கலைந்தது. ஊர்வலம் செல்லுங்கால் யாவரும் அமைதியாக விருந்தனர். காங்கிரஸ் சபையின் சார்பில் பாபு இராசேந்திரப்பிரசாத், கிருபாலினி, ஜமுனலால்பஜாஜ், ஹறிட்கார் என்பவர்கள் சமுகமளித்திருந்தனர். ஊர்வலத்துடன் அலகபாத் உயர்தர நீதிமன்றத்து முதல் நீதிபதியாகும் சேர். ஷா மகமத் சுலைமான் என்பவரும் கூடிச் சென்றனராம்.

## 50 பேர் இறந்தனர்

வடமேற்கு எல்லைப் புறத்தில் பெஷவார் நகருக்கு அருகாமையிலுள்ள ஓர் ஊரில் மலையிலிருந்து பனிக்கட்டி உருகிப் பெருந்திரளாக நழுவி வந்தமையால் அநேக வீடுகள் பரிநாசமடைந்தன. இது காரணமாக 50 பேர் இறந்தனரெனச் சொல்லப்படுகின்றது. இன்னும் வேறிடங்களில் அநேக உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்க வேண்டுமெனவும்கூறப்படுகின்றது

## வகுப்புக் கலகம்

ஐக்கிய மாகாணத்தில் ராய்பெரச்சு என்றஇடத்தில் சென்ற சனிக்கிழமை மேளவாத்தியத்துடன் ஒரு மகமதிய பள்ளிவாசலுக்கணித்தாகப் போனதுபற்றி இருவகுப்பினர்க்கிடையிலும் கலகம் ஏற்பட்டது. இது காரணமாகச் சில வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவ்வீடுகளில் அகப்பட்டு இரு குழந்தைகள் இறந்தன. கலகம் காரணமாக 3 மகமதியரும் 3 இந்துக்களும் படுகாயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டனர். வேறு அநேகர் சிறுகாயமடைந்தனர். பொலிசார் முன்வந்து கலகத்தை அடக்கிவிட்டனர். இப்போது அங்கே ஐந்து பேருக்கு மேல் கூட்டமாக நிற்கக்கூடாதெனவும் இரவு 8 மணிதொடக்கம் விடியும் வரையும் ஒருவரும் வெளியே வாக்கூடாதென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# ஹிற்லரின்வெடிகுண்டு.

## மறுபடியும் ஐரோப்பிய யுத்தம் கிளம்புமா?

### றயின் பிரதேசத்தில் ஜெர்மன் சேனை

### லொக்கானே நிபந்தனைகள் மீறப்பட்டன

### பிரான்ஸிய அரசினரின் சங்கட்டமான நிலை

### ஜெர்மனியர்கூறும் நியாயங்கள்

ஐரோப்பிய மகாயுத்தம் முடிவடைந்து சிலவருடங்களுள் ஒரு புதிய யுத்த எற்பாடு ஐரோப்பிய வல்லரசினர்க்கிடையில் செய்யப்பட்டது. அதன்படி ஜெர்மனியர் தமக்குச் சொந்தமானதும் பிரான்சிய எல்லையை அடுத்துள்ளதுமான றயின் மாகாணத்தில் தாம் சேனைகளை ஒருபோதும் நிறுத்துவதில்லையென்றும் ஒப்புக் கொண்டனர். யுத்தம் முடிவடைந்தபின் பத்துவருடமாக அதாவது 1930ம் வருடம் வரையும் பிறிட்டிஷ் படைகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன. அவ்வூர் வருமானம் பிரான்சியர்க்கே யுத்தநட்டஈடாகக் கொடுக்கப்பட்டுவந்தது. இப்போது அம்மாகாணம் பழையபடி ஜேர்மனியர் வசம் விடப்பட்டிருப்பினும் அங்கே ஜர்மனியர் படைகளை நிறுத்தப்படாதென்பதே லொக்கானே என்னுமிடத்தில் செய்த உடன்படிக்கையாகும்.

பிரான்சியர் இற்றைக்குச் சில மாதங்கட்குமுன் ருஷியருடன் இரகசியமாகச் செய்த உடன்படிக்கையைச் சாட்டாகக் கொண்டே இப்போது ஜர்மனியர் அம்மாகாணத்துள் சேனையைக் கொணர்ந்து சேர்த்துள்ளார். லொக்கானே நிபந்தனைப்படி அதில் சேர்ந்து கைச்சாத்திட்ட நாட்டினர் ஒருங்கு சேர்ந்து ஆலோசியாது தம்முள் எவருடனுயினும் உடன்படிக்கை செய்யக் கூடாதென்பதும் ஒரு முக்கிய அம்சமாகும். ஜெர்மனியர் சேனையைக் கொணர்ந்ததும் பிரான்சியரும், பிறிட்டிஷாரும், பெல்ஜியரும் பெரும் ஆத்திரங் கொண்டு யாது செய்வதென ஆலோசிக்கின்றனர்.

றயின்மாகாணத்துக்குள் சேனைகள் கொண்டு செல்லலாமென ஹிற்லர் உத்தரவு கொடுத்ததும் ஜர்மனியபோர் வீரருக்கும், பொதுசனங்கட்கும் எற்பட்ட சந்தோஷத்துக்கு அளவில்லை. றயின் மாகாணவாசிகள் மிகக் குதூகலத்துடன் சேனைகளை வரவேற்றனர்.

இப்போது பிரான்சியர் யாதுசெய்வர். சர்வதேச சங்கத்தையே நோக்குகின்றனர். பொருளாதாரவிஷயமாக நடபடிக்கைகள் ஜெர்மனியர்க் கெதிராகக் கைக்கொள்ளும்படி ஒருபோது சர்வதேச சங்கம் முடிவுசெய்யுமோ. லொக்கானே நிபந்தனைக்குக் கைச்சாத்திட்ட நாட்டினர் சமீபத்தில் லண்டன் நகரில் கூட்டம்கூடப் போகின்றனர். பிரான்ஸியர் ருஷியருடன் இரகசிய உடன்படிக்கை செய்யுங்கால் தாமெப்படி யுத்த ஆயத்தங்கள் செய்யாதிருப்பதென ஜர்மனியர் கேட்கின்றனர். எல்லைப்புறங்களை பாதுகாப்பதற்கே தாம் சேனைகளைக் கொண்டுசென்றுளராகவும் ஜர்மனிய அரசினர் அபிப்பிராயங் கூறுகின்றனர்.

பிரான்சியர் தாம் யுத்தநோக்கமாக ருஷியருடன் உடன்படிக்கை செய்யவில்லையென்று கூறுகின்றனர்.

இப்போது லோக்கானே உடன்படிக்கைக்குக் கைச்சாத்திட்ட நாடுகளுள், ஜெர்மனி தவிர்ந்த மற்றைய நாடுகள், லண்டனில் பிறிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாகும் மெஸ். அன்றனி ஈடனின் தலைமையில் கூட்டம்கூடி யாதுசெய்யவேண்டுமென ஆலோசிக்கின்றனர். லொக்கானே உடன்படிக்கையில் இத்தாலியரும் சேர்ந்துள்ளார். இப்போது இத்தாலிய பிரதிநிதி கூறுவதும் விநோதமாகின்றது. தமக்கு அதிக நன்மை வரக் கூடியதாக அபிசீனியருடன் விஷயங்களை ஒழுங்குசெய்து வைப்பின் ஜர்மனியர்க்கு எதிராகப் பிரான்சியர்க்கு உதவிசெய்ய ஆயத்தமென இத்தாலியர் கூறுகின்றனர். மேலும் சர்வதேசசங்கத்தினர் கையாளும் நடபடிக்கைகளை முற்றாக நிற்பாட்டினன்றித் தாம் ஜெர்மனியர்க்கெதிராக ஒன்றும்செய்யவியலாதெனவும் இத்தாலியர் கூறுகின்றனர். இத்தருணத்தை இத்தாலியர் கைவிடுவாரா?

ஆனுல் பிரான்ஸியரும் பிறிட்டிஷாரும் இத்தாலியர் கூறுவதில் சிறிதும் நம்பிக்கை வைத்தாரில்லை. ஜெர்மனியர் சார்பாகவே இத்தாலியர் நிற்கின்றனரென்றும் வெளிப்பார்வையில் பிரான்சியருடன் அனுதாபப்படுவதாகவும் காட்டுகின்றனர்.

## புதிய வோர் கால்வாய்.

### மலாய்க் குடா நாட்டில்.

சீய தேச அரசினர் தமது பிரதேசத்தில் மலாய்க் குடாநாடு நிலப்பரப்புடன் இணைக்கப்படும் கிரு (Kra) என்ற கழுத்துறையில் (Isthumus) ஒரு கால்வாய் வெட்டப்போவதாகப்புதினங்கள்கூறுகின்றன. இப்போது யப்பான் சீனு முதலிய நாடுகட்கு சிங்கப்பூர்த் துறையைக் கண்டே கப்பல்கள் செல்லவேண்டும். இக்கழுத்துறை கால்வாயாக்கப்படின் இது பிறிட்டிஷார்க்குப் பெரும் ஆபத்தாகவே முடியும். இக்கால்வாய் விஷபத்தில் யபபானியரே அதிக ஊக்கமாய்நிற்கின்றனரென்றும்,யப்பானியருக்கும் சீய்நாட்டரசினருக்குமிடையில் நட்பும் ஒற்றுமையும் உண்டெனவும் கூறப்படுகிறது. கால்வாய் யப்பானியரால்வெட்டப்பட்டு பாதுகாகப்படுமெனச் சொல்லப்படுகிறது. இக்கால்வாய் ஏற்படின் பிறிட்டிஷார் சிங்கப்பூரில் அமைத்த கடல்படைப்பாதுகப்புகளெல்லாம் உபயோக மற்றனவாகும். இக்கால்வாய் திறக்கப்படின் கீழைத்தேசத்துக்குப் போகும் மார்க்கம் 1000 மைல் சுருங்கும்.

காலநிலை:—வெய்யில் அகோரமாய் எறிக்கிறது. இரவில் பனியும் குளிர்காற்றும் காணப்படுகின்றன. இடையிடையே மழைக்கோலமுங் காணப்படுகின்றது. தடிமன், வயிற்றுளைவு முதலிய நோய்கள் பரவியிருக்கின்றன.

# அபிசீனிய மகாயுத்தம்.

## இத்தாலியர் தாம் யுத்தத்தை நிற்பாட்டாராம்.

### வைத்தியசாலைகள் இத்தாலியவிமானங்களால் தகர்க்கப்பட்டன

அபிசீனியாவில் அநேக விசேஷ சம்பவங்கள் நடக்கவிருப்பதாக இத்தாலியர் கூறுகின்றனர். சர்வதேச சங்கத்தினர் பெற்ரூல் விஷயமாக நடபடிக்கைகள் கையாள்வரோவென இதுவரையும் இத்தாலியர் அச்சமடைந்திருந்தனர். இப்போ ஜெர்மனியருடன் பிரான்ஸியர் முரண்படுவதைக் கண்டதும் இத்தாலியர் ஆநந்தமடைவாராயினர். பெற்ரூல் விஷயமாக நடபடிக்கை கையாளப்படும் என்ற எண்ணமும் இப்போது கிடையாது. இதுவரையும் இத்தாலியர்க்கு மாருக நடபடிக்கைகள் கையாள எத்தனங்கள் நடந்தன. இனி ஜெர்மனியர்க்குமாருக நடபடிக்கைகள் கையாளப்போகின்றனர். இவை எவ்வாறு முடிவடையுமோ? வடக்குப் போர் முனையில் 3 பெரிய யுத்தங்களைச் சமீபத்தில் இத்தாலியர் நடத்தி வெற்றியடைந்தனர். சென்றவாரம் அபிசீனியாவுக்குள் இத்தாலிய விமானங்கள் சென்று குண்டுகள் போட்டதால் நூற்றுக்கணக்காஞேர் கொல்லப்பட்டனராம் இப்போது இத்தாலியர் கைப்பற்றிய இடங்களைப் பெலப்படுத்திக் கொண்டே பின் விரைவாக மேலும் முன்னேறுவராம்,

இத்தாலிய சேனைவீரர் பாடோகிளியோ யாது செய்கின்ருர்? அபிசீனியாவில் இத்தாலியர் யுத்தம்செய்வதல்லவாம். ஆட்களைக் கொல்வதே தமது வேலையாகின்றதாம், மூன்று வாரங்களுள் இத்தாலியர் ஒருலட்சம் அபிசீனியரை யுத்தமுனையில் தொலைத்தனரெனக் கூறப்படுகிறது. தோல்வியடைந்த அபிசீனிய சேனைத்தலைவருள் ராஸ்காஸா என்பவர் அடைந்த தோல்வியே மிகவும் கொரேமானதாம். யுத்தம் ஆரம்பித்து ஆறுமாதங்களாயும் இதுவரையும் எப்போதாவது அபிசீனியர் பின்வாங்கும்போது துப்பாக்கிகளையும் குண்டுமருந்துகளையும் எறிந்துவிட்டுச் சென்றது கிடையாது. இம்முறைதான் அவைகளைப் போட்டுவிட்டுப் பின்வாங்கியுள்ளார். ஆயிரக்கணக்கான துப்பாக்கிகளை இத்தாலியர் கைப்பற்றினாராம்.

ஆனுல் அபிசீனியர் யாது சொல்லுகின்றனர். தாம் இன்னும் தோல்வியடையவில்லையாம். தாமாகப் பின்வாங்கினதேயன்றி வேறென்றுமில்லையாம். உண்மையான யுத்தம் இனித்தான் நடக்கப்போகின்றதாம். இத்தாலியர் சொல்வதை நம்பவேண்டாமென்றுங் கூறுகின்றனர். இரு அபிசீனியர் இறந்தால் எல்லாரும் இறந்துவிட்டதாக இத்தாலியர் கூறுவது வழக்கமென்றும் சொல்கின்றனர்.

வடக்குப் போர்முனையில் இத்தாலியர் புதிதாகப் பிடித்தவிடங்கட்கு பெருந்தொகையாகச் சாமான்கள் கொண்டுசென்று சேர்க்கின்றனர்.

"பொறுமையாக இருங்கள். பிடிவாதமாக நில்லுங்கள். சித்திரை மாதமளவில் நாங்கள் செய்யும் ஆயத்தங்கள்முடிவாகும். அப்போது உங்களுக்கு வந்து உதவிசெய்வோம்" என்று இத்தாலியர்க்கு ஜேர்மனியிலிருந்து சிலர் செய்திகள் அனுப்பியிருக்கின்றனராம். ஜேர்மனியர் செய்யும் உதவி யாதாகுமென பலவிதமாக யாவரும் எண்ணுகின்றனர்.

3,000 புதிய போர்வீரர்கள் இத்தாலியிலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றனர். இத்தாலியர் தளர்ச்சியடையாது யுத்தத்தை நடத்திச் செல்வாராம். இப்போது வெற்றிகொண்ட இடங்கட்கு வீதிகள் அமைப்பதில் இத்தாலியர் முயற்சியாகவிருக்கின்றனர்.

கோரம் என்னும் இடத்தில் இத்தாலிய விமானங்கள் குண்டுபோட்டமையால் காயமடைந்தோர்க்குச் சிகிச்சை செய்ய வேலை நடத்தும் பிறிட்டிஷ் படையினர் பலர் பெருங்காயமடைந்தனர். மூன்ருமுறையாக இத்தாலியர் இவர்கள்மீது குண்டு போட்டுள்ளார். இத்தாலியர் இவ்வித அநியாயங்கள் செய்வதைக் கண்டும் பிறிட்டிஷார் மௌனமாயிருப்பது நகைப்புக்கிடமாகின்றது.

சர்வதேச சங்கத்தினர் சமாதானத்தை நாடி முயன்று செல்லுங்கால் ஜெர்மனியரின் செய்கைகள் தோன்றி பெரும் கிளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. பிறிட்டிஷாரும் பிரான்சியரும் எதைப் பார்ப்பர். தமதுநாட்டைத் தாக்கமுயலும் ஜெர்மனியரைஎதிர்ப்பதா? அபிசீனியர்க்கு உதவிசெய்வதா? இத்தாலியர் இச்சமயத்தில் சிறிது தாமதிப்பாரோவெனின் அப்படியுமன்று. இத்தருணத்தில் கடும் யுத்தம் நிகழ்த்தப்போவதாகக் கூறுகின்றனர். இச்சமயத்தை நழுவ விடப்படாதென எண்ணினர்போலும்.

## இலங்கைக் காங்கிரசும் அரசாங்கசபையும்

இலங்கைக் காங்கிரஸ்சபையார் பின்வருபவர்களை இப்பதவிகட்குக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

தலைவர்:— திரு. பிரான்சிஸ் டீ சொயிசா.

1. உள்நாட்டுமந்திரி:—சேர் D. B. ஜெயத்திலக்கா.
2. கமத்தொழில்மந்திரி:—திரு. D. S. சேனநாயக்கா.
3. தொழிற் பகுதி மந்திரி:— திரு. G. C. S. கோறியா.
4. சுகாதாரப்பகுதி மந்திரி:— திரு. W. A. de ஸில்வா.
5. கல்விமந்திரி:— திரு. C. W. W. கன்னங்கரா.
6. போக்குவரவுப்பகுதிமந்திரி:—திரு. J. L. கொத்தலாவலா.
7. ஸ்தலச் சுயாட்சிப்பகுதி மந்திரி:— திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா.

## ஜெயில் கார்டுக்குத் திருக்கைவால் அடி

யாழ்ப்பாணம் 13௳

யாழ்ப்பாணம் போலீஸ் கோட்டில் அக்டிங் நீதிபதி K. கனகசபை முன்பாக, யாழ்ப்பாணம் போலீஸ் ஸ்டேசனைச் சேர்ந்த போலீஸ் சார்ஜண்ட் திரு வேலாயுதம் என்பவர் வண்ணார்பண்ணை வாசிகளாகிய 1. கோவிந்தசாமி, 2. கனகசுந்தரம், 3. கிருஷ்ணன், 4. பண்டா முதலியவர்களுக்கு எதிராக சென்ற 9-ந் திகதி இரவு 7½ மணியளவில் யாழ்ப்பாணம் மறியற் சாலையில் ஜெயில் காட்டாகவிருக்கும், து. மாரிமுத்து என்பவருக்குத் திருக்கைவால், பொல்லு, முதலியன வற்ருல் அடித்துப் பாரதூரமான காயம் உண்டாக்கியதாக ஓர் வழக்கைத் தொடர்ந்தார்.

நீதிபதி 1-ம் எதிரியை 200 ரூபாவிலும் 2-ம் 3-ம் எதிரிகளை 100 ரூபா சரீரப் பிணையிலும் விடுத்து 4-ம் எதிரியைப் பிடிக்கும்படி விருந்தனுப்பி வழக்கைத் தவணையிட்டார்.


## 25 ரூபா இனும்!

சென்ற 3-3-36 ல் கோப்பாய் தெற்கிலிருக்கும் கந்தன்-நாகன் என்பவனிடங் கொடுக்கப்பட்ட கீழ்க்கண்ட நகைகளை அவன் நம்பிக்கைத் துரோகஞ் செய்து எடுத்துக்கொண்டு ஓடிவிட்டானுதலால், குறித்த நகைகளை விற்ற, அல்லது அடைவு வைத்த விபரந் தெரிவிப்பவர்களுக்கு ரூபா பத்தும், ஆளைப் பிடித்துத் தருபவர்களுக்கு ரூபா பதினைந்தும் இனும் கொடுக்கப்படும்.

நகைகளின் விபரம்

1. நெல்லுக்காப்பு ஒரு சோடி முகப்புடன்
2. சொத்தமல்லிக் காப்பு ஒருசோடி
3. கெட்டிப்பூரானட்டியல் பதக்கத்துடன்

ஆளின் விபரம்

பெயர்: கந்தன்-நாகன், பிறப்பிடம் காரைநகர் மேற்கு, நிறம் சிவலை உயரம் 5¼ அடியிருக்கும் செம்மையான சுறுட்டை மயிர் சிலுப்பா. பல்லில் காவிபடிந்த நிறம். பெரும்பாலும் மட்டக்களப்பு மன்னார்ப்பகுதிகளுக்குப் போய்வருபவன்

தவசி. சின்னத்தம்பி
c/o ஈழகேசரி, சுன்னுகம்.

## கலம்பகம்.

இந்தியாவின் புதிய இராசப்பிரதிநிதியாக நியமனம் பெற்றிருக்கும் லின்லித்கோ பிரபு ஆறு சம்பெனிகளுக்கு அதிபராகவிருக்கிருராம்.

o o o

பிரபல பெண் விளையாட்டுக்காரியாகிய ஸ்ரீமதி கௌக்கோவா ஆணுகமாறி கௌபெக்என்ற பெயர் பெற்றிருக்கிருர் அவர்தான் பெண்ணுக விருந்தகாலத்தில், பெற்றுள்ளபரிசுகளைத் திருப்பிக்கொடுக்க உத்தேசித்திருக்கிருராம்.

o o o

இலங்கையில் உண்டாகும் கரும்பிலிருந்து சீனி உற்பத்தி செய்யுந் தொழிலை ஏற்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகளைப்பற்றி ஆலோசனை செய்யப்படுகிறது. சீனி உற்பத்தி செய்யுந் தொழிலைக்கற்றுக் கொள்ளுவதற்காக இரு நிபுணர்கள் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பப்படுவார்களாம்.

o o o

பிரிட்டனின் 1936-ம் வருடாணுவச் செலவுக்கென 49281000 பவுண் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

o o

புத்தகயா ஆலயத்தைப் புத்தர்களின் மேற்பார்வையில் விடுவதற்குரிய ஒழுங்கைச் செய்யும் நோக்கத்துடன் இந்திய சட்டசபையில் ஓர் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு 32 அங்கத்தவர்கள் சேர்ந்து இராசப்பிரதிநிதியவர்களிடம் அனுமதிபெற்றிருக்கின்றனர். இந்த 32 பேரில் 3 பர்மியபுத்தர்களும் 9 முஸ்லிம்களும் 2 சீக்கியரும் 18 இந்துக்களுமிருக்கின்றனராம்.

o o o

ருஷியாவில் 18 வயதுக்கு மேல் 45 வயதுவரை ஆண் பெண் இருபாலாரும் வருடத்தில் 6 நட்கள் தெருவில் வேலை செய்யவேண்டுமென ஒருசட்டம் உண்டாக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

மட்டக்களப்பிலிருந்து காலி, கொழும்பு முதலியவிடங்களுக்குச் சிறுபடகுகள் மூலம் சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யும்முறையை ஏற்படுத்துவது பற்றி ஒருகம்பெனியார் ஆலோசித்து வருகிருர்களாம்.

o o o

அரசாங்கசபைப் பொதுத் தேர்தலில் ருவான்வலைப்பகுதிப்பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் எல்.எம் டெரோ ராஎன்பவர் சென்றகிழமை செல்வி செவினு பீரிஸ் என்னும். பெண்ணைவிவாகஞ் செய்துள்ளாராம்.

o o o

வடமத்திய மாகாணத்திலுள்ள காடுகளில் யானைகள் அதிகமாகவிருப்பதால் அவைகளை வேட்டையாடுவதற்குப் புதிய அரசாங்கசபையில் அனுமதி வேண்டப்படுமாம்.

o o o

இலங்கையில் இந்திய அரசாங்கப் பிரதிநிதியாகவிருக்கும் திரு. டி. எல். ஆர். சந்திரன் என்பவரினிடத்திற்கு மங்களூரைச் சேர்ந்த திரு. ஏ. வித்தல்பாய் என்பவர் நியமனம் பெற்றுள்ளாராம்.

o o o

கம்பகாப் பொலிஸ்கோட்டு மொழிபெயர்ப்பாளரின் மனைவியாகிய ஸ்ரீமதி டி. சொய்சா என்பவர் 10 வயதுள்ள வேலைகாரச் சிறுமியைப்பிரம்பால் அடித்துத் துன்புறுத்தினரென வழக்குத்தொடரப்பட்டிருக்கிறதாம்.

எட்டகொடையிலுள்ள சாராயத்தவறணையைக் குத்தகைக்கு எடுத்திருப்பவராகிய திரு. எவ். எச். எம சில்வா என்பவரும், விற்பனைகாரனும் குறிக்கப்பட்ட விலைக்குக் குறைவாகச் சாராயத்தை விற்பனை செய்தார்களெனவும், அன்றைய விற்பனையிற் கிடைத்தபணத்துக்கு மேலாகத் தவறணையில் வைத்திருந்தார்களெனவுங் குற்றஞ்சாட்டப்பட்டு முறையே 40 ரூபாவும், 75 ரூபாவும் அபராதம் விதிக்கப்பெற்றனராம்.

o o o

கொழும்பில் 399 நொத்தாரிசுமாரும் யாழ்ப்பாணத்தில் 112 நொத்தாரிஸ்மாரும் காலியில் 90 நொத்தாரிஸ்மாரும் இருக்கின்றனராம்.

o o o

வெள்ளவத்தைக் கால்வாயை ஆழமாகத் தோண்டும் வேலையில் ஏறக்குறைய 800 பேர் இரவு பகலாக வேலைசெய்து வருகின்றனர். சனங்களுக்குத் தொழில் கொடுப்பதைக் கருதி வேலைக்கு இயந்திரத்தை அமைக்க வில்லையாம்.

## ஆலயஞ்செல்லுகையில் கடத்தப்பட்ட மேரிப்பிள்ளை

### எதிரிகள் விடுதலையாக்கப்பட்டனர்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பாவ மன்னிப்புக்கொடுத்த அந்த நேரத்தில் தேவாலயம் நிறையச் சனங்கள் இருந்தார்களா?—இல்லை, 20 பெண்களும் 20, 25 பிள்ளைகளுமே இருந்தனர்.

ஓர் சத்தங் கேட்டது; அந்த நேரத்தில் நீர் பாவமன்னிப்புக் கொடுத்துக் கொண்டிருந்தீர்! ஓர் இளம்பெண்ணுக்கா? முதியவளுக்கா பாவமன்னிப்புக் கொடுத்தீர்?—அதனைச் சொல்ல முடியாது.

அப்போது உமக்கு ஒருவிதமான சத்தம் கேட்டது?—ஓம்.

அந்தச் சத்தம் ஓர் மனுஷனுடையது அல்லது ஓர் நாயுடையது என்று உம்மாற் சொல்லமுடியாது?—(மௌனம்)

நீர் அந்தச் சத்தத்தை மீண்டும் கேட்டீர்?—ஓம்.

எப்படியான சத்தம்?—ஓர் இரக்கமான ஓலம்.

கதவுக்கு வெளியே வந்தபோது தான் 2-ம் சத்தம் கேட்டது என நீர் பொலிஸ் கோட்டிற் சாட்சியம் கொடுத்திருக்கிறீர்?—நான் அப்படிச் சொல்லவில்லை.

மேரிப்பிள்ளையைக் குருசுமுத்து முதலியவர்கள் களவாடிச் சென்றுர்கள் என்று உமக்கு அன்னம்மா சொன்னபோது, அச்சம்பவத்தைக் கண்ணுரக் கண்டாயோ என்று அன்னம்மாவைக் கேட்டிரோ?—நான் கேட்கவில்லை.

மேரியம்மா (மேரிப்பிள்ளையின் தங்கச்சி) அங்கே இருந்திருப்பாளானுல், கட்டாடாயம் உம்மிடம் வந்து இச்சங்கதியைச் சொல்லியிருப்பாள்?— (மவுனம்)

சுவாமியாரே! இங்கே பாரும், நீர் இந்த வழக்கில் எக்காரணங்கொண்டோ அறியேன். ஆரம்பந்தொட்டுக் கடைசிவரை மிகுந்த கரிசனை எடுத்துவந்திருக்கிறீர்?—நான் ஏன் கரிசனை எடுக்கவேண்டும்?

சுவாமியாரே என்னைக் கேள்விகள் கேட்கவேண்டாம் நீர் கேள்விகள் கேட்க, நான் மறுமொழி கூறுவதாயின் நாங்கள் இடம் மாறவேண்டியதுதான்; நான் சாட்சிக்கூண்டிலும், நீர் நியாயவாதி ஆசனத்திலும் நிற்கவேண்டியது; விளங்குகிறதா?—சரி, நான் இந்த வழக்கில் கரிசனை எடுக்கவில்லை.

மேரிப்பிள்ளை நல்லவள் என்று 'சேட்டிப்பிக்கற்' கொடுக்கிறீரா?—ஓம்.

ஜோசப்பும் நல்லவன்தான்?—ஓம்.

மேரியம்மா உமக்குப் பயப்படுபவளா?—இல்லை.

அப்படியானுல் உம்முடன் அவள் தட்டுத்தடையின்றி ஊடாடுபவள்?-ஓம்.

இச்சம்பவம் நடந்த தினத்தன்று பின்னேரம் நீர் பாவமன்னிப்புக் கொடுக்கும்வேலையில் இருந்தீர்?-ஓம்.

அன்னம்மாவும் உமது மந்தையிற் சேர்ந்த ஆடுதான்?-ஓம்.

அம்மந்தையிற் கறுத்தஆடு மேரிப்பிள்ளை?-(மவுனம்)

அன்னம்மா, மேரியம்மா, குருசுமுத்துவுடன் ஓடிய மேரிப்பிள்ளை என்பவர்கள் உம்மிடம் தாம் ஏதும் சொல்லவில்லை என்கிருர்களே, அதன் காரணம் என்ன?-சாட்சிகளைப் பின் மறுக்கும்படி செய்துவிட்டார்களென்றே நான் நினைக்கின்றேன்.

சுவாமியாரே இங்கே பிரசங்கம் புரிய வேண்டாம். என்னுடைய கேள்விகளுக்கு மறுமொழி சொல்லும். அடுத்தநாட் காலை ஜோசப்பும் மரியம்மாவும் உமக்கு வாக்குமூலம் தந்தனர் என்று நீர் கூறுகின்றீர்?-ஓம்.

ஆனுல் அவர்கள் தாம் ஒன்றும் உமக்குக் கூறவில்லையென்று பகிரங்கமாகக் கூறுகின்றுர்களே?

—(இந்தச் சந்தர்ப்பத்தில் சாட்சி மறுமொழி கூருது நியாயவாதியை விழித்துப் பார்க்க)

நீதியரசர்: சுவாமியார் அவர்களே, மிஸ்ரர் துரைசுவாமி உம்மைப் பொறி வைத்து அகப்படுத்த முயற்சிக்கின்றுர் என்று நினைக்கவேண்டாம். சாட்சிகளை அப்படி அவர் செய்வாரானுல், அதனைத் தடுப்பதற்கு நான் இருக்கிறேன். மிஸ்ரர் துரைசுவாமி அப்படி மாட்டுதற்கான கேள்விகள் கேட்டவர் அல்ல. எனவே அவர் கேட்கும் கேள்விகளுக்குத் தயை புரிந்து மறுமொழி சொல்லவும்.

சாட்சி:—அடுத்தநாட்காலை உபதேசியார் என்னிடம் வந்து தெருவில் தான் நிக்கோலாசைச் சந்தித்ததாகவும், மேரிப்பிள்ளை கோட்டில் பொய்ச் சாட்சியம் கொடுத்து விட்டாள் என அவர் சொன்னதாகவும் சொன்னுர்.

மிஸ்ரர் துரைசுவாமி: எனவே அன்றிரவு முழுவதும், இந்த உபதேசியார் ஆந்தைபோல் அலுவல் பார்த்திருக்கிருர்? தெரியாது.

மரியம்மாவும் யோசேப்புவும் இப்போது ஒருவர் ஒருவராக உம்மைக் கைவிட்டு விட்டனர். (சாட்சியின் கைகள் நடுங்க) சுவாமியாரே, உம்முடைய விரல்கள் மூலமாக ஆவிபோகின்றதே!

நீதியரசர்:—நீர் உமது காதார ஓர் சத்தம் கேட்டேன் என்றீரே அதன் முடிவு என்ன?

சாட்சி;—ஆண்டவனே, எனக்கு இங்கே வந்து சாட்சியம் அளிக்க விருப்பமில்லை. வீணுய்க் கோட்டிற்கு இழுபடவும் நான் விரும்பவில்லை.

நியாயவாதி:—நீதிஸ்தலத்திற் சாட்சியங் கூற நீரே வலிந்து முன் வந்தீராமே?—அது சுத்தப் பொய். (Non Sense)

இப்படியான வார்த்தை மீண்டும் இங்கே உபயோகிக்க வேண்டாம்.

நீதியரசர்:—நீர் குருவானவர் என்ற நியதியில் நீதிஸ்தலங்களிற் சாட்சியம் கூறத் தடுக்கப்பட்டிருக்கிறீரா?

சாட்சி:—எனது சாட்சியம் மிகவும் ஆவசியகம் என்ருல் தான் அப்படி அதனை அளிக்க அனுமதிக்கப்படுகின்றேன்.

நியாயவாதி:—ஆனுல் நீர் ஓர் பிரிட்டிஷ் பிரஜை?—ஓம்

எனவே நீர் எமது இராசாவுக்குச் செய்யவேண்டியகடமை ஒன்றுண்டு—ஓம்.

சுவாமியாரே, உமது ஆசனக் கோயிலின் ஆதிக்கத்திற் குட்பட்டவர்கள் இப்படிப் பெண்கடத்தல் ஓர் ஆடவனுடன் சோரமாக ஓடுதல் என்பனவற்றைச் செய்தால், அது உமக்கு விருப்பமாயிராது?-ஓம்.

தேவாலயத்து வளவுக்குள் இருந்து ஓர் பெண் ஆடவனுடன் களவாகச் சென்ருல் விரும்புவீரா?-இல்லை.

16 வ்யதுள்ள ஓர் மங்கை தான் விரும்பிய ஆடவனுடன் சோரமாகச் சென்ருல் அது குற்றமல்ல என்று நினைக்கிறேன்?-சமயவிஷயமாகச் சொல்லுமிடத்து அது குற்றந்தான்.

அக்டோபர் மாதம் 16-ந்திகதி வரைக்கும் உமக்குக் கேட்ட சத்தத்தைப்பற்றி நீர் ஒருவரிடமுங் கூறவில்லையா?-இது சம்பவம் நடந்த அடுத்தநாட் காலையே அதனைப்பற்றி மணியகாரனுக்குச் சொன்னேன்.

"ஓ அப்பு, ஓ அப்பு என்ற சத்தம் உமக்குக் கேட்கவில்லை?-ஓர் சத்தம் கேட்டது; ஆனுல் எப்படியான சத்தம் என்பதைச் சொல்ல முடியாது.

இதன்பின் அச்சுவேலி உபதேசியாரான பஸ்தியாம்பிள்ளை-சந்தியாப்பிள்ளை பின்வருமாறு சாட்சியம் கொடுத்தார்:—

"குறித்த சம்பவம் நடந்த தினத்தன்று பின்னேரம் $3\frac{1}{2}$ மணி வரையில் நான் அச்சுவேலித் தேவாலய வளவுக்குள்ளாக, எமது பள்ளிக்கூடத்திற்குச் சென்றேன். அப்போது திருச்செல்வத்தின் படலைக்குச் சமீபமாக ஓர் கார் நின்றது. அந்தக் காரில் இருந்தவர்கள் யார் யார் என்று என்னுற் சொல்ல முடியாது. பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது "ஓ அப்பு ஓ அப்பு" என்றோர் சத்தங் கேட்டது அது ஓர் பெண்ணின் சத்தம். நான் இது என்ன சத்தம் என்பதை அறிவதற்காக வெளியே வந்து பார்த்தபோது, ஓர் கார் மிகவும் வேகமாகச் செல்வதைக் கண்டேன். மேரிப்பிள்ளையைப் பலவந்தமாகத் தூக்கிச்செல்கின்றனர் என்று ஆட்கள் கூறினர்.

நீதியரசர்:—உமது சாட்சியம் மிகவும் முக்கியமானது: நீர் ஓர் உபதேசியார்: அத்துடன் முதியவர்: நீர் இது சம்பவத்தை அறிந்ததும் என்ன செய்தீர்?—பொலிஸ் விதானை வந்து என்னையும் சுவாமியாரையும் விசாரித்தவர். நான் எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்.

நியாயவாதி: உடையார் உமது சகோதரன்; அவரிடம் சென்று ஏன் கூறவில்லை?—நான் அவரிடம் செல்லவில்லை.

### கரணவாய் வேதாரணியேசுவர விதாலயம்.

சி. பா. த. வகுப்பும்,
யா. ஆ. தி. பா. சங்கப் பிரவேச வகுப்பும்.

1937-ம் ஆண்டுக்குரிய சி. பா. த. வகுப்புப் பரீக்ஷைக்குத் தோற்றுவோர், தாது ௵ சித்திரை ௴ ௨-ந் திகதி தொடக்கம் நமதுபாடசாலையிற் சேர்ந்து கற்றுக்கொள்ளலாம். இவ்வகுப்பில் வரைதற் பாடமும் ஒன்ருகக் கற்பவருக்கு வசதி யளிப்பதற்காக யாழ்ப்பாணச் சைவாசிரிய கலாசாலையில் வரைதற் பாடம் பயிற்றிய திருவாளர் இ. பொன்னையா அவர்கள் இப்பொழுது நமது பாடசாலையில் நியமனம் பெற்றிருக்கிருர்கள். 17 வயதிற்கு மேற்பட்ட எவரும் ஈண்டுச் சேர்தற்குரியரல்லர்.

யா. ஆ. தி. பா. சங்கப் பிரவேச வகுப்புக்குரிய பாடங்களும் இங்கே கிரமமாகக் கற்பிக்கப்படும். இவ்வகுப்பிற் கற்கவிரும்புவோர் தாது வருடம் சித்திரைமாதம் முடியுமுன் சேரற்பாலர்.

கரணவாய்
யுவ மாசி ௴ ௨௭
ஆ. கணபதிப்பிள்ளை
தலைமையாசிரியர்.

நீங்கள்
**யோசிக்கவேண்டியதில்லை!**
ஓர்முறை பரீட்சியுங்கள்
உண்மையை அறிவீர்கள்

உங்கள் லில்லிபுளுட், ஆர்மோனியங்கள் பழுதடைந்துவிட்டதா? அப்படியானுல் அவை எவ்வித பழுதடைந்தவை யாயினும் புதிதுபோற் திருத்திக் கொடுப்போம். வேலைகள் திருப்தியில்லாவிடின் கூலி இனும்! ஷைகருவிகள் புதிதாயும் உண்டாக்கப் பெறும். துளோக், உவாக்ஷ், தையல் மெஷின்களும், போன், பிடில், ஓர்றன், ரைப்மெஷின் முதலியன விசேடமாய் திருத்தப்பெறும் ஷை கருவிகட்குத் தேவையான புதிய பாகங்கள் விற்பனைக்கிருக்கின்றன.

**ஜீ. எம். பொன்னுத்துரை அன் பிறதர்**
32, ஆஸ்பதிரிரேட், யாழ்ப்பாணம்
(95) 15-3-36—4

முதுகு கூனல் உள்ள இன்னுச்சி என்னும் வேலைக்காரப் பெண் உம்மிடம் இருக்கிருள்?— இல்லை.

அவளைத்தான் 1-ம் எதிரி விவாகம் செய்வது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது?—ஓம்

அதன் பொருட்டு நீர் விருந்தும் செய்தீர்?—ஓம்

அதன் பின் இன்னுச்சி மறுத்து விட்டாள்?—ஓம்.

இதன்பின் அந்தோனி பெண் அன்னம்மா சாட்சியம் பகர்ந்தாள்.

யாழ்ப்பாணம் 13

இன்றையதினம் மணியகாரனது சாட்சியம் விசாரணைசெய்யப்பட்டதன்மேல் முடிக்குரிய நியாயவாதி அவர்களும் பிரபல நியாயவாதி திரு. S. D. தம்பு அவர்களும் திறம்பட ஒவ்வொருமணித்தியால நேரம் தத்தமது கட்சியைப்பற்றி எடுத்துரைத்தனர். நீதியரசர் திரு. M. T. அக்பார் அவர்கள் 4-மணி நேரமாக வழக்கைப் பற்றி ஜூரிமார்களுக்கு எடுத்துரைத்ததின்மேல் ஜூரிமார்கள் ஒருமணி நேரமாக ஆலோசனை செய்துவந்து தாங்கள் 4-ம், 3-ம் ஆக அபிப்பிராயந் தெரிவிக்கிறேமென, நீதியரசர் திரும்பவும் யோசனை செய்து வரும்படி அனுப்ப, அவர்கள் பின்னும் 15 நிமிடமாக யோசனைசெய்து வந்து அதாவது இரவு 7-30 மணியளவில் தாங்கள் இப்பொழுது 5-ம், 2-ம் ஆக அபிப்பிராயந் தெரிவிக்கிறேமெனக் கூறி எதிரிகள் யாவரும் குற்றவாளிகளல்லர் எனக் கூறினுர்கள்.

அதன்மேல் நீதியரசர், எதிரிகளை நோக்கி "நான் முதல் நான்கு எதிரிகளையும் குற்றவாளிகளாகக் கருதியிருந்தேன். ஆனுல் உங்கள் தேசத்தை வாசஸ்தானமாகவுள்ள ஐவர் கூறிய அபிப்பிராயப்படி உங்களை விடுதலைசெய்கிறேன்" என்றுகூறியதன்மேல் கோடுகலைந்தது. நமதுநிருபர்.

சிறுகதை.

# 'அன்னையின் கட்டளையும் அதுதான்.'

("சுயர்" எழுதுவது.)

உதயபுரிக்கும் பீஜப்பூருக்குமிடையில் கடும்போர், உதயபுரிச் சேனையை நடத்துபவன் ராணுசிங். பீஜப்பூர் சேனைத் தளபதி பீமசிங். மூன்றுநாட் கடும்போர் நடந்தது. மூன்றும்நாள் உதயபுரிச் சேனை சிறிது பின்வாங்கியது. ராணுசிங் பீமசிங்குக்கு எவ்வகையிலும் இளைத்தவனல்லன். ஒருபடி கூடியவன் என்றுலும் பொருந்தும். சேனைகளுக்குள் ஒற்றுமையின்மையே தோல்விக்குக் காரணம். ராணுசிங் தோல்வியால் வற்பட்ட மனஸ்தாபத்தோடு நாளை நடக்கவிருக்கும் போரையும் எண்ணிப் படுக்கையிற் புரண்டவண்ணமாய் இருக்கும்போது பீஜப்பூரில் ஒரு குடிசையில் நடக்கும் சம்பாஷணையைக் கவனிப்போம்.

"மகனே! முதல் இருநாட்போரிலும் உதயபுரிக்கே வெற்றிகிடைக்குமென்றிருந்தேன். இன்றைப் போரில் அதற்கு மாறாய் முடிந்தது. உதயபுரிச் சேனைக்கே வெற்றி கிடைக்கவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். ஆகையால் நீ உதயபுரிச்சேனைக்கு உதவிக்காகப் புறப்படு."

"அன்னாய்! மாற்றருக்கு நம் தேயத்தைக் காட்டிக்கொடுக்கலாமா? நான் பீஜப்பூர் சேனைக்கல்லவா உதவி செய்யவேண்டியவன்."

"குழந்தாய்! நீ சொல்வது சரியே. எனினும் இம்முறை யுத்தத்தில் நீ உதயபுரிக்கே உதவிசெய்யவேண்டியவனுகின்றாய், உன் தாயின் சொல்லைத் தட்டாதே. சீக்கிரம் புறப்படு. பொழுது புலரப்போகின்றது. யாருமறியாது தளபதி ராணுசிங்கைப் போய்க் காண். ஒன்றில் வெற்றி அன்றேல் மரணம் என்று எண்ணிப் போ. உயிரோடு மீளுவாயேல் பின் எல்லாம் கூறுவேன் தயாராயிரு."

அன்றிரவு உதயபுரிச் சேனு வீரருக்கு உறக்கமே கிடையாது. கூட்டங் கூட்டமாகத் தாம் அன்று காட்டிய ஒற்றுமையீனத்தையிட்டு வருத்தப்பட்டவர்களாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். நாளைப் போரில் எல்லோரும் ஒன்றுபட்டு எதிரிகளைத் தாக்கவேண்டுமென்பது அவர்கள் எண்ணம். இப்படி அவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது ஓர் வாலிபன் போர்க்கோலங் கொண்டவனுய் ஓர் புரவிமீது சவாரிசெய்துகொண்டு உதயபுரிச் சேனுவீரர் தங்கியிருக்குமிடத்துக்கு வந்தான். தளபதி ராணுசிங்கைப்பார்க்க விரும்புவதாகக் காவலரிடம் கூறினன். உடனே ராணுசிங்கின்முன் நிறுத்தப்பட்டான்.

ராணுசிங்:— நீ எந்த ராச்சியத்தைச் சேர்ந்த வீரன்?

வாலிபன்:— பீஜப்பூரை.

ராணுசிங்:— இவ் அகாலத்தில் வரவேண்டியதேன்?

வாலிபன்:— உங்கள் சேனைக்கு உதவிசெய்ய.

ராணுசிங் வாலிபனை ஏற இறங்க ஒருமுறை பார்த்தான். வாலிபனின் முகம் அவன் கபடமற்றவன் என்பதைக் காட்டிற்று.

"சொந்தத் தேயத்துக்கல்லவா தொண்டு செய்யவேண்டும்."

"வாஸ்தவமே. நானு மப்படியே எண்ணியிருந்தேன். இது என் அன்னையின் கட்டளை."

"உன் அன்னை யார்?"

"சாந்துபீபி."

ராணுசிங்கின் மனதிற் 'பலவித எண்ணங்கள் தோன்றின. சிலகாலங்களுக்குமுன், தூக்கிப்போடப்பட்டான். கண்கள் கலங்கின. சாந்துபீபி சாந்துபீபி என்று இரண்டுதரம் உச்சரித்தான்.

"சரி, சேனையில் எவ் உத்தியோகம் ஏற்க விருப்பமோ?

"சேனுபதிக்குக் குறைந்த எதுவும் ஏற்க எண்ணமில்லை. அன்னையின் கட்டளையும் அதுதான்."

"நான்"

"நீரா, நீர் உப தளபதியாகவேண்டியதுதான்."

வாலிபனின் வார்த்தைகள் அவன் சேனுபதிக்குத் தகுதியானவன்தான் என்பதை உணர்த்தின. ராணுசிங்கும் அவன் வார்த்தைக்கும் தோற்றத்துக்கும் கீழ்ப்படிந்தான். வாலிபனே, உன் இஷ்டப்படி சேனுபதியாகிக்கொள், நான் உனக்கு உதவியாளாகின்றேன். நாளைப்போரை நடத்தவேண்டியவன் நீதான். என் சேனைகளுக்கும் இதை அறிவித்து விடுகின்றேன்.

மற்றைநாள் வாலிப சேனுபதியின்கீழ் உதயபுரிச் சேனுவீரர் உற்சாகமாகப் போர்புரிந்தனர். பீஜப்பூர் சேனைகள் புறங்கொடுத்தோடின. வாலிபனின் போர்த்திறனைக்கண்டு ராணுசிங் மெச்சினன். இரு தேச அரசர்களும் சமாதானம் செய்துகொண்டனர். வாலிபனே ராணுசிங்கிடமாவது உதயபுரி அரசனிடமாவது எவ்வித உபகாரத்தையும் கருதாது தன் தாயைக்காண ஓடிவந்தான். வந்துமென்? தன் தாயைப் பீஜப்பூர் அரசன் ராசதுரோக குற்றத்திற்காகச் சிறை செய்திருப்பதாக அறிந்து நேரே அரசனிடஞ் சென்றான். காவலாளர் இவனையுஞ் சிறைசெய்து தாயோடு அரசன்முன் நிறுத்தினர்.

"சாந்துபீபி! இதோ உன்மகனும் வந்துவிட்டான். இராஜ புத்திர மங்கையாய் இருந்தும் உன் தேயத்துக்கும் உன் அரசனுக்கும், விரோதமாக உன் மகனை மாற்றார் படைக்கு உதவிசெய்ய அனுப்பலாமா? இதுதான் இராச புத்திரர்களுக்குரிய வீரமோ? நீ பெண்ணுக இருந்தாலும் உனக்கும் உன் மகனுக்கும் இராசத்துரோகம் செய்ததற்கு விதிக்கப்படும் மரண தண்டனையை விதிக்கவேண்டியிருக்கிறதே என்று வருந்துகின்றேன்."

"அரசே! இன்றைக்கு இருபது வருஷங்களுக்குமுன் உதயபுரி அரசன் இந்த அரண்மனைக்கு விருந்தாளியாக வந்தபோது அரசனின் மெய்க்காவலனுக ஒரு இளம் வாலிபனும் வந்திருந்தான், ஒருநாட் சாயங்காலம் நான் எங்கள் குடிசைப்பக்கம் உலாவிக்கொண்டு நிற்கும்போது அவ்வாலிபன் குதிரையிற் சவாரிசெய்துகொண்டு கிராமங்களைப் பார்த்துக்கொண்டு வரும்போது என்னையுங் கண்டான். ஒருவரையொருவர் அன்புடன் நோக்கினோம். அன்றுதொடங்கி அவன் அவ்விராச்சியத்தினின்றும் தங்கள் தேயத்துக்குப் போகும்வரையும் அடிக்கடி என்னைவந்து சந்திப்பதுண்டு, தங்கள் தேசத்துக்குப் போனபின் அரசனின் உத்தரவுபெற்று என்னை அழைத்து முறைப்படி மணம்புரிந்து கொள்வதாகவும் வாக்களித்தான். கடைசிநாள் அவனைப் பிரிந்தபோது என் மனம் பட்ட பாட்டை என்னென்று கூறுவது. "காதல" கட்டாயம் என்னை அழைத்துக்கொள்ளுங்கள்; என்னைப் புறக்கணித்துவிடாதீர்கள் என்று இரந்தேன். "சூரியன் திசைமாறினும் உன்னை மறவேன்" என்று சத்தியம் கூறிச்சென்றவன் இன்னும் என்னை அழைத்ததுமில்லை; மணம் செய்ததுமில்லை. பின் அவன் வேறொரு பெண்ணை மணந்துகொண்டதாக அறிந்தேன். அவனுக்குப் பிறந்தவனே இப்பாலன். அவன்தான் இப்பொழுது உதயபுரிச் சேனையின் தளபதி ராணுசிங் என்பவன். அரசே! ராஜபுத்திர மங்கையர் ஒரே கணவனையே தெய்வமென்று கொள்பவரன்றோ? இவன் தன் தந்தையின் புகழை நிறுவினன். நான் என் கணவனுக்குச் செய்யவேண்டியதைச் செய்தேன். மரணதண்டனைக்கு இருவரும் ஆயத்தம்" என்று மகனின் முகத்தைப் பார்த்தாள். வாலிபன் முகம் மலர்ந்தது.

வியப்போடு கதையைக் கேட்டுக்கொண்டிருந்த அரசன் ஆனந்த மேலீட்டால் "சாந்துபீபி! உன்னை மன்னித்தேன், உன் மகனே இனி என் சேனைக்கு அதிபதி. கவலை ஒழி என்று ஆறுதல் கூறி வாலிபனை அழைத்துத் தழுவிக்கொண்டான். பீஜப்பூர் சேனுபதி குமாரசிங் என்றால் அக்கால மற்றைய இராச்சியங்கள் எல்லாம் நடுங்கிக்கொண்டேயிருந்தன. கற்புடைய மங்கையரையும் சுத்த வீரரையும் போற்றுபவனன்றோ அரசன்?

(கதை நடந்தகாலம் எது என்று கேளாதீர்கள்)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 6919

மாதகல்

சீமாம்பிள்ளை—மேரி யோசேப்
வழக்காளி

1. T. சத்தியாப்பிள்ளை சூசைஅப்புவும் பெண்
2. அக்காத்தை அம்மா மாதகல்
3. சூசைப்பிள்ளை பேர்நாந்துப்பிள்ளை (மாதகல்) தற்சமயம் சிறம்பானில்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 6919-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1936-ம் ஆு சித்திரை மீ 4உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்புக் கோவிற்பற்று மாதகலில் இருக்கும் காணி நிலப்பரப்பு இலா. $16\frac{1}{2}$ குளி 2. கல்வீடும், கிணறும், வான்பயிர் செய்பயிர்களும். எல்லைகள்: கிழக்கு ஒழுங்கையும், வடக்கு செல்லையா கைம்பெண் அன்னம்மாவுக்கும் பங்காளருக்கும், மேற்கு பாவிலுப்பிள்ளை அமிர்தநாதனுக்கும் ரோட்டும், தெற்கு ரோட்டு. இந்த எல்லைகளுக்குள் அடங்கிய ஆதனமும் அதைச்சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்.

யாழ்ப்பாணம், 1936-ம்ஆு பங்குனிமீ 5உ

R. Vaithesepara Iyer
(97) 15-3-36 கொம்மிஷனர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 8028

புன்னலைக்கட்டுவன் வைத்திலிங்கம் -பொன்னம்பலம் வழக்காளி

1. முத்தர் கதிரிப்பிள்ளை பெண் 2. ஆச்சி முத்து. ஏழாலை எதாராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 8028 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும 1 துண்டுக் காணியை 1936ஆு சிததிரை மீ 6 உ திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### கரணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் ஏழாலையில் இருக்கும் காணி 'சூரியன் கலட்டி' நிலப்பரப்பு இலாச்சம் 28ம் வான்பயிர் செய் பயிர்களும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உருத்தும் எல்லைகள்: கிழக்கு வல்லிபுரம்—வைத்திலிங்கத்துக்கும் இளையதம்பி பெண் கதிராசிக்கும் வடக்கு இளையதம்பி பெண் கதிராசிக்கும் சின்னத்தம்பி—சங்கரப்பிள்ளைக்கும் சுடுகாடும் கதிரேசு—சின்னத்துரைக்கும் மேற்கு சுடுகாடும் கதிரேசு—சின்னத்துரையின் ஆதனமும் ஒழுங்கையும் சின்னையா பெண் உமையாத்தையின் ஆதனமும் தெற்கு ஒழுங்கையும் சின்னையா பெண் உமையாத்தையின் ஆதனமும் இதில் அடங்கிய ஆதனமும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்,

யாழ்ப்பாணம், 1936ஆு பங்குனிமீ 4உ

R. Vaitheespara Iyer
(98) 15-3-36 கொம்மிஷனர்



## The Jaffna Timeber Depot & Workshops

யாழ்ப்பாண
மரக்காலையும் மரத்தொழில் நிலையமும்
ஆஸ்பத்திரி ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

கிளை நிலையம் :—
புதிய மரக்காலை, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

உள்நாட்டுக் கைத்தொழிலையே ஆதரியுங்கள்!

வித்தியாசாலைகளுக்கும் வீடுகளுக்குமுரிய மரத் தளபாடங்கள்
தற்காலத்திற்கேற்ற சிறந்த புதிய மாதிரிகளில்
திறமைவாய்ந்த தொழிலாளரைக்கொண்டு செய்விக்கப்பெற்று
விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

கதவு நிலைகள், யன்னல்கள் முதலியன செய்வதிற் பிரக்யாதிபெற்றவர்கள்.

எல்லா ஓடர்களும் கூடிய கெதியில் கவனிக்கப்படும்.

விலை சகாயம்! சிறந்த வேலை!

இலங்கையிலுள்ள பலவகையான மரங்களும்
எங்களிடம் விற்பனைக்கு இருக்கின்றன,

வீடு கட்டுவதற்கும் தளபாடங்கள் செய்வதற்கும் வேண்டிய அளவுகளில்
எல்லாவிதமான மரங்களும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை வந்து பரீட்சித்துப்பார்த்துத் திருப்தியடையுங்கள்!

தந்தி :— "FURNISH", Jaffna.

A. P. செல்லையா
*Managing Proprietor*

(96) 15-3-36


புலால் உண்பவருக்கு அருளால் வரும் இன்பமில்லை.

## கடிதம்

### ஊரெழு சைவபரிபாலனசபை

ஈழகேசரிப் பத்திராதிபர் அவர்கட்கு:-

ஐயா,

நிகழும் ஆங்கிலம் 10-2-36 லும் 13-2-36லும் பிரசுரமாகிய 'இந்துசாதன'ப் பத்திரிகையில், முறையே "கடித" என்றும் அற்றுப்போன ஊரெழு சைவவாலிப சங்கம் உயிர்ப்பிக்கப்பட்டதாகப் பாவித்துக் காரியதரிசியென்றும் சாற்று நாமத்துடன் வெளியிடப்பட்ட வருடாந்த மகாசபையின் நிகழ்ச்சிகட்குக் கண்டனமாக அவசியம் வெளிப்படுத்த வேண்டிய இக்குறிப்புகளைத் தங்கள் பத்திரிகை மூலம் வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

1930-ம் ௵ ஆனிமாசமளவில் சமயாபிமானங்கொண்ட இக்கிராமவாசிகளால் ஓர் சைவப் பள்ளிக்கூட ஸ்தாபகம் அவசியம் தேவை யென்று உணரப்பட்டு ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டதென்பதும் அக்கூட்டத்தில் 9 பேர் சேர்ந்த ஓர் நிர்வாகசபை ஓர் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து அரங்கேற்றும்படி ஏற்படுத்தப்பட்டதென்பதும் இவ்வூர் அறிந்த விஷயமே. மேற்படி பாடசாலை ஸ்தாபனத்திற்கு இணக்கமான இடம் இல்லாமையால் பிள்ளையார் கோவிலுக்கு முன்னோரால் தருமசாதனம்பண்ணப்பட்ட 'முல்லைக்காட்டை' என்னும் வளவு அக்கோயிலதிகாரிகளின் உத்தரவுப்படி ஓர் சிறுத்தொகை வாடகை வித்தியாசாலை நிதியிலிருந்து வருடாந்தம் இறுக்கப்படும் எனும் பொருத்தத்துடன் நிலையப்படுத்தப்பட்டு பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டப்பெற்றது. ஊரவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை மிகச் சொற்பமாயிருந்தபோது மேற்படி நிருவாகசபையார் பேரளவிலிருக்க, திரு. வே. தம்பையா அவர்களே பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கும் உபாத்திமார் வேதனத்திற்கும் வேண்டிய முழுத்தொகைப் பணத்திற்கும் பொறுப்பாக நின்று திரு. வி. வீரவாகு அவர்களின் உதவியையுங் கொண்டு கட்டிடத்தையும்முடித்து வேண்டிய தளபாடம், உபகாணங்கள் முதலியவற்றையும் வகுத்து மேற்படி பாடசாலையை வித்தியாபகுதியாரின் திருப்திக்குரிய ஓர்நிலைக்குக் கொண்டுவந்தாரென்பது உண்மையில் உண்மையே. இந்நிலையில் இப்பாடசாலையைத் தளம்பாது நடாத்துவதற்கு 'மலாயன் ஊரெழு சேவை சங்கத்'தினது பொருளுதவிகிடைத்ததும் யாவரு மறிந்த விஷயம். மூன்று வருஷ எல்லையில் எம்பெருமான் கிருபையால் மேற்படி பாடசாலைக்கு அரசாங்க நன்கொடை நியமனம் பெற்றது. ஆயின் அந்நன்கொடையைப் பெறுவதற்கு அரசாட்சியார் வேண்டுகோளின்படி ஆதனப்பிணை ரூபா 6500-க்கு கட்ட நிகழ்ந்தபோதே பேரளவிலிருந்த இந்நிருவாகசபையார் [illegible] ணங்கலப, மேற்படி பாடசாலையைப் பெருந்தொகைக் கடனுடன் மனந்தளராது ஊக்கத்துடன் இற்றைவரைக்கும் கொண்டு நடாத்திய திரு. வே. தம்பையா அவர்களே இச்சுமைக்கும் ஏற்பட்டுப் பிணையைக் கட்டி இற்றை வரைக்கும் மேற்படி பாடசாலையை நடாத்தி வருகிறாரெனபதும் அறிந்த விஷயமே. மேற்படி பாடசாலை தற்போது உயர்தர பாடசாலை யென்னும் உன்னத நிலைக்கு ஈடாகி விட்டதும், மரம் செடி வகைகளாலும் பூந்தோட்டத்தாலும் ஷெ பாடசாலை வளவு எவருடைய கண்ணுக்கும் வியப்பைத்தரக்கூடிய சீரான நிலையிலிருப்பதுமே இவருடைய ஊக்கத்துக்கும் கரிசனைக்கும் போதிய சான்றாகும். மேற்படி பாடசாலை விஸ்தாரணம் காரணமாகவன்றோ பாலர் வகுப்பிற்கு ஓர் பிரத்தியேகமான சாலையும் உபகரணங்கள் சேமிக்கப்பட்ட ஓர் அறையும் தற்போது அமைப்பில் இருக்கின்றன.

நிகழ்ந்த கருமங்களிப்படியிருக்க 1933ம் ஆண்டு ஆனி மாதம் வரையில் இவ்வூரவர்களிற சிலரை அங்கத்தவர்களாகக் கொண்ட ஓர் சங்கம், 'சைவவாலிப சங்க'மெனும் நாமத்துடன் உற்பத்தியானதென்று அச்சங்கத்தின் பிரமாணங்களடங்கிய அச்சிடப்பெற்ற ஓர் துண்டுப் புஸ்தகம் காண்பிக்கின்றது. அதன் பின்னர் அவ்வாண்டு மார்கழி மாசம் வரையில் சைவவாலிப சங்கம் என்னும் முகவுரையுடன் மேற்படி பள்ளிக்கூடத்தின் அறிக்கையொன்று அச்சிடப்பெற்றிருக்கக் காண்கின்றோம். அகஸ்மாத்தாய் மேற்படி பாடசாலையின் உரித்து மேற்படி சங்கத்தாருக்கும் உள்ளதாக அப்புஸ்தகத்தில் அச்சிடப்பெற்றிருப்பது வியப்புக்குரிய விஷயமே. ஊர்ப் பொதுசனமகாசபையால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக சபையாராலாவது, அல்லது பள்ளிக்கூடத்தை நடாத்தும் அதிபராலாவது மேற்படி பாடசாலையின் எவ்வித உரிமையும் மேற்படி சங்கத்தாருக்கு ஈடு படுத்தப்படல் எஞ்ஞான்றுக்கும்! "இரவற் புடவையில் இது நல்ல கொய்சகம்" என்பதை யொக்குமல்லவா? இஃதிப்படியிருக்க,

(1) இச்சங்கத்தின் நிலையை ஆராய்வாம். 1933-ம் ஆண்டு உற்பத்தியான மேற்படி சங்கத்தின் மகாசபையொன்று 1934-ம் ஆண்டு மாசிமாதம் வரையில் கூட்டப்பெற்றதாய்த் தெரியவருகின்றது. அற்றைய நாட் தொடக்கம் இற்றைவரைக்கும் அதன் சட்டமுறைப்படி ஆறுமாசங்கட் கொருமுறையாகக் கூட்டப்பட வேண்டிய மகாசபைகள் கூட்டப்படவில்லை ஆகையால் அச்சங்கம் அற்றுப் போனதன்றோ.

2. காரியமிப்படியிருக்க, நிகழும் ஆங்கிலம் 18-1-36-ல் ஓர் மகாசபை முறையான அறிவித்தலின்றிச் சடுதியில் சிலரால் கூட்டப்பட்டது உண்மை நிலையாயிருக்க, முறையே கூட்டப்பட்டதென்றும், சனசமுகத்தால் மண்டபம் நிறைந்திருக்கப் பெற்ற தென்றும், அதில் சென்றவருட அறிக்கைப் பத்திரம் வாசிக்கப்பட்டதென்றும் கடிதர் எழுதியது மறக்கொணு விந்தையே. அன்றியும் அத்தருணம் நிகழ்ச்சிகளில், முக்கிய நிகழ்ச்சிகள் வேணுமென்று மறைக்கப்பட்டு மிருக்கின்றன. இவைகளைப்பற்றி வாதிக்க இடம் ஏராளமாயுள தாயினும் இது தருணமல்லவென்று விடப்பட்டது.

3. ஓர் சங்கத்தின் தலைவரும் அதன் காரியதரிசியுமான பொறுப்பாளர்கள் அச்சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட பிரமாணங்களை நன்கறியாமல் விட்டதனாலன்றோ அச்சங்கம் அற்றுப்போக நேரிட்டது.

4. இந்நிலையில் அச்சங்கத்தை மறுபடியும் புதுப்பிக்கவேண்டித் துணிந்த ஒரு சாரார் சட்டமுறையாகத் தாங்களும் ஒத்துழைக்க விரும்பிய மறுசாரார் எழுகிய மனுப்பத்திரத்தில் காட்டப்பட்ட குறை குற்றங்களை ஒப்புக்கொண்டு சங்கத்தை நடாத்தியிருந்தால் பிரிவினையின்றி அற்றுப்போன சங்கம் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவதற்கு ஏதுவாயிருக்குமே. அப்படியில்லாமல் இவ்விஷயத்தில் அக்கிராசனர் நடுநிலை நாட்டாது தழம்பினபடியாலன்றோ மறுசாரார் அச்சங்கத்தை அற்றுப்போகவிட்டு இன்னோர் சங்கத்தை ஸ்தாபித்து நடாத்தி வருகின்றனர். சென்ற ஆங்கிலம் 7-2-36 வெளிவந்த "ஊரெழு சைவபரிபாலனசபை"யாரின் அறிக்கைப் பத்திரம் இதற்குத் திருஷ்டாந்தமாவதுமன்றி மேற்படி பகுப்பாரின் தத்துவங்கள் எத்துணைத்தென்பதையும் நன்கு விளக்கும்.

5. இத்தகைய பேர்களை அங்கத்தவராகக் கொண்ட ஊரெழு சைவவாலிப சங்க நாமத்துடன் வெளிவரும் ஒருசாரார் மாத்திரமா எச்சங்கத்தவரும் எச்சங்கத்திலும் அமையாதவருமாகிய யாவருக்கும் பொதுவாகிய ஸ்ரீ கணேசவித்தியாசாலைக்குத் தத்துவகாரரை (Trustees) ஏற்படுத்தச் சுதந்திரமுடையர்?

ஆகவே சைவ வாலிப சங்கமெனும் நாமத்துடன் வெளிப்படுபவர் கணேசவித்தியாசாலையைப் பற்றிச் செய்து கொண்ட அல்லது செய்துகொள்ளும் எவ்வகைத் தீர்மானங்களும் சபைக்குரியனவல்லவென்பதை நிலைநாட்டுவதுமன்றி இந்துசாதனம் 10-2-36லும் 13-2-36 லும் வெளியிடான பிரசுரங்களில் அடங்கிய தீர்மானங்கள் யாவற்றையும் இத்தால் நிராகரிக்கின்றோம்.

இங்ஙனம்
கௌரவ காரியதரிசி
(ஊரெழு சைவபரிபாலன சபையார் அனுமதிப்படி)


உண்மை அழகைப்பற்றி LORETTA YOUNG என்ற ஸினிமா நடிகை சொல்வதைக் கேளுங்கள்.




ஹொலிவுட் நகரிலும் இங்கிலாந்திலும் மிகவும் பிரபல ஸினிமா நடிகைகள் 857 பேர்களில் 846 பேர்கள் தங்கள் அழகை பாதுகாக்க லக்ஸ் டோய்லெட் ஸோப்பையே உபயோகிக்கிறார்கள். இதைத்தான் ஸினிமாபடச் சாலைகளிலெல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். லக்ஸ் டோய்லெட் ஸோப்பில் அதிசயிக்கத்தக்க ஏராளமான வெண்மை நுரை வெகு சீக்கிரத்தில் பொங்கி எழுகிறது. இந்த நுரை உடம்பின்மேல் பிடிக்கும் அழுக்கையும் அசுத்தத்தையும் அறவே எடுத்துவிடுகிறது. உங்கள் சருமத்தை மிருதுவாகவும் அழகாகவும் வைப்பதற்கு நீங்கள் இந்த ஸோப்பையே அவசியம் உபயோகிக்க வேண்டும்.

லக்ஸ் டோய்லெட் ஸோப் மிகவும் சுத்தமான சாமான்களிலிருந்து தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு கட்டியையும் அதன் இன்பமான வாசனையைக் காப்பதற்கு காகிதத்தினால் பொதியப்பட்டிருக்கிறது. இன்றே மேற்சொன்ன லேசான அழகு உண்டாக்கும் வழியை கைக்கொள்ளுங்கள்.




LUX TOILET SOAP

X-LTS 360-288A TAMIL LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

# உடல் நூல்.

(சாவைநகர், ஆசிரியகலாசாலைப் பிரசாரகர்
திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள் எழுதியது.)

(உரிமை ஆக்கியோனுக்குரியது)

5-ம் அதிகாரம்.

## சுவாச மண்டலம்
## (The Resperatary System)

இவ்வதிகாரம் சுவாசஉறுப்புக்களினமைப்பையும் அவைகளின் தொழில்களையும் விபரித்துக்கூறுகின்றது.

சுவாசஉறுப்புக்களுக்கும் நந்தேகத்திற்குமுள்ள தொடர்பு. நமக்குள் சக்தி பிறக்கவேண்டுமாயின், நாம் நல்லாகாரங்களைத்தேடி உண்கவேண்டும். அவை நன்ருய்ச்சீரணித்து இரத்தமாக மாறவேண்டும். இந்நிலையில் இவ்விரத்தம் தேகத்தைப்போஷிக்க அல்லது பழுதுகளைத் திருத்த ஏற்றதல்ல. ஆகையால் இவ்வன்னரசம் (இரத்தம்) நல்லிரத்தமாய் மாறவும், காரிரத்தம் சுத்தமான இரத்தமாய் மாறவும் ஓர் செயல் வேண்டும். இச் செயல் சுவாச உறுப்புக்களாலாகின்றது.

### சுவாச உறுப்புக்களின் விபரம்

(1) நாசி அல்லது வாய்:- நாசிமுகத்தில் அமைந் திருக்கின்றது. ஓர் வகைக் குருத் தெலும்பாலானது இருகூறுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இரு துவாரங்களையுடையது. உணர்ச்சி நரம்புகளும், இரத்தநரம்புகளும் அமைந்திருக்கப்பெற்றது. ஆகையாற்றான் நற்கந்தம், துர்க்கந்தம் என்ற உணர்ச்சி அதனுள்தோன்றுகின்றது. இது நம் உச்சுவாசத் தொழிலுக்கு ஓர் யந்திரம்போல் விளங்குகின்றது. இதன் கண் அமைந்திருக்கும் மயிர்க்குச்சுக்கள் நம் உச்சுவாச பவனத்திலுள்ள அசுத்தங்களைத் தடுத்து வைத்திருந்து வெளியேற்றுகின்றன. இந் நாசிமூலம் நாம் சுவாசிக்கும்போது பவனம் சுத்திகரிக்கப்படுவது மாத்திரமன்றிச் சூடாக்கவும் படுகின்றது. நாசியின்கண் அமைந்திருக்கும் இரத்த நரம்புகளே நாமுச் சுவாசிக்கும் பவனத்தைச் சூடாக்கி அனுப்புகின்றன.

(2) கிருகம்:- (The Pharyn) இது உருவத்தில் எண்ணெய் பெய் குழல் "புனல்" போன்றது. நாசித் . துவாரங்களின் அந்தங்களி லமைந்திருக்கிறது. இது நான்கு அங்குல நீளமான ஓர் குழலாயிருக்கின்றது. இரைக் குழலும் தமரசமாகிய சுவாசக் குழலும் இங்கிருந்து கிளைக்கின்றன. இரைக்குழல் பின்பக்கமாயும், சுவாசக்குழல் முன்பக்கமாயும் அமைந்திருக்கின்றன. முன்னையது தசையாலானது. பின்னையது முருந்து அல்லது குருத்தென்பாலாயது. ஆகையாற்றான் இரைக் குழல் வெறுமையா யிருக்கும்போது சுருங்கியும், சுவாசக்குழல் எப்போதும் திறந்தும் வைக்கப்பட்டுமிருக்கின்றது.

(3) சுவாசக் குழல்:- (The Trachea) இது ஓர் உருண்டையான முருந்தாலாகியநாலரை அங்குலநீளமுள்ளதும், ஒருஅங்குல அகலமுள்ளதுமாகிய ஓர் குழாய். இது முருந்துக்களாலாக்கப்பட்டிருத்தலால் இரைக் குழல் போல் சுருங்காது இருக்கின்றது. இதன் குழாய்க்குள் "சீலியா" வென்னும் மயிர்க் குச்சுப்போன்ற அணுக்களிருப்பதினுல் உள்ளிருக்குஞ் சளியைப்படிப்படியாய் வாய் வழியே வெளியேற்றுகின்றன.

(4) கிளைச்சுவாசக் குழல்கள்: (The Brorchi) இவைகள் தமனிகள் என்றும் வழங்கப்படுகின்றன. இவைகள் சுவாசக்குழலிலிருந்து கிளைத்துப் பக்கத்துக்கொன்ருய் இருகிளைகளாகப் பரக்கின்றன. வல, இடச் சுவாசாசயங்களுட் சென்று பலகிளைகளாக வியாபிக்கின்றன. இவைகள் அமைப்பில் சுவாசக் குழலையொத்தவை.

(5) சுவாசாசயங்கள்:- (The lungs) பொகுட்டு வடிவமாய நெஞ்சறையுள் ஒவ்வொரு பக்கத்துக் கொவ்வொன்ருய் இரத்தாசயத்தைத்தழுவிக்கொண்டிருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றும் பரிபுப்புசம் என்னுமோர் சவ்வினுற் சூழப்பட்டிருக்கின்றன. இவைகள் வெண் சிவப்பான நிறமுள்ளவை. இவைகளிலே சுவாசக்கண்ணறைகளும் சுவாசக் குழல்களும், அநேக சிறு இரத்த நாம்புகளுட், குழல்களும் அமைந் திருக்கின்றன. இது இசிவுள்ள சவ்வுக் கண்ணறைகளாலானவை. கூரிய ஆயுதங்களாற்றுனும் சுலபமாய் அரிய இயலாததன்மை வாய்ந்தவை. பார்வையிற்கடற்பஞ்சை யொத்தவை. காற்று உட்செறியும்போது வியாபித்தும், வெளியேறும் போது சுருங்குந்தன்மையுமுள்ளவை. கொஞ்சம் பவனம் எப்போதும் அவைகளில் உறைந்திருக்கின்றது. ஆகையாற்றான் சுவாசாசயத்தின் ஓர் பாகத்தை சலத்துள் இடும்போது அது மிதக்கின்றது.

(6) விதானம்:-(The Diaphragm) இது பேசியாலானது. நெஞ்சிலிருக்கும் சுவாச உறுப்புக்களையும், சீரண உறுப்புக்களையும் பிரித்து அவைகளின் மத்தியில் பரந்து கிடக்கின்றது. விதானம் சுருங்கிப் பதி வதினுற்றான் நெஞ்சறை விசாலித்துக் காற்றுச் சுவாசப்பைக்குட் செல்கின்றது. இது பின் விரிவாய்க்கூறப்படும். இவ்வுறுப்புக்களின் தொழில்களை ஆராயுமுன் இவைகளைத் தொழிற்படுத்தும் உதானனைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

நாமுட்கோள்ளும் ஆகாயத்தின் பங்குகள்.

| | |
|---|---|
| இலவணவாயு | 78·09 |
| பிராணவாயு | 20·94 |
| கரிவாயு | ·03 |
| சலவாயு முதலியன | ·94 |

இலவணவாயு :-இதுகளங்கமற்ற, நிறமற்ற, ருசி அற்ற, மணமற்ற ஓர் வாயு. இது மிகவும் மந்தமான வாயு. தகனக்கிரியைக்குதவாதது. உச்சுவாசத்துக்கும் உபயோகமற்றது. இதன் பிரதான உபயோகம் பிராணவாயுவின் முயற்சியைக் குறைத்து மட்டுப்படுத்துவதே.

பிராணவாயு :-இது பரமாணுவின் விசேஷ கூறுயிருக்கின்றது. இது களங்கமற்றது. மணமற்றது. ருசியற்றது, சுவாசத்துத்கும் தகனக்கிரியைக்கும் அவசியமானது. இதுசீவராசிகளைப் போஷிக்கின்றது இது சலவாயுவுடன் கலக்கும் போது நீருண்டாகின்றது.

கரிவாயு :-இது களங்கமற்றது நிறமற்றது. ஆனுல் மணம் ருசியுள்ளது. சிறுபாகம் மாத்திரம் சுத்தபவனத்திலமைந்துள்ளது. பாரமானது. (பரமாணுவிலும் ஒன்றரை மடங்கு பாரமானது) இதன் இருக்கையைப் பரீட்சை முறையாய் நாமறியலாம். சுண்ணும்புத் தண்ணீருள் சிறிது கரிவாயு கலக்குமேயாகில் சலம்பால்நிறத்தை அடையும். இது தாபர வஸ்துக்களுக்காகாரமாய் அமைந்திருக்கின்றது. இது தீ எரிவதினுலும், சீவராசிகளின் நிச்சுவாசத்தினுலும், பொருட்கள் பதனழிவதினுலும் ஏற்படும் வாயுவாயிருக்கின்றது. இது பங்கில் அதிகம் வியாபிக்கவேண்டிய தொன்ருயிருந்தும், கணக்கற்ற தாபரங்களுக்காகாரமாய் உபயோகப் படுவதால் இதன் விருத்தி குறைந்துபோகிறது.

நீராவி :-நீராவி ஆகாயத்தின் ஓர் பங்காயிருக்கின்றது. இது பலவழிகளிலுண்டாகின்றது. கடல்களின் நீர் ஆவியாக மாற்றப்படுவதாலும், மிருகங்கள் வெளியேற்றும் பவனம் கலப்பதாலும், தீ எரிவதினுலும் உண்டாகின்றது.

(a) உச்சுவாசம் அல்லது சுவாசம் வாங்கல்:-சுவாசப்பைக்குட் சுவாசம் வாங்குவதாகிய தொழிலாம். உச்சுவாசம் நிகழும்போது விதானம் சுருங்கி ஒடுங்கிக் கீழேபோக நெஞ்சறை விசாலித்து பழுக்களின் பேசிகளின் இழுப்பினுலே முன்னுகவும் மேலாகவும் துன்னுகின்றது. அப்போது சுவாசப்பை விரிந்து பவனத்தால் நிரப்பப்படுகின்றது. இதுவே சுவாசம் வாங்கல்.

(b) நிச்சுவாசம் :-உள்ளே வாங்கப்பட்ட சுவாசத்தின் ஓர் பங்கு வாய், மூக்கு என்பவைகளின் வழியாய் வெளியே தள்ளப்படுகின்றது. இந்நேரத்தில் நெஞ்சறை சுருங்கிப் பழுக்கள் பதிந்து விதானம் மிதக்கின்றது. இதுவே சுவாசம் விடல் எனப்படுவது.

சாதாரணமாய் ஒருமுறை சுவாசிக்கும்போது சுமார் 30 கன அடி பவனம் உள்வாங்கப்படுகின்றது. சுவாசம் விடும்போது சுமார் 30 கன அடி பவனம் வெளியேற்றப் படுகின்றது. இவை சேடபவனம் எனப்படும். ஆழமாய்ச் சுவாசம் வாங்கும்போது 100 கன அடி பவனம் உள்வாங்கப்படுகின்றது. இது பூர்த்தியாக்கு பவனமெனப்படும். சுவாசாசயத்தில் நிலையாயிருக்கும் பவனம் 100 கன அடி. இது நிலையான பவனமெனப்படும். ஆகவே ஓர் ஆழமான சுவாசத்தின் பின் சுவாசத்தை நாம் நிற்பாட்டினுல் நம் சுவாசாசயம் 200 கன அடி பவனத்தைத் தன்னுள் அடக்கி இருக்கக் காண்பேம்.

ஒருவருடைய அறையில் இருக்கும் பவனம் சுவாசத்துக்கேற்ற நன்னிலையிலிருக்க வேண்டுமாயின் அவ்வறையுள்வந்து கலக்கவேண்டிய பவனத்தினளவு சாதாரணமானவொருவர் ஒரு நிமிஷமொன்றுக்கு 16 முறை சுவாசிக்கிருரென்றும் ஓர் முறையில் அவர் உட்கொள்ளும் பவனம் 30 கன அங்குலமென்றும் அவர் வெளியேற்றும் பவனமும் அதே அளவென்றும் முன் கூறப்பட்டுள்ளன. ஆகையினுல் ஒருவர் ஒருமணித்தியாலத்தில் வெளியேற்றும் பவனம்,

$$= \frac{30 \times 16 \times 60}{1728} \text{ க. அடி.}$$

இதில் கரிவாயுவினளவு,

$$= \frac{30 \times 16 \times 60}{1728} \times \frac{4}{100} \text{ க. அடி.}$$

$$= \cdot 6 \text{ க. அடிபவனம்.}$$

சுத்தபவனத்திலுள்ள கரி வாயுவினளவு 1000 க்கு 04 பங்கு. நம்சுவாசாசயம் நம் சுகத்துக்குக் கேடின்றி ஏற்றுக் கொள்ளக்கூடிய கரிவாயு = ·06 பங்கு. சுத்தபவனத்திலுள்ள கரிவாயுவிலும் ·02 பங்கு கூடியது. ஆகையினுல் ஒருவர் ஒருமணித்தியாலத்தில் வெளியேற்றும் கரிவாயு. 6 கன அடி 100 கன அடி சுத்த பவனம் ·4 கன அடி கரிவாயு வைத்தன்னுள் கொண்டுள்ளது. இன்னும் ·02 பங்கை மேலதிகமாக உட்கொள்ளக் கூடியது.

ஆகவே ஒருவர் ஒரு மணித்தியாலத்தில் வெளியேற்றும் கரிவாயு = ·6 கன அடி.

100 கன அடி சுத்தபவனம் தன்னுள் கொண்டுள்ள கரிவாயு } = ·04. கன அடி

இன்னும் மேலதிகமாகக் கொள்ளக்கூடிய கரிவாயு } = ·02 கன அடி

$\therefore$ ·6 கன அடி வாயுவை மட்டாக்காக வேண்டிய சுத்தபவனம் $= \frac{\cdot 6}{\cdot 02} \times 100$ கன அடி.

= 3000 கன அடி பவனம்.

ஒருவர் ஒரு மணித்தியாலத்தில் வெளியேறிய கரிவாயுவைச் சாந்திசெய்யத் தேவையான சுத்தபவனம் ·3000 க. அடிபவனமாகும்-

பவனத்தைப் பற்றிய மற்றைய விஷயங்களை பவனத்தைப் பற்றிய அதிகாரத்திற் கண்டுகொள்ள.


வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றிய
புதிய தமிழ் ஏழாந்தரக் கணிதம்

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கும்
உபயோகிக்கத்தக்கது.

கண்ணைக் கவரும் அழகிய பதிப்பு !
கருத்தைக் கவரும் உயரிய விளக்கம் !!

இதுபோன்ற ஒரு கணிதநூல் தமிழில் இதுவரையில்
வெளிவந்ததேயில்லை.

பிரதி விலை ரூபா ஒன்று.

பிரபல புத்தக வியாபாரிகளிடம் பெறலாகும்.

Publishers :-
வட இலங்கா புத்தகசாலை,
(64) 5-1-36.   பருத்தித்துறை. (Point Pedro)



சுத்தமான
கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சுயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

ஆ. சு. வேதாரணியம்பிள்ளை,
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னுகம்.

(50) 1-12-35×12-36.

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 3. காட்சி 2.

இடம்:—அரண்மனையில் ஓர் பாகம்.

விரதசாரணி மலர்கொய்து வருகின்ருள். கீசகன் ஓர்புறமாய்வந்து அன்னுளைக் கண்டனன்.

கீசகன்:—ஆ மின்னலை யொத்த வோர் பெண்மணி வருகின்றனள். பெண்ணே அன்றி அணங்கோவென மால்கொளவேண்டியிருக்கின்றது. அணித்தாகச்சென் ருய்வம். விழிகடான் எதற்கு கிகரென் றறிகிலம்,

"வேலோ கலையோ விலைமதியா நீலமோ
சேலோ பிணையோ தெரிந்திலதே—மாலார்
கருங்குவளைப் பூமலரோ கார்நீல வண்டோ
இருங் ணிணை நோக்கமது வே!"

இக்கண்ணிணைதான் கூரிய வேலாயுதங்களா? அம்புகளா? மதித்தற்கரிய நீலமணிகளா? கெண்டைமீன்களா? கவரிமான் விழிகளா? கருங்குவளை மலர்களா? கருநீலச் சுரும்பர்களா? ஏ பெண்ணுருத்தாங்கிய பூங்கொம்பே! நீ ஓர் நீரரமகளா, பூமகளா, நாககன்னிகையா, திருமகளா, அன்றிக் கலைமகளா? நானறியும்படி விடைபகர்ந்திடக் கோருகின்றேன்.

விரத:—ஏ மனிதா! ஏது முறை தவறி வார்த்தையாடுகின்ருய்! யானொரு கணிகையர்குல மாதென நினைத்தனையோ? "மலையிற் றேன் முடவனுக்குக் கிட்டுமோ?"

கீசக:—ஓதிம மனையாய்! உனை யான் தரணியை ஆளும் அரசியாக்குவேன்,

விரத:— ஏ மூடா!

"நவிலருங் கற்பினை மேலா யுணர்ந்து
நன் நங்கையரைத், தவலரு மன்னைய ரா
க்கா வறிவிலி! தாஙகவரும், கவலையி லாழ்
ந்துன் னுளந்தனில் வைததெனைக் காத
லித்தாய், அவலை நினைத்தோ ருரலை யிடி
க்கின்ற ஆண்பிள்ளையே!"

நீ மேலாம் நெறியாம் கற்பினை மதித்துப் பிறர் தாரத்தைத் தாயென மதித்தாயில்லை. "அவலை நினைத்து உரலை இடிக்கின்ற ஆண்பிள்ளை" நீதானு!

சுதக்கணை வருகின்ருள். கீசகன் ஒதுங்கினன்.

சுதக்:—வண்ணமகளே! யான் வருகையில் நும்மிருவர்க்குமிடையிலேற்பட்ட பிணக்கைக் கவனித்தேன். கீசகன் எனக்குத் துணைவனுவன். ஆகலின் அவனைத் தண்ணளியோடு நோக்குதி.

விரத:—அன்னுய்! நும் இல்லத்தின்கண் என்னை அன்பொடு மாதரித்துப் பின் மைத்துனியாக்க நினைப்பதும் நீதியா? நம்பினவர்க்கிரண்டகஞ் செய்யலாமா? அன்றியும், "நச்சுமரமானுலும் நட்டவர்கள் வெட்டுவாரா?"

சுதக:—விரதசாரணி! குளத்தின்கட் கிடைச்சியைப்போல் உள்ளத்தி னீரமின்றி விளங்குகின்றனை. நின் செயல் வளர்த்த கிடா கையிற்பாய்ந்து வெட்டுவதுபோ லிருக்கின்றது. தாய்க்காகாத மகள் வேறு யாருக்குதவுவள்!

விரத:—அம்மா! உண்டியு முடையும் ஒழிவின்றியுதவி உபசரித்துவைத்தபின் விரகத் தீயிற் றுன்புறும் அறிவிலியாம் கீசகனிடம் என்னை ஒப்புவிக்க வுன்னுவது, தத்தையை வளர்த்து மார்ச்சாலம் கையில் விடுவதை யொக்கும். நம்பினேரைமகத்திற் சனிபோல வருத்துவது நீதியாமோ? "மூகத்துக்கஞ்சி யவசாரியாயின் குலத்துக்கீனம்" என்பதும் தெரியாதா?

சுதக்:—(ஓர் மாலையைநீட்டி) விரத! இதோ இம்மாலையை எம்பிமுன்னின்று அவனது காத்திலீந்து பின் என்னெடும் வருகுவாய்.

விரத.—தாயே! தகாத புன்மொழிகளைக்கூறும் கீசகனிடம் மாலையையீந்து வருமாறு கற்பித்த தங்கள் கூர்மதியின் றிறம் வியக்கற்பாலது. நிற்க, "பட்டணத்து நரியைப் பனங்காட்டுநரி ஏய்த்தது" போலன்றோ நுஞ்செயல் விளங்கியது.

சுதக்:—விரத! "ஆறுவது சினம்" நந் துணைவன் கடுவட்டி யிறுத்த குடிபோல மெலிகின்ருன். அவனோடருளுரை பகர்வாய்!

விரத:— அம்மா!

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொ
ன்று, சூழினுந் தான்முந் துறும்"

என்றல்வா ஊழ்வலியைக் குறித்துக் கூறுவர். ஆயின் நுந்துணைவன் முன்வினைப் பயனுல் இங்ஙன மெலிகின்றனன். யானவன் மெலிவுக்கு யாது செய்குவன்?

சுதக்:—யாதும் புரிகல். அவனெடும் அன்புயருரையை இன்பொடும் புகலுதி. யான் செல்கின்றேன்.

(செல்கின்ருள்)

கீசக.—விரதசாரணி! ஏதுவார்த்தையின்றி நிற்பை? வார்த்தையுரைத்திடில் வாய்முத்தம் சிந்துமென்றோ மௌன நிலையைத் தாங்கினை?

விரத:—கீசகா! உலக வழக்கறியாது வீணவாவுந்த விளக்கில் விழு விட்டிலைப்போல இறத்தற்கு மறலியைக்கூவி அழைக்கின்றனை. நின் வெற்றுரைகளைப் பிறர் காதாற் கேட்பினும் நீ ஒன்றும் ஒழியாத பழிமொழிக் கிலக்காவை. "மழைக்கா லிருட்டாயினும் மந்தி கொம்பிழக்கப் பாயாது" என்பதை அறிவாயன்றோ!

கீசக:—(அணித்தாகச் சென்று) அன்னமனையாய்! பொன்னனையாய்!

(விரதசாரணி விலகினள். விராடன் வருகின்றனன். கீசகன் வெட்கி மறைந்தனன்.)

விராடன்:—வண்ணமகளே! யாது புரிகின்றனை? கீசக னிவ்விடத் தென்னே புரிந்தனன்?

விரத:—பெரியீர்! கீசகன் நெறியினிலையில் என்றனைக் கவலுறச்செய்குவன். தங்களைத் தஞ்சமென்றடைந்தவர்க்குத் தீதேற்படுமாயின் தங்கள் தரும சக்கரத்துக்குப் பங்கமேயன்றோ! என்னை இவ்விடரினின்றும் நீக்கியருள வேண்டுகின்றேன்.

விராட:—(தனக்குள்) இந் நிகழ்ச்சியில் யான் தலையிடுவேனுயின் கீசகனுமென் மைத்துனன்றன்னுல் எனக்குக் கெடுதி நேரினும் நேரும். ஆபின், யான் பராமுகமாய்ச் செல்வதே சாலும். (வண்ணமகளை நோக்கி) அவனெடும் பிணங்கல். நீ ஓர் அரசியாவது முனக்கு இசைவேயன்றோ!

(செல்கின்ருன்)

விரத:—ஆ! நன்று, நன்று நீதியின் போக்கு. மகிபனும் நம்போல் மங்கையர் முறையீடு கேட்டுக் குறை நீக்க வல்லுநனுயே காண்கின்ருன். இனி வாளாவிருப்பிற் கேடாய் முடியும். எனது கொழுநரி லொருவராம் வீமற்கு இதையெடுத் தியம்புதும்.

(போகின்ருள்)

[காட்சிமுடிகின்றது]

## நாகர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

னுனும் துணியுமா றில்லையென்பது பெறப்படும். இனி, முடிநாக ஓவியம் ஓவியராற் படைத்துப் புனையப் பட்டதெனினு மமையுமாதலின் அதனுனும் துணியுமாறில்லை. இவ்வோவியம் வட வாரியநாட்டுக் காணப்படுதலின் ஆண்டு வாழ்ந்தார் சிலர் கோலமாதல் வேண்டும். ஏனை நாட்டினும் காணப்படு மவ்வோவியமும் அவ்வாரியநாட்டினின்றும் வந்துபுக்காராற் செய்திருத்தல் வேண்டும். வேண்டவே முடிநாகர் ஆரியரும் ஏனை நாகர் தமிழருமா யிருத்தல் வேண்டும். இனிச் சொல்லொப்புமைபற்றி இருவரு மொருவரேயெனப் பின்னர்க்காலத்துத் துணியப் பட்டிருத்தல் வேண்டும். அன்றி, வான்மீகி இராமாயணத்துக் கிட்கிந்தா காண்டத்தில், வானர மறவர் சிலரைக் கீழைநாட்டிற் சீதையை ஆராய்ந்து தேடிவருமாறு சொல்லுவான், அவ்விடங்களு ளோரிடத்தில் "கன்னிக் குடுமியுடைய ஒருசார் மக்களுளர்" என்று கூறுதலின், முடியென்றது அக் குடுமியாயிருத்தலுங் கூடும். ஈண்டுக் கன்னிக் குடுமியென்றது தமிழர்போலப் பின்புறத்து முடியாது தலையுச்சியின் கண் முடிபோலக் குவிய முடிந்த குடுமிபோலும். அதனு னக்குடுமியை முடியென்று வழங்குதல் பொருந்துமாயிற்று. இனி, பர்மாநாட்டு மகளிர் தம் மயிர்முடியை உச்சிக்கண் முடிபோலப் புனைந்திருத்தல் இன்றுங் காணப்பட்டு வலியுறுத்தா நிற்கும். ஈண்டு முடிநாக ரென்னுஞ் சொல் பெண்பாற்கு மொப்பப் பொதுப்பெயராதல் ஆராயத்தக்கது. இனி, நாகவென்னும் வடசொல் ஆண்பாற் பெயராயினும் உயர்திணைப் பெயராகாமையும், நாகரென்னும் உயர்திணைச் சொல் வடசொல்லன்றென்பதனை வலியுறுத்தும். நாகத்தோ டியைபுடையாரை, பாண்டுவின் இயைபுடையாரைப் பாண்டவரெனவும், கங்கையின் மகனைக் காங்கேயனெனவும், கிருத்திகையின் மகனைக் கார்த்திகேயனெனவும், துருவதன் மகளைத் துரோபதையெனவும், பரதனே டியைபுடையாரைப் பாரதரெனவும், சுபலன் மகனைச் சௌபலன் எனவும், போசன் மரபினரைப் போசரெனவும் பெரும்பாலும் வழங்குமாறுபோல, நாகரென்னுஞ் சொல்லிடையே இயைபுணர்த்தும் இடைச்சொற் புணர்த்து நாகளர் என்ருற்போல வழங்குதலன்றி வழங்கப்படாமையானும், அவ் விடைச்சொல் இச்சொற் கின்மையானும் நாகரென்பது வடசொலன்று தமிழ்ச் சொல்லேயாமென்பதொருதலை. அதனுற் பாம்பெனப் பொருளுரைத்தலும், அதற்கேற்பக் கதை கூறுதலும் புனைந்து கட்டிய வழக்கேயன்றி உண்மை வழக்கன்று. (தொடரும்.)


# மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கோழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு: சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—00 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கோம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50.
ருத்தல் ஒன்றுக்கு ரூபா 40

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரில்வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தணக்கட்டை, சந்தண வில்லை, சாம்பிறுணிப் பதங்சம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுநட்டுக்கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊநியத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்; திருச்சி, டக்றர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்றர் ஜே. ஸெஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெற விருப்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும். தொடுவாய்ப்பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்:

**ஆ. இராசையா,**

சே. சிவக்கோழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

# "ஈழகேசரி ஆண்டுமடல்"

## தாது௵ சித்திரைத்திங்கள் க-ம் (13-4-36) நாளின்முன் வெளிவரும்

சிறந்த காகிதத்தில் 100 பக்கங்களுக்குமேலுள்ளதாயும்
இலங்கை, இந்தியாவிலுள்ள
சிறந்தபோறிஞர்களின் அரியபெரிய கட்டுரைகளுடனும்
நிழலுருவப்படங்களுடனும் இவ்வாண்டுமடல் வெளிவரும்

பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புவோர்
முற்பணமனுப்பித் தங்கள் பெயரைப் பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டும்

பிரதி ஒன்றின் விலை சதம் 50. அணா 8. மலாய்நாட்டுக்கு காசு 50.
தபாற்செலவு சதம் 16. அணா 3. காசு 20.

'ஈழகேசரி' அதிபர், சுன்னுகம்.

## விளம்பரம் செய்வதற்கு விசேட வசதி!

### ஸ்ரீமாந் வை துரைசாமி B. A., M. S. C. அவர்கட்கு வரவேற்பு

இலங்கை இராச்சிய மந்திர சபை அங்கத்தவரும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுமாகிய ஸ்ரீமாந் வை. துரைசாமி B. A., M. S. C. அவர்கட்கு, புங்குடுதீவு வாசிகளின் சார்பில் ஓர் உபசாரணைக் கூட்டம் நிகழும் யுவவருஷம் மாசிமாதம் 17-ந்திகதி (29-2-36) சனிக்கிழமை மாலை 7-மணியளவில் நடந்தேறியது.

ஸ்ரீமாந் வை. துரைசாமி B. A, M. S. C. அவர்களை அவர்களது விடுதியிலிருந்து மேளவாத்தியத்துடன் ஸ்ரீ சுப்பிரமண்ய வித்தியாசாலைக்கு அழைத்து வந்ததும் வரவேற்புச்சபைத் தலைவர் ஸ்ரீமாந் சி. இ. சதாசிவம்பிள்ளை யாசிரிய ரவர்கள் பிரதிநிதி யவர்களையும் மற்றும் சபையோரையும் வரவேற்று நன்றி கூறினர். பின்னர் புங்குடுதீவுக் கிராமச்சங்கத் தலைவர் ஸ்ரீமாந் வ. பசுபதிப்பிள்ளையவர்கள் தலைமையில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. பிரதிநிதி யவர்கட்கு பிரம்மஸ்ரீ சு. சோமசுந்தரக் குருக்களவர்களால்மாலைசூட்டப்பட்டதும் ஸ்ரீ. கணேச வித்தியாசாலை மாணவர்களால் வந்தனப்பா பாடப்பட்டது. அதன்பின்னர் பிரதிநிதியவர்கட்குப் புங்குடுதீவு வாசிகளின் சார்பால் தயாரிக்கப்பட்டிருந்த வந்தனோபசாரப் பத்திரமொன்று ஸ்ரீகணேச வித்தியாசாலைத் தலைமை யாசிரியர் ஸ்ரீமாந். க. செல்வத்துரையவர்களால் வாசித்தளிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீமான்கள் பிரான்சிஸ் சுவாமியாரவர்களும், புங்குடுதீவு மகாசன சபைத்தலைவர் க. யோகுப்பிள்ளையவர்களும், பிரசித்த நொத்தாரிஸ் வே. சிவப்பிரகாச மவர்களும், ஆசிரியர் தீ. சேதுபதியவர்களும், உடையார் ஆ. சரவணமுத்து அவர்களும், ஆசிரியர் நீ. ஆறுமுகமவர்களும், வைத்தியர் சி. கணபதிப்பிள்ளையவர்களும், ஆசிரியர் சி. இ. சதாவம்பிள்ளையவர்களும் எம் தீவுக்கு வேண்டிய வசதிகளைக் கேட்டார்கள். அதில் விசேடமாய்ப் புங்குடுதீவுப் பாலமே முக்கியமானதென வற்புறுத்தப்பட்டது.

பின் தலைவரவர்கள் முற்கூறிய குறிப்புரைகாரரின் குறிப்புரைகளை அனுவதித்ததும், அத்துடன் கல்வி சம்பந்தமாய்ச் சில திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும் பேசினர். பின்னர் தலைவரவர்களெழுந்து உபசாரப் பத்திரத்திற்கு விடையளிக்கையில், இத்தீவு வாசிகள் படும் சங்கடங்களைத் தனக்கு 'நன்கு தெரியுமென்றும், கடந்த ஆண்டில் இப் பாலவிஷயமாக நடந்த நடைமுறைகளில் வடமாகாண அதிபரவர்களை நேரில் கண்டு இதுவிஷயமாகத் தான் பேசியதாகவும், முன்னர் சட்டநிரூபணசபையில் இதுவிஷயம் தான் பேசியதாகவும் குறிப்பிட்டார். பிரதிநிதியவர்களின் பேச்சின் பின்னர் வரவேற்புச் சபைக் காரியதரிசி ஸ்ரீமாந் சு. சபாரத்தினம் ஆசிரியரவர்கள் பிரதிநிதியவர்கட்கும் சபையோர்க்கும் நன்றிகூறி, எம் பிரதிநிதியவர்கள் இலங்கை அரசாங்கசபையில் ஒரு மந்திரியாக விளங்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பதாகக் கூறி முடித்தனர். கூட்டம் தேவார பாராயணத்துடன் பூர்த்தியாயதும் பிரதிநிதியவர்கள் பின்னரும் மேளவாத்தியத்துடன் வித்தியாசாலையிலிருந்து அவர்களது விடுதிக்குச் சபையோரால் அழைத்துக்கொண்டு போய் விடப்பட்டார். (கடித)

### வைத்தியசாலைகளில் திருத்தங்கள்.

வைத்தியசாலைகளைக் காலத்துக்குக்காலஞ் சென்று பரீட்சித்தற்காக புதிய உத்தியோகத்தர் நியமிக்கப் படப்போகின்றனரெனப் புதினங்கள் கூறுகின்றன. இவர் கொழும்பில் வைத்தியப்பகுதி மத்திய கந்தோரிலேயே கடமை இயற்றுவர். ஆனல் இடைக்கிடைசென்று வைத்தியசாலைகளின்கணக்குகள், மருந்துச்சாமான்கள், உணவு முறைகள் என்பவற்றை பரீட்சித்துப் பார்த்து அறிக்கை வெளியிடவேண்டியவராவர். இப்போது இவ்வேலைகளை இடைக்கிடைசெய்வோர் கணக்குப் பரிசோதிக்கும் கந்தோரிலுள்ள (Oudit Office) உத்தியோகஸ்தரே. இதற்கென உத்தியோகஸ்தர் நியமிக்கப்படின் அவர்கள் இவ்வேலையை மிகவும் திறமையாகப் பார்க்கக்கூடுமென்றும் வைத்தியசாலைகளில் ஊழல்கள் ஏற்படாதென்றும் கூறபடுகின்றது.

### அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் மயிலிட்டிதெற்கு வே. தம்பிப்பிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படிசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| நம்பர் | ௵ | ௴ | உ | ரூ. | சத. | பெயர் | ஊர் | விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6045 | 1934 | 7 | 10 | 10 | 00 | வல்லிபுரம் கந்தையா | கட்டுவன் | பொன்சிறுத்தனித்தாலி 1 |
| 6077 | 1934 | 7 | 18 | 30 | 00 | சின்னத்தம்பி செல்லத்துரை | மயிலிட்டி, | பொன் சிறுபிள்ளைக்காப்பு சோடி 1 |
| 6092 | 1934 | 7 | 19 | 8 | 00 | சின்னட்டியர் சின்னாச்சி | மயிலிட்டி | பொன் நாட்டுக்கடுக்கன் சோடி 1 |
| 6106 | 1934 | 7 | 22 | 7 | 00 | இலகுப்பிள்ளை நீலகண்டன் | வயாவிளான் | பொன் சுரை இகல் தோடு சோடி 1 |
| 6236 | 1934 | 8 | 20 | 10 | 00 | பூதகுட்டி ஆறுப்பிள்ளை | மயிலிட்டி | பொன் சுரை இ கல் தோடு சோடி 1 |
| 6420 | 1934 | 9 | 24 | 21 | 00 | சின்னத்தம்பி அன்னப்பிள்ளை | வயாவியான் | பொன் சிறுபிள்ளைப் பூரானட்டியல் ம. கல் பதக்கம் 1 |
| 6471 | 1934 | 10 | 2 | 10 | 00 | சின்னத்தம்பி சுப்பையா | வறுத்தலை | பொ.கைவிரல்மோ.1 |
| 6494 | 1934 | 10 | 6 | 16 | 00 | பூதக்குட்டி ஆறுப்பிள்ளை | மயிலிட்டி | பொன் சிறுபிள்ளைகைகாப்பு சோடி 1 |
| 6502 | 1934 | 10 | 8 | 10 | 00 | முருகன் நீலன் | வயாவிளான் | பொன் அச்சரக்கூடு 1 |
| 6584 | 1934 | 10 | 19 | 10 | 00 | சின்னத்தம்பி இளையபிள்ளை | மயிலிட்டிதெற்கு | வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 6683 | 1934 | 11 | 3 | 3 | 00 | கந்தன் கதிரன் | மயிலிட்டி | பொன் சிமிக்கி வாளி சோடி 1 |
| 6719 | 1934 | 11 | 10 | 10 | 00 | மிஞயர் செல்லமுத்து | கட்டுவன் | பொன் சுரையில்லாத இ. கல் தோடு சோடி 1 |
| 6731 | 1934 | 11 | 10 | 40 | 00 | ஆறன் சின்னத்தம்பி | வயாவிளான் | பொன் இ. கல்தோடு சோடி 3 பொன் கொத்துத்தோடு சோடி 1 பொன் இ. கல் மோதிரம் 1 |
| 6737 | 1934 | 11 | 12 | 6 | 00 | கந்தன் இளையவன் | மயிலிட்டி | இள. பொன் சங்குகள் உட்பட இரண்டுநூல்தட்டு மணிகோர்வை 1 |
| 6801 | 1934 | 11 | 24 | 16 | 00 | பளனி செல்லையா | மயி.தெற்கு | பொ. இ கல் தோ.சோ.1 |
| 6824 | 1934 | 11 | 28 | 9 | 00 | சரவணை கந்தப்பிள்ளை | சவனடி | பொ. இ.கல் தோ.சோ.1 |
| 6838 | 1934 | 12 | 1 | 11 | 53 | சின்னத்தம்பி வீரகத்தி | கட்டுவன் | பொ. சிறு அச்சரகூ. 2 |
| 6860 | 1934 | 12 | 4 | 8 | 00 | வல்லிபுரம் கந்தையா | வயாவிள்ளான் | இள. பொன் நாட்டுக்கடுக்கன் சோடி 1 பொன் ஒற்றைக்கல்தோடு சோடி 1 |
| 6879 | 1934 | 12 | 6 | 77 | 00 | பொன்னப்பலம் சுப்பையா | வயாவிளான் | பொன் குண்டுச் சங்கிலி அச்சரக்கூடு 1 இள. பொன் நாட்டுக்கடுக்கன் சோடி 1. |
| 6886 | 1934 | 12 | 7 | 5 | 70 | ஞானசேகரம் கந்தையா | புத்தூர் | பொ.இ. கல்தோ. சோ.1 |
| 6897 | 1934 | 12 | 10 | 10 | 00 | ஆழ்வான் கதிரன் | தெல்லிப்பளைகிழக்கு | பொ. அச்சரகூடு1 |

1936-ம் ஆண்டு மார்ச்சு ௴ 28உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் எடுபட்ட நகை நீங்கலாக மிகுதி மேற்படியாருடைய வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ந. பூதப்பிள்ளை, உடையார், மயிலிட்டி.

(94) 8-3-36—3

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 Chunnakam, Jaffna, 15th March 1936, Sunday. No. 35

அகில இலங்கை

## ஆதாய சமுதாயம்.

மாதமொன்றுக்கு ரூபாய் 2 வீதம் 100 மாசங்களுக்குச் செலுத்தி ரூபாய் 275 பெறமுன் வாருங்கள்,

கமம், வியாபாரம் ஆதிய வற்றுக்கு முதல்பெற விரும்பினல் மேற்படி சமுதாயத்தில் வந்து ஏலவே சேர்ந்து கொள்ளுங்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க எமது சமுதாயத்தை யாதரியுங்கள்.

எம் தேசப்பணத்தை எம் தேச சமுதாயங்களில் செலுத்தி செல்வப்பேற்றை யடைய முன்வாருங்கள். வருடமொன்றுக்கு ரூபாய் 24 செலுத்தி அங்கத்துவம் பெறுவோருக்கு இலகுவான முறையில் இறுக்கக் கூடிய கடன்கள் குறைந்த வட்டிக்குக் கொடுக்கின்றேம்.

உயர்ந்த வட்டி விகிதத்தில் தவணைவைப்பு, நடைவைப்பு, சம்பாத்திய வைப்புகளுக்கு பணம் ஏற்றுக் கொள்வோம். அங்கத்துவம் பெற விரைந்து வாருங்கள். தாமதமடைந்து மனம் வருந்தாதீர்கள். வேண்டிய விபரங்கட்கு கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதி அறிக.

*Manager*

**LANKA BENEFIT CO.,**

Vannarponnai

(175) 5-8-34.

திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 5,00,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி

**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்,**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்

**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்

ஆதலால்

முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்

**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்,**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறேம்

உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ.சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34—11-35.

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

**மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்**

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.


கொழும்பு - வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம்
நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும்
யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும்
விசேடமாக மதிப்புப்பெறும்
பவுண்மார்க் ஓடுகள்
இவைகளே.



எப்பொழுதும் தனி
மதிப்புடன் அழகு மிளிரும்
உன்னத மாளிகைகளில்
வேயப்பெற்றவை.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பெலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு }
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

SRI LANKA BOOK DEPOT

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்

பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும்,

வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனு முதலியனவும், கோப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை,
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய"த்திலிருக்கும் நா பொன்னையா என்பவரால், சுன்னகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம் வருடம் மார்ச் மீ 15-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.